THE SUDAROLI
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

விலை : ரூபா 30 பக்கங்கள் 28 வார மலர் ஜூன் 17 - ஜூன் 23 , 2012
June 17 - June 23, 2012



மனங்களைத் திறவுங்கள்



இரு தடவைகள் கசப்பான அனுபவங்கள்

கதக் டான்ஸ்



# ஜனநாயகப் போர்வையில் இராணுவ சர்வாதிகாரம்




பின்வரும் நாடுகளுக்கான விஷேட IDD கட்டணங்கள்

உறவுகளை ஒன்றிணைக்கும் MOBITEL இன் கண்ணியமான பந்தம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ரூ. 1.80 | ரூ. 1.90 | ரூ. 1.80 | ரூ. 1.80 | *ரூ. 1.80 | *ரூ. 2.50 |

இந்தியாவிற்கான விஷேட ரோமிங் கட்டணம்

*நிலையான இணைப்புகளிற்கு மட்டும். நிபந்தனைகள் உண்டு

Sri Lanka Telecom Mobitel
We Care. Always.


வாடிக்கையாளர் சேவை இலக்கம்: 1717

TRIAD 25/09


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாஜ்மகாலின் இனிப்பும் கசப்பும்





தாஜ்மகால்... உலகக் காதலர்கள் கொண்டாடும் உன்னத அடையாளம். தூய்மையான காதலுக்கு உதாரணமாய் கத்துக்குட்டிக் காதலர்களாலும் சுட்டிக் காட்டப்படும் விஷயம்.

ஆனால் தாஜ்மகாலுக்குப் பின்னால் உள்ள கசப்பான நிஜங்களை எத்தனை பேர் அறிவார்கள்?

பேரரசர் ஷாஜகானின் ஏழு மனைவியரில் மூன்றாவது மனைவி மும்தாஜ் (மும்தாஜ் மகாலின் சுருக்கம்தான் தாஜ்மகால்).

ஷாஜகானின் மனைவியான பின், பிள்ளை பெறும் எந்திரமாக மாறிப் போன மும்தாஜ், தனது 14 ஆவது குழந்தையைப் பெற்றெடுத்தபோது பிரசவ வேதனையில் துடித்து இறந்தார் என்றும் சொல்வதுண்டு. 'காதல் மனைவி' மும்தாஜ் இறந்தவுடனே அவரது தங்கையை மனைவியாக்கிக் கொண்டார் ஷாஜகான்.
அப்படிப்பட்டவர் கட்டியதுதான் இந்த 'காதல் சின்னம்'.

இப்படி பல்வேறு வரலாற்றுச் சின்னங்கள், கோட்டைகளுக்குப் பின்னாலும் பல உண்மைகள் புதைந்துகிடக்கின்றன. பழகிய பாட்டையே பாடிக்கொண்டிருக்காமல், அப்படி மறைந்துகிடக்கும் உண்மைகளை வெளிக்கொணர்வதில் இன்றைய ஆய்வாளர்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

உதாரணமாக, டெல்லியின் புகழ் பெற்ற செங்கோட்டைக்கும், யமுனை நதிக்கும் இடையே ஒரு ரகசிய சுரங்கப் பாதையை மொகலாய அரசர்கள் அமைத்திருக்கிறார்கள். அது ஒரு காலத்தில் ஆக்ராவுக்கு குறுக்குவழிப் பாதையாக இருந்திருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

ஆக்ரா கோட்டையை அக்பரும், அவருக்குப் பின் வந்தவர்களும் கட்டினார்கள். ஆக்ரா கோட்டையை நிறைவாகக் கட்டி முடித்த ஜகாங்கீரும், அவரது மனைவியான நூர்ஜகானும் கலையில் தீவிர தாகம் கொண்டவர்களாக இருந்திருக்கின்றனர்.

கோட்டையின் உள்அலங்காரத்தில் நூர்ஜகானின் நேரடிப் பங்களிப்பு உண்டு. ஆக்ரா கோட்டையைச் சுற்றி அழகான தோட்டங்களும் நூர்ஜகானின் மேற்பார்வையில்தான் உருவாயின. ஆக்ரா கோட்டைச் சுவர்களை தங்க இழைகளாலும், படிகங்களாலும், முத்துக்களாலும் அலங்கரிப்பதில் அலாதி மகிழ்ச்சி கண்டார் நூர்ஜகான்.

ஜகாங்கீரின் மகனும், தாஜ்மகால் நாயகருமான ஷாஜகான், தனது கடைசிக் காலம் வரை ஆக்ரா கோட்டையிலேயே வசித்தார். இறுதிக் கணத்தில் தனிமையில் வாடி மடிந்தார் ஷாஜகான். ஆக்ரா கோட்டை பல்கனியில் அமர்ந்தபடி தாஜ்மகால் கட்டுமானப் பணியை ஷாஜகான் கவனிப்பது வழக்கம் என்றும் கூறப்படுகிறது.

இந்திய தொல்லியல் ஆய்வுத் துறையைச் சேர்ந்த தொல்லியல் நிபுணரான கே.கே. முகம்மது, அக்பர் குறித்து சில சுவாரசியமான தகவல்களைக் கூறுகிறார்...

'அக்பர் கட்டிய கோட்டைகள் அனைத்தும் மூன்று பெரிய ஹால்களை கொண்டிருந்தன. அவை திவானி காஸ் மற்றும் இபதத் கானா. மூன்றாவதில் அக்பர் பல்வேறு சமயங்களைச் சார்ந்தவர்களுடன் அமர்ந்து, நாட்டுப் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பார்.

அங்கு அக்பருடன் விவாதத்தில் ஈடுபட்டவர்கள் அவரை மதம் மாறும்படி கேட்கும் அளவுக்குச் சுதந்திரம் இருந்தது. இத்தாலியைச் சேர்ந்த கிறிஸ்தவ மத போதகரான ரொடால்போ அக்குவிவா, அக்பரை கிறிஸ்தவ மதத்துக்கு மாறும்படி வேண்டுகோள் விடுக்க, அதற்கு அக்பரும் ஒப்புக்கொண்டுவிட்டார். ஆனால் கடைசியில் அதன்படி நடக்கவில்லை. தனது ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளைத் துறக்க வேண்டுமே என்ற அக்பரின் தடுமாற்றம்தான் காரணம் என்கிறார் முகம்மது.

அக்பர் நறுமணத் திரவியங்களை மிகவும் விரும்பியிருக்கிறார். அவர் கட்டிய கோட்டைகளில் எல்லாம் வாசனைத் திரவியங்களைச் சேமிப்பதற்கு என்றே குஷ்பு கானா என்ற கிட்டங்கி அமைக்கப்பட்டிருக்கிறது.

அக்பர் கட்டிய பதேபூர் சிக்ரி உட்பட கோட்டைகள் பலவும் இன்று அழிவை நோக்கிய நிலையில் இருக்கின்றன என்று வருத்தப்படுகிறார், பாரம்பரிய பாதுகாப்பு கட்டிடக் கலை நிபுணரான ஷிகா ஜெயின். யாருமற்ற நினைவுச் சின்னங்களைக் காப்பது எளிது, ஆனால் ஆட்கள் வசிக்கும் கோட்டைகளைப் பராமரிப்பது கடினம் என்கிறார் இவர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு தடவையும் கசப்பான அனுபவங்களே!




**புலம்பெயர் தமிழர்கள் ஒருமித்த குரலில் "போர்க்குற்றவாளியான மகிந்த ராஜபக்ஷவே பிரித்தானியாவை விட்டு உடன் வெளியேறு" என்ற மகிந்தவுக்கு எதிரான பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு தொடரான எதிர்ப்பு போராட்டங்களை மேற்கொண்டதால் லண்டன் மாநகரம் பெரும் பரபரப்பான சூழ்நிலையில் காணப்பட்டது. அலையெனத் திரண்ட தமிழ் மக்களின் ஆக்ரோஷமான எதிர்ப்புப் போராட்டங்கள் வைரவிழாவின் நிகழ்ச்சி நிரலையே மாற்றியமைக்கும் அளவிற்கு தீவிரம் பெற்றிருந்தது.**

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் புலம்பெயர் தமிழர்களின் எதிர்ப்பலைகளால் மீண்டும் ஒரு தடவை பிருத்தானியாவில் மண்ணைக் கவ்வவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. கடந்த 2010 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் லண்டனிலுள்ள ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் விசேட உரை நிகழ்த்துவதற்காக இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷ லண்டன் சென்றிருந்தார். மகிந்த ராஜபக்ஷ லண்டன் விமான நிலையத்தை சென்றடைந்த வேளையில் அங்கு அலையெனத் திரண்டிருந்த புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ்மக்கள் அவரின் லண்டன் வருகையை எதிர்த்து பெருமெடுப்பிலான ஆர்ப்பாட்டங்களை நடாத்தியதோடு மகிந்த ராஜபக்ஷ அவர்களை லண்டன் மாநகருக்குள் பிரவேசிக்கவிடாது விமான நிலையத்தையும் முற்றுகையிட்டிருந்தனர். பின்னர் பொலிசாரின் வழித்துணையுடனும் அவர்களின் தீவிர பாதுகாப்புடனும் அங்கிருந்து வெளியேறிய மகிந்த ராஜபக்ஷ அவர்கள் பிரத்தியேகமான விடுதி ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருந்தார். தொடர்ந்தும் பிரித்தானியாவில் வாழ்கின்ற தமிழர்கள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டங்களால் திட்டமிடப்பட்டிருந்த மகிந்த ராஜபக்ஷவின் ஒக்ஸ்போட் பல்கலைக்கழக விசேட உரை ரத்துச் செய்யப்பட்டது. இவ்வாறான நிலையில் இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் அடுத்த நாள் இரவோடு இரவாக இலங்கையை வந்தடைந்தார். அவமானத்தால் ஏற்பட்ட தாக்கத்திலிருந்து மீள்வதற்கு நீண்ட நாட்கள் எடுத்தன என்பதை அதன் பின்னரான அவரது செயற்பாடுகள் ஊடாக அறியமுடிந்தது.

இந்தச் சம்பவம் நடந்து பதினாறு மாதங்கள் கடந்த நிலையில் பிரித்தானியாவின் மகாராணியார் முடிசூடிய அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டிய வைரவிழா அண்மையில் லண்டன் மாநகரில் இடம்பெற்றிருந்தது. இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்த வைரவிழாவில் இலங்கை அதிபர் கலந்து கொள்ளவிருக்கின்ற செய்தியையும் அவர் அந்த நிகழ்வில் உரையாற்றவுள்ள செய்தியையும் கேள்வியுற்ற புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்கள் மீண்டும் கொதித்தெழுந்தனர். இந்தத் தடவையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் லண்டன் விமான நிலையத்தை வந்தடையும் சமநேரத்தில் விமான நிலையத்தை முற்றுகையிட்டு பாரியளவிலான ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடாத்துவதற்கு திட்டமிட்டிருந்தனர். புலம்பெயர் தமிழர்களின் இந்த நடவடிக்கைகளையெல்லாம் நன்கறிந்த நிலையிலும் கடந்த தடவை லண்டன் பயணத்தின் போது ஏற்பட்ட அவமானங்களையும் படிப்பினையாகக் கொண்டு இந்தத் தடவை அவர் தனது பாரியார் சிரந்தி ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்ட முப்பத்தைந்து பேரைக்கொண்ட பெரிய பட்டாளத்துடன் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் யூன் மாதம் 04 ஆம் நாள் விசேட விமானம் மூலமாக தரையிறங்கினார் மகிந்த ராஜபக்ஷ.

இந்த நிலையில் ஏற்கனவே பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ்லாந்து போன்ற நாடுகளிலிருந்து பிரித்தானியாவிற்கு படையெடுத்திருந்த தமிழர்கள் பிரித்தானியா வாழ் தமிழர்களுடன் இணைந்து ஹீத்ரோ விமான நிலையத்தை முற்றுகையிட்டு கைகளில் புலிக்கொடிகளை ஏந்தியவாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பி பாரியளவிலான ஆர்ப்பாட்டங்களை நடாத்தினர். பிரித்தானியக் காவல் துறையினராலும் கட்டுப்படுத்த முடியாதளவிற்கு அவர்களின் போராட்டங்கள் வலுப்பெற்றிருந்தன. பல்லாயிரக் கணக்கான புலம்பெயர்ந்த தமிழர்கள் அணிதிரண்டு முன்னெடுத்த இந்தப் போராட்டங்களால் மகிந்த ராஜபக்ஷவால் விமான நிலையத்தைத் தாண்டி லண்டன் மாநகருக்குள் பிரவேசிக்க முடியாமல் போனது. இதனால் குறிப்பிட்ட நேரத்திற்கு விமான நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து பிரிட்டன் காவல்த் துறையினரின் கடும் பாதுகாப்புடன் விமான நிலையத்தை விட்டு வேறுபாதையால் நழுவிச் சென்றார் மகிந்தர். அவ்வாறு சென்ற மகிந்த ராஜபக்ஷ லண்டன் மாநகரிலுள்ள ஹில்டன் விடுதியில் தங்கியிருந்த வேளையில் அந்த இடத்தையும் ஏதோவொரு வகையில் மோப்பம் பிடித்து அறிந்து கொண்ட தமிழர்கள் ஹில்டன் விடுதியையும் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர். நிலைமை மோசமான கட்டத்தை அடைவதை உணர்ந்து கொண்ட மகிந்த ராஜபக்ஷ அவர்கள் ஹில்டன் விடுதியையும் காலி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

புலம்பெயர் தமிழர்கள் ஒருமித்த குரலில் "போர்க்குற்றவாளியான மகிந்த ராஜபக்ஷவே பிரித்தானியாவை விட்டு உடன் வெளியேறு" என்று மகிந்தவுக்கு எதிராக பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு தொடரான எதிர்ப்பு போராட்டங்களை மேற்கொண்டதால் லண்டன் மாநகரம் பெரும் பரபரப்பான சூழ்நிலையில் காணப்பட்டது. அலையெனத் திரண்ட தமிழ் மக்களின் ஆக்ரோஷமான எதிர்ப்புப் போராட்டங்கள் குறித்த வைரவிழாவின் நிகழ்ச்சி நிரலையே மாற்றியமைக்கும் அளவிற்கு தீவிரம் பெற்றிருந்தது. இதனால் நிகழ்ச்சி நிரலின்படி யூன்மாதம் 06 ஆம் நாள் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் நிகழ்த்தவிருந்த உரை ரத்துச் செய்யப்பட்டது. அத்துடன் மகிந்த கலந்து கொள்ளவிருந்த சில நிகழ்வுகளும் ரத்துச் செய்யப்பட்டன. இந்த ஆர்ப்பாட்டங்களில் மற்றுமொரு விடயம் என்னவென்றால் பிரித்தானியாவைச் சேர்ந்த வெள்ளையினத்தவர்களும் புலம்பெயர் தமிழர்களின் போராட்டங்களுக்கு ஆதரவான துண்டுப்பிரசுரங்களை மக்களுக்கு வழங்கியதோடு அந்தப் போராட்டங்களிலும் பங்கெடுத்திருந்ததுவும் தான். இவ்வாறாக இலங்கையில் நடைபெற்று வந்த ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ள இந்த மூன்றாண்டுகளில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் இரண்டாவது தடவையாகவும் பிரித்தானியாவுக்குச் சென்று அங்கு தமிழ்மக்களின் எதிர்ப்பைச் சந்தித்ததுவும் அவர் பிரித்தானியாவில் நிகழ்த்தவிருந்த உரை இரண்டாவது தடவையாகவும் இரத்துச் செய்யப்பட்டதுவும் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு பிரித்தானியாவில் தலைகாட்ட முடியாதளவிற்கு அவமானத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை.

மேலும், மகிந்த ராஜபக்ஷவின் உருவத்திலான கொடும்பாவி முதலில் தூக்கில் தொங்கவிடப்பட்டு பின்னர் கீழே இறக்கி நடுவீதிவழியாக இழுத்து வரப்பட்டு அதன்பின்னர் மகிந்தவின் கொடும்பாவிக்கு பெற்றோல் ஊற்றி தீ வைத்து எரியூட்டப்பட்டது. புலம்பெயர்ந்த தமிழ்மக்களால் முன்னெடுக்கப்பட்ட இத்தகைய எதிர்ப்பு போராட்டங்கள் கட்டுக்கடங்காமல் போனதாலும் தான் நிகழ்த்தவிருந்த உரை இரத்துச் செய்யப்பட்டதாலும் மகிந்த ராஜபக்ஷ மிகவும் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.


பிரித்தானிய மகாராணியார் முடிசூடிய அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டிய வைரவிழா நிகழ்வின் ஒரு அங்கமாக பிரித்தானிய மகாராணியார் எலிசபெத் அவர்களுக்கு பொதுநலவாய நாடுகள் சபையின் செயலாளர் அவர்களால் யூன் மாதம், 06 ஆம் நாள் மதியபோசன விருந்துபசாரம் வழங்குவதற்கு ஏற்பாடாகியிருந்தது. குறித்த விருந்துபசார நிகழ்வு நடைபெறவிருந்த மல்பரோ விடுதியின் முன்பாக அன்றைய தினம் காலைவேளையிலேயே ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் அணிதிரண்டு எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தினர். மதியப் பொழுதாகிய வேளையில் மேலும் பெரும் எண்ணிக்கையிலான தமிழர்களும் அவர்களுடன் இணைந்து கொண்டு மகிந்தவின் வருகையை எதிர்த்து கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். அப்போது மதியபோசன விருந்தில் பங்கேற்பதற்காக பிரித்தானியப் பிரதமர் டேவிற் கமரூன் உள்ளிட்ட எழுபதிற்கும் மேற்பட்ட வெளிநாட்டுத் தலைவர்கள் மல்பரோ விடுதியை அண்மித்ததும் "இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போர்க்குற்றவாளி" என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் உரக்கக் கோஷமிட்டனர். இந்த விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளச் சென்ற மகிந்த ராஜபக்ஷ ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழர்களுக்கு தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளாது இரகசியமாகவே விருந்துபசார விடுதியை சென்றடைந்ததாக அறியமுடிகிறது. அதாவது ஒவ்வொரு நாட்டுத் தலைவர்களும் தாங்கள் பயணிக்கும் வாகனங்களில் தங்களது நாட்டின் தேசியக் கொடிகளை பறக்கவிடுவதுதான் வழக்கமாகும். இந்த நிலையில் பிரித்தானிய மகாராணியாருடன் மல்பரோ விடுதியில் விருந்துண்ணச் சென்ற மகிந்தர் தனது வாகனத்தில் பறக்கவிடப்பட்டிருந்த இலங்கையின் தேசியக் கொடியான சிங்கக் கொடியை அகற்றிவிட்டுத் தான் அவரது வாகனம் பிரதான நுழைவாயில் வழியாக மல்பரோ விடுதிக்குள் பிரவேசித்தது. மாறாக அவரது வாகனம் சிங்கக் கொடியுடன் விருந்துபசார விடுதிக்குச் சென்றிருந்தால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்கள் அவரது வாகனத்தை வழிமறித்து விடுதிக்குள் செல்ல விடாது தடுத்திருந்தாலும் அது ஆச்சரியப்பட வேண்டிய விடயம் அல்ல. அத்துடன் அவர் பிரித்தானியாவில் தங்கியிருந்தவேளை அங்கு உயர்மட்டச் சந்திப்புக்கள் எதனையும் அவர் நடத்தவுமில்லை. அதற்கான புறச்சூழல் அவருக்கு சாதகமாக அமையவுமில்லை. மகாராணியாரின் மதியபோசன விருந்துபசாரத்தின் போது பிரித்தானியப் பிரதமருடன் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் ஒருசில நிமிடங்கள் மட்டும் கலந்துரையாடுவதற்கு எதேச்சையாக வாய்ப்புக் கிட்டியது குறிப்பிடத்தக்கதாகும்.

எது எவ்வாறாயிருப்பினும் அண்மையில் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் மேற்கொண்ட பிரித்தானியப் பயணம் அவருக்குக் கசப்பான அனுபவங்களையே ஏற்படுத்தியிருக்கும் என்பதை எவரும் மறுதலிப்பதற்கில்லை.


தமிழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனங்களைத் திறவுங்கள்




நெடுந்தீவு மகேஷ்



அது ஒரு சிறிய கிராமத்தின் மத்தியில் அமைந்துள்ள புகையிரத நிலையம். அந்த புகையிரத மேடையின் அருகில் தரித்தும் அந்தப் புகையிரத மேடையைக் கடந்தும் புகையிரதங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

அவ்வாறு அப்பொழுது அந்த மேடையின் அருகில் தரித்து நின்ற புகையிரதத்தில் பயணிகள் சிலர் ஏறினார்கள். சிலர் புகையிரதத்திலிருந்து இறங்கினார்கள். சில விநாடிகளில் புகையிரதம் புறப்பட்டுப் போய் விட்டது. மேடையில் நின்று கொண்டிருந்த கந்தையா அந்தப் புகையிரதத்தில் ஏறவில்லை. சில விநாடிகள் பாதையைப் பார்த்தபடி தாமதித்த அவர் அருகில் நின்ற ஸ்ரேசன் மாஸ்ரரின் பக்கம் திரும்பி "அடுத்த ரெயின் எப்பொழுது வரும்" எனக் கேட்டார்.

"இன்னும் சில விநாடிகளில் வரும்" என்று கூறியவர் தனது சிறிய அலுவலக அறையை நோக்கி நடந்தார்.

அப்பொழுது விரைவாக மேடையின் அருகாக ஓடிக் கொண்டிருந்த புகையிரதம் அங்கு தரிக்காமலேயே சென்றுவிட்டது. கந்தையா அதில் ஏற இயலாதுதானே.

ஆனால் அதனைத் தொடர்ந்து வந்த புகையிரதம் மேடையின் அருகில் தரித்து நின்றது. கந்தையா ஏறவில்லை. அங்கு நின்ற ஒரு சிலர் ஏறிப் போய் விட்டார்கள். அங்கே நின்றிருந்த கந்தையா மீண்டும் அருகில் அறையிலிருந்த ஸ்ரேசன் மாஸ்ரரை அணுகி அடுத்த ரெயின் எப்பொழுது வரும் எனக் கேட்டார். "அது இன்னும் ஐந்து நிமிடத்தில் வரும்" என்றார் அவர். உடனேயே மிக விரைவாக வந்த ஒரு புகையிரதம் மேடையின் அருகில் தரித்து நிற்பதைக் கண்டார். ஆனால் கந்தையா அதில் ஏறவில்லை. புகையிரதம் போய்விட்டது. மீண்டும் கந்தையா ஸ்ரேசன் மாஸ்ரரை நோக்கி நடந்தார். "அடுத்த ரெயின் எப்பொழுது வரும்" என விசாரித்தார். அது இன்னும் ஐந்து நிமிடங்களில் வந்துவிடும் என்றார் அவர்.

மீண்டும் விரைந்து வந்த புகையிரதம் ஒன்று அங்கே தரிக்காமல் கந்தையா நின்ற மேடையைக் கடந்து சென்றது. எதுவும் செய்ய இயலாமல் அங்கேயே நின்று நிலைமைகளையே அவதானித்த கந்தையாவை ஸ்ரேசன் மாஸ்ரர் பரிதாபத்தோடு பார்த்தார்.

தொடர்ந்து மேடைக்கு வரும் ரெயின் ஒன்றில் கந்தையா ஏறிவிடுவார் என்ற நம்பிக்கையோடு அவரையே பார்த்துக் கொண்டு நின்ற ஸ்ரேசன் மாஸ்ரர் அவரது செயலால் ஏமாந்து போனார். கந்தையா மேடையில் தரித்த புகையிரதம் எதிலும் ஏறவில்லை. இப்பொழுது ஸ்ரேசன் மாஸ்ரரைத் திரும்பிப் பார்த்த கந்தையா அடுத்த ரெயின் எப்பொழுது வரும் என விசாரித்தார். அவரோ இன்னும் ஐந்து நிமிடத்தில் வந்துவிடும் என்றார்.

ஸ்ரேசன் மாஸ்ரர் கூறிய ஐந்து நிமிடத்தில் அந்த ரெயினும் வந்தது. மேடையின் அருகே தரித்தது. ஆனால் கந்தையா எந்தவித அவசரமும் காட்டாமல் நின்றிருந்தார். சிறிது நேரத்திலேயே அங்கிருந்து புறப்பட்ட புகையிரதத்தையே கந்தையா பார்த்துக் கொண்டு நின்றார். அதுபோய் விட்டது.

ஸ்ரேசன் மாஸ்ரருக்கோ அவரது செய்கை ஆச்சரியத்தைத் தந்தது. கந்தையாவின் அருகிலேயே வந்தார். அவரைக் கண்ட கந்தையா "சேர் அடுத்த ரெயின் எப்ப வரும்" என்று கேட்டார். "இன்னும் ஐந்து நிமிடங்களுக்குள் வந்துவிடும். ஆனால் நீர் எங்கே போவதற்காக இதிலே காத்துக் கிடக்கிறீர்" என்று கேட்டார் அவர்.

கந்தையாவோ எந்தவித உணர்வுகளையும் வெளிக்காட்டாமல் "இந்த ரெயில் பாதையைக் கடந்து அடுத்த பக்கத்துக்கு மேடைக்குப் போக வேண்டும்" என்றார். அதைக் கேட்ட ஸ்ரேசன் மாஸ்ரர், 'அடுத்த பக்கத்துக்குப் போக வேண்டுமா? அதற்கு அதோ மேம்பாலம் ஒன்றுண்டு. அதன் மேல் ஏறிப் போகலாமே' என்றார். அதைக் கேட்ட கந்தையா வெட்கத்தோடு மேம்பாலத்தின் பக்கம் திரும்பிப் பார்த்தார்.

கந்தையாவின் அறியாமையை எண்ணி ஸ்ரேசன் மாஸ்ரர் புன்னகைத்தாலும் ஒருவரின் செய்கையின் மூலம் அவரின் எண்ணங்களையும் விருப்பங்களையும் தெளிவாக அறிந்து கொள்வது இயலாததாகும். எதனையும் விசாரித்துத் தெளிந்து கொள்வதுதான் சிறந்தது.

அதேபோல் நாம் செய்யப்போகும் வேலைகளைத் தடைகளின்றியும் சிறப்பாகவும் செய்வதற்கு எமது தேவைகளைப் பெற்றுக் கொள்ள அதனுடன் தொடர்புடையோருடன் கலந்துரையாடுதலும் கருத்தறிதலும் அவசியமாகும். ஆனால் நாம் எமது தேவைகளுக்கு அலையும் அதேவேளையில் மற்றவர்களிடம் அது பற்றிச் சொல்லுதலும் மனந்திறந்து பேசுதலும் இல்லையெனில் வேலைகள் சிறப்படைவதில்லை. எனவே மனந்திறந்து பேசுங்கள். உங்கள் தேவைகளை வெற்றி கொள்ளுங்கள்.

* * *

# பிரமிள் - நவீன தமிழ் இலக்கியத்தின் மறக்கவியலாத ஆளுமை!

மைதிலி தேவராஜா



*சிறகிலிருந்து பிரிந்த*
*இறகு ஒன்று*
*காற்றின்*
*தீராத பக்கங்களில்*
*ஒரு பறவையின் வாழ்க்கை*
*எழுதிச் செல்கிறது.*

பிரமிளின் மறக்கவியலாத கவிதைகளில் இதுவும் ஒன்று. தமிழில் கவிதை உட்பட இலக்கியம் என்பதே மறக்கப்பட்டுவிடுமோ என்கிற ஓர் அச்சம் தோன்றும் காலம் இது. இணையமும் தொலைக்காட்சியும் வேறு சில பொழுதுபோக்குகளும் தமது இளைஞர்களை ஆக்கிரமித்து விழுங்கி வரும் நிலையில் இவ்வாறான அச்சம் தோன்றுவது தவிர்க்க முடியாததாகின்றது.

ஒரு காலகட்டத்தில் கவிதைகள் இலவச உள்ளங்களை ஆக்கிரமித்திருந்தன. கவிதை எழுதுபவர்களும் அதன் வாசகர்களும் அதிகமாகவே காணப்பட்டனர் என்பதற்கு சான்றுகளை உதாரணமாகக் கொள்ளலாம். இன்று அப்படி இல்லை.

இவ்வாறானதொரு 'வறுமை'மிக்க காலகட்டத்தில் ஏனோ எங்கள் மனங்களின் இலக்கிய ஆளுமையான பிரமிள் நினைவில் வருகின்றார்.

பிரமிள் (ஏப்ரல் 20, 1939 - ஜனவரி 6, 1997) என்ற தருமு சிவராம். இலங்கையில் பிறந்தவர். தமிழகத்தின் பாரதி, புதுமைப்பித்தனுக்குப் பிறகு தோன்றிய ஒரு இலக்கிய மேதை. தமிழின் முதன்மையான கவிஞர், விமர்சகர், சிறுகதையாசிரியர் மற்றும், புதுக்கவிதை முன்னோடிகளுள் முக்கியமான ஒருவராக இவர் கருதப்படுகிறார். பானுசந்திரன், அரூப் சிவராம், பிரமிள் போன்ற பல புனைபெயர்களில் எழுதினார்.

தமிழின் வசன கவிதை மற்றும் பெயரில் தொடங்கி, புதுக்கவிதை மற்றும் பெயரில் நடந்த ஓர் இயக்கத்தில் 'எழுத்து' பத்திரிகையின் மூலம் ஆரம்பித்து 1997 வரை தீவிரமாகச் செயல்பட்டவர் பிரமிள். புதுக்கவிதையில் படிமங்களை அதிகமாக உபயோகித்த தொடக்கவராக அறியப்பட்டு 'படிமக் கவிஞர்' என இவர் அழைக்கப்பட்டார். தமிழ் புதுக்கவிதையில் புதிய பாடுபொருள்களைச் சேர்த்துச் செயல்முறையில் புதுமையைச் செய்து இயற்பியல், வானியல் போன்ற அறிவுத் துறைகளின் விவாதங்களை நவீன இலக்கியத்திற்குள் கொண்டுவந்து இலக்கியத்திற்கு முன்னோடியாக நாம் சேர்த்துக் கொண்ட 'நவீனம்' என்றும் சொல்லுக்கு நியாயம் செய்தவர் பிரமிள். தமிழ் புதுக் கவிதையின் முன்னோடியாகத் திகழ்கின்றது பிரமிளின் ஆளுமை.

## பிரமிளின் சில கவிதைகள்

**வண்ணத்துப் பூச்சியும் கடலும்**

சமுத்திரக் கரையின்
பூந்தோட்ட மலர்களிலே
தேனுண்ண அலைந்தது ஒரு
வண்ணத்துப் பூச்சி
வேளை ஏறி
பிறகின் திசைபிரி
காற்றும் புரண்டோட
கரையோர மலர்களை நீத்து
கடலை நோக்கிப் பறந்து
நாளிரவு பாராமல்
ஓயாது அலைகின்ற
எல்லையற்ற பூ ஒன்றில்
ஓய்ந்து அமர்ந்தது
முதல் கணம்
உவர்த்த சமுத்திரம்
தேனாய் இனிக்கிறது.

**உள் முரண்**


சிலைகளின் சொல்லொலிகள்
செவிட்டு மௌனத்தில்
காற்றின் யாத்திரையை
கண் தொடர்ந்தால்
விழியின் நடையை
துருத்தி விழுத்தும்
மௌனங்கள
தீயின் தெளிவினுள்
இமைவிழும் சாம்பல்.

**பார்வை**

நிலவை மழித்தான்
தேவ நாவிதன்.
சிகையாய் முகில்கள்.
வானில் விரிந்தன.
மனிதன் வியந்து.
கவியானான்.
வெயிலை வழியவிட்டான்
வெளிக் கடவுள்.
இரவு பகலுக்கு
நரிரிய பாச்சு.
மனிதன்
இருமையை விசாரித்தான்.
போகப் போக
வியப்பும் விசாரமும்
தரைத் தரை
மீந்தது கண்ணொளி
உறைந்து ஒன்றே.
இன்று சூரிய சந்திரச்
சிற்றலைகள் ஒதுக்கி
புலனப் படர்ப்பை
கால வெளியைக்
கவிந்த நோக்கால் கடந்து
நட்சத்திர மண்டல
காலக்ஸிக் குவியல்
குவாஸர் சிதைவைக்
கண்டான்.
கொஞ்சம் வியப்பு
ஒருகண விசாரம்
மறுகணம் மனிதன்
கண்டதைப் பிடித்து
ஆராய்ந்தான்.
கண்டதைக் கண்டது
கண்ணீர் விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகப் போர்வையில் இராணுவ சர்வாதிகாரம்



**விகாரைகளில் வழிபாடு செய்ய அப்பகுதிகளில் பௌத்த மக்கள் வாழவில்லை என்றால் ஏன் அங்கு அவை அமைக்கப்படுகின்றன என்ற கேள்வி எழுகிறதல்லவா**

அண்மையில் யாழ் - வீரசிங்கம் மண்டபத்தில் சமூக சேவை அமைச்சர், பீலிக்ஸ் பெரேரா கலந்து கொண்ட ஒரு விழாவில் கலந்து கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்கள் இலங்கையின் தேசியக் கொடியை ஏற்ற மறுத்துவிட்டார். இது தொடர்பாக அவர் கருத்து வெளியிடும் போது தமிழ் மக்களை இலங்கை மக்கள் என ஏற்றுக் கொள்ளாத வரையில் தமிழ் மக்கள் இலங்கையின் தேசியக் கொடியை ஏற்றுக் கொள்வதில் அர்த்தம் இல்லை எனத் தெரிவித்துள்ளார். அவர் மேலும், தெற்கில் சிவில் நிர்வாகம் இடம்பெறும் அதே வேளையில் வடக்குக் கிழக்கில் இராணுவ நிர்வாகமே நிலவுகிறது எனவும் மாகாண ஆளுநர்களாக விளங்கும் இராணுவ அதிகாரிகளே எல்லாவற்றையும் தீர்மானிக்கும் சக்திகளாக விளங்குகின்றனர் எனவும் சுட்டிக்காட்டியிருந்தார். அதாவது தென் பகுதியும், வடக்குக் கிழக்கும் இரு தேசங்களைப் போன்று பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுவதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

அவரின் இக்கருத்துத் தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. போன்றவை கொதிப்படைந்துள்ளன. அவர்களுக்கு எப்போதுமே உண்மைகள் கசப்பதுண்டு. ஆனால், தமிழ் மக்களை இலங்கையர்களாக ஏற்க மறுப்பதில் முன்னணிப் பாத்திரம் வகிப்பவர்கள் இவர்கள் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடம் என்பதை மறுப்பது, தொன்மை வாய்ந்த தமிழர்களின் ஆலயங்கள், விகாரைகள் இடித்துக் கட்டப்பட்டவை எனப் பிரசாரம் செய்வது போன்ற இனவாத நச்சுக் கருத்துகள் மூலம் தமிழ் மக்களின் இலங்கையர் என்ற உரிமையை நிராகரித்தவர்கள் இவர்கள் தான்.

எப்படியிருப்பினும் இலங்கைத் தீவில் பாரம்பரியமாக வாழும் ஒரு தனித்துவமான தேசிய இனம் தமிழ் மக்கள் என்ற உண்மை ஏற்றுக் கொள்ளப்படும் வரை தமிழ் மக்கள் இலங்கையின் தேசியக் கொடிக்கு உரிமை கொண்டாட முடியாது என்பதே பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கருத்தாகும்.

அண்மையில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ வடக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடமாகக் கொள்ளமுடியாது எனக் கருத்து வெளியிட்டிருந்தார். அதையடுத்து ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் மேதானந்த எல்லாவல தேரர், இதுவே இந்த நூற்றாண்டின் சிறந்த கருத்து எனவும் பழம்பெருமை வாய்ந்த இந்து ஆலயங்கள் யாவும் விகாரைகளை இடித்துக் கட்டப்பட்டவை எனவும் தெரிவித்திருந்தார்.

அது மட்டுமின்றி, பாதுகாப்புச் செயலர் வடக்குக் கிழக்கில் கடந்த காலச் சம்பவங்களால் பல விகாரைகள் சேதமடைந்து விட்டதாகவும் அவற்றை இராணுவத்தினர் புனரமைப்பதாகவும் இவ்விகாரைகள் அமைக்கப்படுவதை எவராலும் தடுக்க முடியாது எனவும் அதை ஒரு சவாலாக எடுத்து நடைமுறைப்படுத்தப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால் நாமறிந்த வரையில் நயினாதீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் மட்டுமே முன்பு [illegible] விகாரைகள் அமைந்திருந்தன. இவை கூட 1948ம் ஆண்டின் பின்பு சில பௌத்த பிக்குகளால் அரசின் அனுசரணையுடன் நிறுவப்பட்டவையாகும். ஆனால், இன்று படைமுகாம்களிலும், வீதிகளில் அரச மரம் காணும் இடமெங்கும் விகாரைகளும், புத்தர் சிலைகளும் படையினரால் அமைக்கப்படுகின்றன. இவை பௌத்த மக்கள் எவரும் குடிவாழாத பகுதிகளாகும்.

விகாரைகளில் வழிபாடு செய்ய அப்பகுதிகளில் பௌத்த மக்கள் வாழவில்லை என்றால் ஏன் அங்கு அவை அமைக்கப்படுகின்றன என்ற கேள்வி எழுகிறதல்லவா?

வலிகாமம் வடக்கில் உள்ள 45 கிராம சேவகர் பிரிவுகளில் 20 பிரிவுகளில் மட்டுமே மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். ஏனைய 9 பகுதிகள் பகுதியாகக் குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளன. ஏனைய பகுதிகள் முட்கம்பி வேலியிடப்பட்டு உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறப்பட்டு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அதில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, தோலகட்டிப்பண்ணை, ஒட்டகப்புலம் ஏனைய விளைநிலங்கள் மயிலிட்டி மீன்பிடி மையம் என்பனவும் அடங்கும். அதை விட மாதகல் பகுதியில் சங்கமித்தை வந்து இறங்கியதாகக் கூறப்படும் இடத்தில் விகாரை அமைக்கப்பட்டுள்ளது. அது புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது மட்டுமின்றி விகாரையிலிருந்து கண்களுக்குத் தெரியும் கடல் பிரதேசத்தில் மீன் பிடிக்க அனுமதிக்கப்படுவதில்லை. இதன் காரணமாக சுமார் 800 குடும்பங்கள் தங்கள் தொழில்களை இழந்து தவிக்கின்றன.

மேலும் ஏறக்குறைய 1000 தமிழ் மக்களின் வீடுகள் ஆக்கிரமிக்கப்பட்டு படைமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு படைமுகாம்களின் உள்ளே விகாரைகளும், வாசலிலோ அல்லது அண்மையிலோ புத்தர் சிலைகளும் நிறுவப்பட்டுள்ளன.

அம்பாறை அரசிந்தலாவ பகுதியில் முஸ்லிம்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த பகுதியில் மலையின் மீது ஒரு விகாரை அமைக்கப்பட்டது. அதன் தலைமைப் பிக்கு அவ்விகாரையின் மணியோசை கேட்குமிடமெங்கும் புனித பிரதேசம் எனவும் அதிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட வேண்டும் என அழுத்தம் கொடுத்தார். முன்னாள் அமைச்சரும் முஸ்லிம் மக்களின் பெரும் மதிப்புக்குரியவருமான அஷ்ரப் அவர்கள் அதற்கெதிராகக் கடுமையாகப் போராடினார். ஆனால் பிக்குகள் படையினரின் உதவியுடன் முஸ்லிம் மக்களை வெளியேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஒரே நாளில் 33 பிக்குகள் கட்டுக் கொல்லப்பட்டனர். அந்த அநியாயம் தடுத்து நிறுத்தப்பட்டது. ஆனால் கடந்த பொசன் காலத்தின் போது கொல்லப்பட்ட பிக்குகளின் நினைவு தினத்தில் அது புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு விட்டது. இனி முஸ்லிம்கள் அங்கிருந்து விரட்டப்படுவார்கள் என்பதை எதிர்பார்க்கலாம்.

தம்புள்ள பிரதேசம் புனித பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்டு தம்புள்ள பள்ளிவாசல் இடிக்கப்பட்டதும், காளி கோவில் இடிக்கப்படும் என அச்சுறுத்தப்பட்டதையும் நாமறிவோம். இப்போ தம்புள்ள நகரம் பாதுகாப்புச் செயலரின் கீழ் கொண்டு வரப்பட்டு விட்டது. இனி சட்டப்படி பள்ளிவாசலும், காளி கோவிலும் அகற்றப்படும். முஸ்லிம் அமைச்சர்களின் நடவடிக்கைகள் எப்படி அமையப் போகிறது என்பது தான் இப்போ கேள்வி.

ஏற்கவே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், வலிந்த சட்டபூர்வமற்ற குடியேற்றங்கள் என்பன மூலம் வடக்குக் கிழக்கின் பல பகுதிகள் சிங்கள மயப்படுத்தப்பட்டு விட்டன. போர் முடிவுக்கு வந்த பின்பு இராணுவக்குடியிருப்புகள் என்ற பேரில் தமிழரின் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. இன்னொருபுறம் பாதுகாப்பு, அபிவிருத்தி என்ற பேரில் தமிழ் மக்கள் பாரம்பரியமாகக் குடியிருந்த இடங்களை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

இன்று புனித பிரதேசங்களை உருவாக்குவதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் இருப்பைச் சீர்குலைத்து அவர்களின் இடங்களை ஆக்கிரமித்து சிங்கள மயப்படுத்த ஒரு வழிமுறை ஏற்படுத்தப்படுகிறது.

இக் கைங்கரியத்தைத் தலைமையேற்று வழிநடத்துபவராகப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். இவரின் விசுவாசிகளாக சம்பிக்க ரணவக்க, மேதானந்த எல்லாவல தேரர், விமல் வீரவன்சா, குணதாச அமரசேகர ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.

இவற்றை நிறைவேற்றும் சகல பொறுப்புகளும், அதிகாரமும் இராணுவத்தினருக்கே வழங்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையிலேயே வடக்குக் கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்களாக இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அது மட்டுமின்றி வடக்குக் கிழக்கின் பொதுக் கட்டளைத் தளபதிகளும் எந்த ஒரு விடயத்திலும் தலையிடுமளவுக்கு அதிகாரம் பெற்றவர்களாக விளங்குகின்றனர்.

அண்மையில் மட்டக்களப்பில் உள்ள ஒரு பெண்கள் பாடசாலையின் அதிபர் அப்பாடசாலையின் மாணவிகள் ஒரு சரஸ்வதி சிலை வைக்க ஆதரவு வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டார். இந்த இடமாற்றம் தொடர்பாகக் கல்வி அமைச்சின் செயலாளருக்கோ, பாடசாலை நிர்வாகத்திற்கோ எதுவுமே தெரியாது. எங்கே அதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறது என்பதைப் புரிய முடிகிறதல்லவா?

பெண்கள் தாங்கள் படிக்கும் பாடசாலையில் சரஸ்வதி சிலையை நிறுவ உரிமையில்லை. ஆனால் வீதி வீதியாகப் புத்தர் சிலைகளை நிறுவ முடியும்.

ஜனநாயகத்தின் பேரில் கொடி கட்டிப்பறக்கும் இராணுவ சர்வாதிகாரத்திற்கு வேறு உதாரணம் தேவை தானா?

உலகின் எல்லா மேலாதிக்க சக்திகளும் தங்கள் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு இரு வழிமுறைகளைக் கையாள்கின்றன. ஒன்று ஆயுத நடவடிக்கை, ஏறக்குறைய தமிழ் மக்கள் நமது போராட்டத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட உயிர்களைப் பலி கொடுத்தனர். போரின் இறுதி நாட்களில் 40,000 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

அடுத்து தேசிய இனத் தனித்துவங்களை அழித்து சிறிது சிறிதாக அந்த இனத்தை அழிப்பது போரில் தமிழ் மக்களைக் கொன்று தள்ள எந்த இராணுவம் பயன்படுத்தப்பட்டதோ அந்த இராணுவ சர்வாதிகாரம் தமிழ் இனத் தனித்துவத்தை அழிக்கவும் பயன்படுகின்றது.

ஒரு தேசிய இனத்தின் அடையாளங்களாக அதன் மொழி, கலாசாரம், வாழ்விடம், பொருளாதாரம் என்பனவே விளங்குகின்றன.

சிங்களக் குடியேற்றங்கள், படைமுகாம்கள் அமைக்க, அபிவிருத்தி என்ற பேர்களில் தமிழரின் பாரம்பரிய வாழ்விடங்களை அபகரித்தல், இராணுவக் குடும்பங்களில் குடியிருப்புகளை ஏற்படுத்தல் என்பன மூலமும் புனித பிரதேசங்களைப் பிரகடனம் செய்வதன் மூலமும் தமிழ் மக்களின் நில உரிமை பறிக்கப்படுகிறது. பௌத்த வழிபாட்டுத் தலங்களை அமைப்பதன் மூலம் எமது பாரம்பரிய கலாசார விழுமியங்களை சிதைக்கப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உயர் பாதுகாப்பு வலயம், புனித பிரதேசப் பிரகடனம் என்பன மூலம் எமது தொழில்கள் பறிக்கப்பட்டு எமது பொருளாதார வளம் சிதைக்கப்படுகின்றது. எமது மொழியுரிமையும் பல்வேறு வழிகளில் பறிக்கப்படுகிறது. இவையனைத்தும் இராணுவ மேலாதிக்கத்தின் கீழ் ஆயுத அடக்குமுறை மூலமே செயற்படுத்தப்படுகின்றன.

போரின் போதும் சரி, போரின் பின்பும் சரி ஜனநாயகம் என்ற போர்வையில் தமிழ் மக்கள் மீது இராணுவ சர்வாதிகாரம் மேற்கொள்ளப்படுகிறது. இப்படியான இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக நாம் எச்சரிக்கையுடன் இருப்பது மட்டுமின்றி இரைக்குப் பலியாகாமல் இருக்கவும் வேண்டும்.

**சந்திரசேகர ஆசாத்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டே லீடர் பத்திரிகையில்:
அன்ரன் ஜெயநாதன
எழுதிய கட்டுரை
தமிழில் : ஜெஸ்மின்

# சமாதானத்தின் தூதுவர்களையும் கொல்லாதீர்கள்!

**நீதிமன்ற வளாகத்தில் வைத்தும், அவரவர் இல்லங்களில் வைத்தும், அரசியல் பிரச்சார வேலைகளின் போது அப்பகுதிகளில் வைத்தும் கடத்திச் செல்லப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் இனந்தெரியாதோரினால் கடத்தப்பட்டு விட்டனர். அத்துடன் அவர்கள் விரைவில் மீளவும் தோன்றுவார்கள் என நாங்கள் நம்ப வேண்டுமா?**

உணர்ச்சி ததும்பும் சொற்பொழிவு போன்ற பேச்சுக்களைப் பேசிய போதும், நாட்டிற்கு எதிராக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இல்லாமற் செய்யவோ அல்லது தோற்கடிக்கவோ முடியவில்லை. அரச தரப்பினராலும் மற்றும் அரச ஆதரவாளர்களாலும் இக் கசப்பான உண்மையை ஜீரணிக்க இயலாதுள்ளது. எது எப்படியாயினும் தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுவிட்டது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் துணிச்சலுடன் பேசவல்ல சில அரசதரப்பு அமைச்சர்கள் மற்றும் பேச்சாளர்கள் அந்த உண்மையை ஏற்றுக் கொள்ள மறுத்து வாய்விட்டுக் கூறிய வெவ்வேறு விதமான அறிக்கைகளும், விமர்சிப்புகளும் தீர்மானம் குறித்த தெளிவைவிட அதிகளவிலான குழப்பத்தையே உண்டு பண்ணியுள்ளன.

தீர்மானத்தின் உண்மையான தாக்கங்களாக எமது நாட்டிற்கு எதிராகப் பொருளாதாரத் தடை உத்தரவு ஏதும் வருமா? அல்லது புலிகளைத் தோற்கடித்து வெற்றியடைந்தமைக்காக மேற்குலகம் எம்மைத் தண்டிக்கப் போகின்றதா என்பதைத் தெளிவான வகையில் விளக்கமளிப்பதற்கு எந்த ஒரு அரசதரப்புப் பேச்சாளர்களினாலும் முயற்சி எதுவும் எடுக்கப்படவில்லை.

சரியானவற்றைச் சிந்திக்கும் மக்களிற் பலர் ஒன்றிணைந்த சிறீலங்காவிற்குள் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுலாக்கும் நடைமுறையின் மூலம் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான ஓர் தூண்டுவிசையே இத்தீர்மானம் என்பதைப் புரிந்து கொண்டுள்ளனர்..

நாட்டு மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தைக் கொண்டு வருவதற்குரிய வகையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுலாக்குவதற்கு தீர்மானத்தின் தனிச் சிறப்பான முக்கிய பகுதியினைப் பின்பற்றுவதற்கு ஏதுவாக உடனடிப் படிமுறைகள் எதனையும் எடுக்காமல் ஜெனிவாத் தீர்மானம் குறித்து ஏதோ மேற்குலக நாடுகள் சிறீலங்காவிற்குத் தொல்லை தருவதாகப் பெரிதுபடுத்திக் காட்டி மக்களிடையே அரச தரப்பினர் ஒரு கருத்தைப் பரப்பி வருகின்றனர்.

## நல்லிணக்க ஆணைக்குழு

நல்லிணக்க ஆணைக்குழு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டது. ஆணைக்குழுவிலுள்ள உறுப்பினர்கள் மீதும் குழுவின் அறிக்கை குறித்தும் அவதூறுகள் மற்றும் ஐயப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன. அவர்களின் அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். அக்குழுவின் உறுப்பினர்கள் யாவரும் முக்கியம் வாய்ந்தவர்கள், மேன்மையானவர்கள் அத்துடன் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள்.

அவர்களால் பதிவு செய்யப்பட்ட பல ஆதாரங்களை வைத்தே அவர்கள் பல பரிந்துரைகளைச் செய்துள்ளனர். மக்களிற் சிலர் நேரடியாகவே ஆணைக்குழுவின் முன்னிலையில் தோன்றித் தமது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர். ஆகவே எமது நாடு கடந்த காலத்தில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினால் அவர்களது அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காகவும் சுயநல காரணங்களுக்காகவும் எமது நாட்டின் ஒற்றுமையை விலை கூறியதை நன்கு அறிந்து கொள்ள முடிகின்றது.

இத்தவறுகளும் அல்லது அசட்டையீனங்களுமே எமது நாட்டினை இனம் மற்றும் மதவாரியாக இரண்டு கோடுகளாகப் பிரித்துவிட்டது மட்டுமன்றி நாட்டில் மிக மோசமான புரட்சிகர அமைப்புகள் உருவாகுவதற்கும், மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நாட்டில் பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் அத்துடன் சமூக ரீதியிலும் சொல்லொணாத் துன்பங்களையும் அனுபவிக்க வைத்தது. அழிவுகளையும் ஏற்படுத்தியது.

இந்நாட்டின் சகல மக்களும் இன, மத மொழித் தடை வேலிகளைப் பொருட்படுத்தாது ஒருங்கிணைந்த சிறீலங்காவைக் கட்டியெழுப்புவதற்கு முன்னோக்கி நகர்த்தக் கூடிய பல நடைமுறைச் சாத்தியமும் அத்துடன் அமுலாக்கப்படக் கூடியதுமான நடைமுறைகளைப் பரிந்துரை செய்துள்ளது ஆணைக்குழு. அத்துடன் சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் கஷ்டங்களை நிவர்த்தி செய்யும் சாத்தியமான நடைமுறைகளையும் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. அவர்கள் 13வது திருத்தம், சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு, மும்மொழிப் பாவனை அத்துடன் நீதியான ஆட்சிமுறை என்பவற்றை ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கியுள்ளனர்.

## யுத்தத்தின் பின்னரான காலப்பகுதி

புலிகளைத் தோற்கடித்து மூன்று வருடங்கள் கழிந்துவிட்டன. பெரும்பான்மையின மக்கள் மத்தியில் மன அமைதி, போக்குவரத்துச் சுதந்திரம் மற்றும் அச்சமின்மை என்பன யுத்தத்தின் இறுதியில் கொண்டுவரப்பட்டன. ஆனால், யுத்த வெற்றியானது பெரும்பான்மை - சிறுபான்மை மக்களிடையே ஒற்றுமையைக் கொண்டு வந்துள்ளதா என்பதை நாங்கள் எப்பொழுதாவது கவனமாகச் சிந்தித்தோமா? நாங்கள் எங்களது மனச் சாட்சியினை நன்கு ஆராய்ந்து பார்ப்போமாயின் மிக மோசமாக வடக்கு, கிழக்கில் யுத்தகாலங்களில் துன்பங்களை அனுபவித்த மக்கள் இப்பொழுதும் ஓர் புதிய வாழ்க்கையைக் கொண்டுள்ளனர் என எங்களால் நேர்மையாகக் கூறமுடியுமா?

அவர்களிற் சிலர் இன்றும் அகதிகளாகவே உள்ளனர். அவர்கள் தமது சொந்தப் பிரதேசங்களிலேயே இன்றும் சுத[illegible] முடியாதவர்களாக [illegible] உடலை வருத்தி உழைத்து வாழ்ந்த அவர்களுடைய சொந்தக் காணிகளுக்குத் திரும்பச் சென்று வாழ்வதற்குச் சுதந்திரம் அற்றவர்களாக உள்ளனர். அவர்களது நிலங்களில் படையினர் குடியிருக்கின்றனர். அரசாங்கத்தினால் பெரும்பான்மையின மக்கள் அடையும் நன்மைகளைப் போன்று அவர்களும் நன்மைகளை அடைவதற்கு ஏதுவகையுமில்லை.

அவர்கள் இன்னமும் அரசியல்வாதிகளின் போக்கிரித்தனம் மற்றும் அரசியல்வாதிகளின் ஆயுதக் குழுவினரின் அச்சுறுத்தல்கள் மற்றும் படையினரின் பிரசன்னம் போன்ற அச்சுறுத்தல்களின் கீழ்தான் வாழ்கின்றனர்.

வடக்கு, கிழக்கிலுள்ள மக்கள் தாம் கௌரவத்துடன் வாழ்வதற்கான சுதந்திரத்தையே வலியுறுத்திக் கோருகின்றனர். அவர்கள் தமது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கும் அரசாங்கத்திடமும் உள்ளூராட்சி சபைகளிலும் அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்து நன்மைகளைப் பெறுவதற்கும் அத்துடன் வெளிநாட்டு உதவிகளிலும் பயனாளிகளாக இருக்கும் சுதந்திரத்தினையே வேண்டி நிற்கின்றனர். அது மட்டுமல்லாமல் இடைக்கால ஏற்பாடான அகதி முகாம்களிலும் பார்க்கத் தமது சொந்தக் காணிகளுக்கே திரும்பிச் செல்வதற்கு கோரி நிற்கின்றனர்.

அவர்கள் மனித உரிமைகள், மனிதப் பெறுமதிகள், அமைதியான வாழ்வு என்பவற்றில் வளம் குன்றியவர்களாகவே உள்ளனர்.

## சட்டத்தின் ஆட்சி

எமது நாட்டில் சட்டமும் ஒழுங்கும் 'காட்டாட்சி' போலாகி விட்டது. அரசியலமைப்பின் அமுலாக்கம் என்பது தவறாகப் பயன்படுத்தப்பட்டும் அத்துடன் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டும், சில அரசியல்வாதிகளின் சிந்தனைகளுடன் கருத்து வேறுபாடுடையவர்களை வன்முறை கொண்டு அடக்குதல் அல்லது நேர்மையற்ற வகையில் அடக்கி வைத்தல் போன்றவையே நாட்டின் இடம்பெற்ற வண்ணமுள்ளன. ஒருவர் காலையில் செய்தித் தாளை திறந்த மாத்திரத்திலேயே நாட்டின் சட்டம், ஒழுங்கு பற்றிய விபரங்களை இலகுவில் புரிந்து கொள்ளமுடியும்.

அவுஸ்திரேலியப் பிரஜையான 'நொயல்' என்றழைக்கப்படும் குணரட்ணம் மத்திய புலனாய்வுத் துறை அலுவலகத்தில் அதிகாலை நேரத்தில் தோன்றி அவரை அவுஸ்திரேலியாவிற்கு விமானப் பயணம் மேற்கொள்வதற்கு விமான நிலையத்திற்குக் கொண்டு செல்லும்படி அங்கிருந்த அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டதாக பொலிஸ் மா அதிபர் தொலைக்காட்சியில் தோன்றி மக்களுக்குக் கூறுகையில் பார்ப்பதற்கும், கேட்பதற்கும் மிகவும் கவலையை அளித்தது.

அதேபோன்று கொழும்பு கோட்டைப் பகுதியில் வைத்து இரண்டு பௌத்த துறவிகள் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் சர்ச்சைக்குரிய கலாநிதி பௌன்ஸிவ விமலரத்ன தேரர் கூறிய [illegible] இவை. "இங்கு குற்றச் [illegible] கண்டு பிடித்துத் தீர்வு செய்யக் கூடிய திறமை மிக்க பொலிஸ் அதிகாரிகள் உள்ளனர். ஆனால் அரசியல்வாதிகளின் தலையீடுகளினால் குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பும் வாய்ப்பினைப் பெற்றுவிடுகின்றனர்."

சிறீலங்காவின் குடிமக்களில் அதிகமானோர் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். 'நொயல்' என்றழைக்கப்படும் குணரட்ணத்தின் ஆட்கடத்தல், மீண்டும் தோன்றியமை அத்துடன் நாடு கடத்தப்பட்டமை போன்றவை குறித்து அறிக்கைகளை வெளியிடுவதற்குப் பொறுப்பானவர்கள் சிறீலங்காவிலுள்ள மக்கள் எல்லோரும் சொல்லுவதை எல்லாம் ஏற்றுக் கொள்வதற்கு ஒன்றும் அப்பாவிகளோ அல்லது முட்டாள்களோ என்று எண்ணக் கூடாது.

நீதிமன்ற வளாகத்தில் வைத்தும், அவரவர் இல்லங்களில் வைத்தும், அரசியல் பிரச்சார வேலைகளின் போது அப்பகுதிகளில் வைத்தும் கடத்திச் செல்லப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் இனந்தெரியாதோரினால் கடத்தப்பட்டு விட்டனர். அத்துடன் அவர்கள் விரைவில் மீளவும் தோன்றுவார்கள் என நாங்கள் நம்ப வேண்டுமா?

பல சமயக் குழுக்கள், பல சுயாதீன அமைப்புகள், அரசியல் சார்பற்ற நிறுவனங்கள், மற்றும் சுயாதீன செய்திப் பத்திரிகைகளினால் உருவாக்கப்பட்ட அவையொன்று படிப்படியாக நாட்டில் சீர்குலைந்து வரும் சட்ட ஆட்சிமுறைகள், ஆட்கடத்தல்கள் அத்துடன் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுலாக்காமை குறித்துத் தமது கருத்துகளை வெளிப்படுத்தி வருகின்றது.

துரதிஷ்டவசமாக சமாதானம், நல்லிணக்கம், ஒற்றுமைக்காக ஏங்கும் மக்கள் அனைவரையும் அத்துடன் அரசாங்கத்தினால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளின் அத்தியாவசியம் குறித்தும் பயமின்றிப் பேசுபவர்களையும் புலிகளின் ஆதரவாளர்கள் அல்லது அரசுக்கு எதிரானவர்கள் என முத்திரை குத்தப்பட்டுப் பழி சுமத்தப்படுகின்றனர்.

அந்நாட்களின் பெரும்பான்மையினத்தவரான சிங்களவர்கள் யூ.என்.பி.யினர், எல்.எஸ்.எஸ்.பி.யினர் கம்யூனிஸ்டுகள், மார்க்சிஸ்டுகள், ஜே.வி.பியினர் எனப் பிரித்து இனங்காணப்பட்டனர். அதனைத் தொடர்ந்து தமிழர்களும் புலிகள் என முத்திரை குத்தப்பட்டனர். இன்றோ உண்மையைப் பேசும் எவரும் தேசத்துரோகிகள் எனப் பழி சுமத்தப்படுகின்றனர்.

நாட்டில் சமாதானம், நல்லிணக்கம், மகிழ்ச்சி கொண்டு வருவதற்கு நாட்டிற்கான நல்லதைக் கூறுவோரின் கருத்துகளுக்கு ஆட்சியிலுள்ளோர் கவனம் செலுத்த வேண்டிய காலமே இதுவாகும். ஜெனிவாத் தீர்மானத்தை அப்பாலே தூக்கியெறிந்துவிடாது குழுக்களை அமைத்து ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுலாக்க வேண்டும். தேவையாயின் பெயரளவில் கொடுக்கலாம். அதனை இன்று மக்களும் ஏற்றுக் கொள்ளலாம், ஆனால் துன்ப - துயரங்களை அனுபவிக்கப் போவது எமது எதிர்காலச் சந்ததிகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பம்பல் பரமசிவம்



தோட்டத்தோடை தான் எங்கடை வீடு. கடைசிப் பாத்தி வீட்டோடு மிக நெருக்கமாக. அதற்கு தண்ணி மாத்திக் கட்ட, குசினியில நேற்றைய கணவாய்க் குழம்பு சூடாக்கிற மணம் மூக்கைத் துளைச்சுது. நேரமும் ஒன்பது பத்து மணியிருக்கும். ஓம்.. காலமைதான் கணவாய்க் குழம்பு தீர்ந்த மணக்க பசியைக் கிளறிவிட்டுது கண்டியளோ. பேந்து குளிப்பம் எண்டிட்டு வேப்பம் குச்சி எடுத்து பல்லு விளக்கிப் போட்டு பேசினில் முகம் கழுவினன். துவாயைப் பாவிச்சுக் கொண்டிருந்த் துவாயால் முகத்தைத் துடைச்சுக் கொண்டு கணவாய்க் கறியோடை புட்டுச் சாப்பிடுவமெண்டு வீட்டுக்கை போனன். வாசலில் எங்கடை அல்சேஷன் நாய். அதுக்குப் பேர் 'சோட்டா'. பிளேற்றிலை கணவாய்க் கறியோடை அவருக்கும் புட்டிருந்தாள். வாலைக் கண்ணாட்டி நல்லா நக்கி நக்கி ருசிக்கக் கொண்டு தின்னான். முதல் நாள் பின்னேரமாய் அறுபாந்திப் பக்கம் போய் வரேக்கை நல்ல கணவாய் சந்திச்சுது. வேண்டு

வாங்கிக் கொண்டு வந்தனன். அதில தான் இரவு ஒரு குழம்பு வைச்சிட்டு மிச்சம் பொரிச்சும் வைச்சது. அப்ப இரவே சொல்லிப் போட்டன் விடிய அப்பன் பழங்கறி வையும். பொரிச்சு வைக்கிறதை மத்தியானம் காய்ச்சலாம எண்டு... எங்கடை றோட்டில பெட்டியில கொண்டு வாறவங்களிட்டை கறி வாங்கிற தெண்டால் காணி வித்துக் காசு வைச்சிருக்க வேண்டும். அவ்வளவு விலை.

எங்கடை 'சோட்டா' அதுதான் எங்கடை அல்சேஷன் கணவாய்க் கறியோடை பிரட்டி வைச்ச புட்டைச் சாப்பிடுறதைக் கண்டதோனை பசி டபிள் மடங்காய்ப் போய்ச்சுது. சாப்பாட்டைக் கொண்டு வா, கெதியெட்டு தயார் படுத்த. புட்டு வந்தது. பிறகு ஊருசாறு வாழைப்பழமும். கணவாய்க் கறி வரும் வரும் எண்டு பார்த்துக் கொண்டிருந்தால் ம்க்கும்... அதுவாற அடையாளத்தையே காணேல்லை... "என்னப்பா கணவாய்க் கறி பழங்கறியைக் கொண்டு வாவன்....." என்டன். "வாழைப்பழத்தோட சாப்பிடுங்கோ அப்பா. அது ஒண்டும் செய்யாது. நல்ல வேளை தாழம்பூச் சித்தி வந்து சொன்னாப் பிறகு தான் இண்டைக்கு எங்கடை காளி ஆய்ச்சி கொடியேற்ற நாள் எண்டு தெரிய வந்தது... நல்ல வேளை நீங்கள் சாப்பிடுறதுக்கு முன்னம் வந்து சொல்லிப் போட்டா தாழம்பூ சித்தி..."

தாழம்பூச் சித்தி காலமை முட்டை பொரிக்க எண்டு வெளிக்கிட பூனை தட்டி விழுத்திப் போட்டுச்சாம். அந்தக் கையோடை காளிஆச்சி கோவில் ஐயர் போன் பண்ணினாராம். கடமைக்கள் ஒத்துழைப்பு இல்லாததாலை தான் கடந்த வேளை 'டிலே'யாகி கொடியேற்ற ஏலாமல் போச்சுதாம்.

திருவிழா உபயகாரர் திருவிழா செய்யுற காசுகளை தாட்டாம். கட்டிட வேலையளை கெதியா ஒப்பேற்றி கும்பாபிஷேகம் செய்து அடுத்த வருசமெண்டாலும் கொடியேற்ற வேணுமாம். இந்தமுறை கொடியேறவில்லையெண்டு மச்சம் சமைக்க ஏலுமே? சனம் என்ன நினைக்கும்...? அதுதான் தாழம்பூ சித்தி சொன்னவ. பிள்ளைப் பார்த்திட்டு கணவாய்க் கறியையும் பொரியலையும் கோட்டாவிற்கு வைச்சிட்டன். தாழம்பூ சித்தி சொன்னவ என்ன ஒரு பதினைஞ்சு நாளைக்குத் தானே தாங்களும் பதினைஞ்சு நாளைக்கு மச்சமில்லையாம். நாங்கள் கோயில்காரர் மச்சம் சாப்பிட்டால் அயலட்டை என்ன நினைக்குங்கள் கொடி ஏறினாலும் ஏறாட்டிலும் காளி ஆச்சி காளி ஆச்சிதானே!

மனுசி சொல்லச் சொல்ல எனக்கு வயிறு புகைஞ்சு கொண்டு வந்தது. பதினைஞ்சு நாள். அவ்வளவு நாளும் மச்சம் இல்லையாம்.

சோட்டாவைப் பார்க்கப் பார்க்க எனக்கு பத்திக் கொண்டு வந்தது. கொடுத்து வைச்ச பிறவி.

தாழம்பூச் சித்தி வயித்தில அடிக்கிறதுக்கெண்டே இருக்கிற ஆள். ஒரு பத்து மணிக்குப் பிறகு வந்து சொல்லியிருக்கலாமே?

"இனிப்பைக் குறைக்கச் சொல்லி டொக்டர் சொல்லியிருக்கிறார். நீ இஞ்சை வாழைப்பழத்தைக் கொண்டு வந்து வைச்சிருக்கிறாய். டேய்பா" எண்டு பாய்ஞ்சு விழுந்தன். வெங்காய வயித்துப் புகைச்சல் எனக்கல்லோ தெரியும்.

"உ பறுன்னப்பா...? இனிப்பைக் குறைக்கச் சொல்லித்தானே சொல்லுவார். இரண்டு மூண்டு வாழைப்பழத்தைச் சாப்பிட்டுட்டு நிப்பாட்டுங்கோவன். ஏன் முழுக்குலையும் விழுங்க நிக்கிறியள்...? என்ன காசுக்கு வாங்கினதே? எங்கடை தோட்டத்து வாழைக்குலை தானே?..." எண்டுது மனிசி.

சொல்லுறது ஞாயம் எண்டால் வயித்தெரிச்சலைக் கூட்டுற ஞாயந்தான் மனுசி சொல்லும்..."

பின்னேரம் தாழம்பூ வீட்டுப் பக்கம் சும்மா 'விசிற்' பண்ணினன்... மாமனார் என்ன செய்யுறார் எண்டு பார்க்க, அந்த ஆள் ஒரு பாரை மீனோடை வந்து இறங்கிச்சாம்.

பொரியல், குழம்பு செம வெட்டாம். தாழம்பூ சித்தி என்ரை மனுசிக்குத் தான் அவசித்தி. அப்பதான் பிளேற் கொண்டு போய் கழுவிக் கொண்டு நிண்டா. மீனின்ர 'ரேஸ்ற்றில', மத்தியானம் சாப்பிட்டுட்டு, பின்னேரமும் ஒரு கை பார்த்திட்டு இப்பதான் கை கழுவிறா. "அப்ப என்ன மாதிரிச் சித்தி பாரைமீன்?" எண்டன். அவ என்ரை மனுசிக்குத் தான் சித்தி. என்ரை மனுசியின்ர தாயின்ர தங்கச்சியார். என்ரை மனுசிக்கும் தாழம்பூவுக்கும் மூண்டு இரண்டு வயது தான் வித்தியாசம். சிறியதாய் எண்டாலும் 'பிறண்ட்ஸ்' மாதிரித் தான் பழகுவினம். நானும் சித்தி எண்டுதான் கூப்பிடுறனான்.

"ஓம் மருமோன்! பாரைமீன் வாங்கிக் கொண்டு வந்திட்டார்... இனி என்ன நாய்க்குப் போடுறதே. இல்லாமலும் காளி ஆச்சி இந்தமுறை கொடி ஏறேல்லை தானே! இனி அந்த ஆளும் பத்துப் பதினைஞ்சு நாள் மச்சமில்லாமல் இருக்குமே...

அட்டகாசப்படுத்திப் போடும்... சட்டி பானையையும் நொருக்கிப் போடும் தெரியுந் தானே... சனம் பத்தையும் சொல்லும்.

அதுக்காக நாங்கள் பட்டினி கிடக்க ஏலுமே? அதுதான் பார்த்திட்டு - அயலட்டை கரு மணத்தாலும் பரவாயில்லை எண்டு குழம்புக் கறியோடை ஒரு பொரியலும் பொரிச்சனான்"... எண்டு தாழம்பூச் சித்தி சொல்லச் சொல்ல எனக்குப் பேந்தும் வயிறு புகைஞ்சு கொண்டு வந்தது.

தாழம்பூச் சித்தி வீட்டு நாயை நினைக்க 'பாவமா இருந்தது' என்ன இருந்தாலும் எங்கடை வீட்டு சோட்டா - அதுதான் அல்சேஷன் கொடுத்து வைச்ச பிறவி... நான் தான்!..?...

# தீவிரமடையும் நில அபகரிப்பு!

இலங்கைத் தீவில் குறிப்பாக வடக்கு, கிழக்குப்பகுதிகளில் மூன்று தசாப்த காலமாக இடம்பெற்று வந்த ஆயுதப்போர் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் முடிவுக்கு வந்துள்ள பின்னர் அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் இலங்கைப் படைத்தரப்பினர் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழ்மக்களினுடைய காணிகளையும் வீடுகளையும் அபகரிக்கின்ற நடவடிக்கையில் முனைப்புக்காட்டி வருகின்றனர். இடம்பெயர்ந்த மக்களில் தொண்ணூறு வீதமான மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு விட்டார்கள் என்று அரச தரப்பினர் கூறிவரும் கருத்து எந்தளவிற்கு உண்மைத்தன்மையைக் கொண்டுள்ளது என்பதை வடக்கு, கிழக்கு தமிழ்மக்கள் நன்கறிவார்கள். மீள்குடியேற்றம் என்ற பெயரில் தங்களது சொந்தப் பிரதேசங்களுக்கு திரும்பியுள்ள மக்கள் தங்களது சொந்த கிராமங்களுக்கும் சொந்த வீடுகளுக்கும் செல்லமுடியாத அவல நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். உதாரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மக்கள் மீள்குடியேற்றத்திற்காக புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு வந்துள்ள போதிலும் அவர்களில் மந்துவில், ஆனந்தபுரம் உள்ளிட்ட புதுக்குடியிருப்பு நகரை அண்டிய இன்னும் சில கிராமத்து மக்கள் தங்களது சொந்த கிராமங்களிலோ அல்லது தங்களது சொந்த வீடுகளிலோ குடியேறுவதற்கான அனுமதியை படைத்தரப்பினர் இன்னமும் வழங்கவில்லை. குறிப்பிட்ட கிராமத்தைச் சேர்ந்த மக்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள இரணைப்பாலை, கோப்பாபிலவு, கைவேலி போன்ற கிராமங்களிலும் ஏனைய கிராமங்களிலும் வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்களிலும் குறிப்பிட்ட அளவிலான மக்களின் காணிகளை இராணுவத்தினால் ஆக்கிரமித்து இராணுவ முகாம்களை நிறுவியிருக்கின்றனர். அந்த மக்களும் பாவம் எங்கு போய் முறையிடுவார்கள். சொந்தக் கிராமத்தில் இருந்துகொண்டே சொந்த வீட்டிற்கு செல்லமுடியாத சூழ்நிலையிலேயே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

நீண்ட கால யுத்தம் முடிவுக்கு வந்து போர் முழக்கமும் வெடியோசைகளும் அற்ற ஒரு வாழ்க்கை நிலை உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில் ஒவ்வொரு பிரதேசங்களிலும் விசாலமான நிலப்பரப்புக்களை படையினர் தம்வசப்படுத்தி பாரியளவிலான படைத்தளங்களை நிறுவியிருக்கின்ற நடவடிக்கையானது இயல்புநிலையை பாதிப்பதாகவே அமைகிறது. பாதுகாப்பு என்ற பெயரில் பெருமளவு நிலங்களை படையினர் ஆக்கிரமிப்புச் செய்துள்ளனர். ஆயுதப்போர் முடிவுற்ற இந்த மூன்று ஆண்டுகளிலேயே நில ஆக்கிரமிப்பு போரை படைத்தரப்பினர் தீவிரப்படுத்தியுள்ளனர். யுத்தம் முடிவுற்று நாட்டில் சமாதானம் மலர்ந்திருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் இவ்வாறு ஒவ்வொரு பிரதேசங்களிலும் பெருமளவிலான அரச நிலங்களையும் மக்களின் வாழ்விடங்களையும் இராணுவமயமாக்கியிருப்பது அவசியமற்றது என்பதுவே மக்களின் கருத்தும் கணிப்புமாகவுள்ளது. இவ்வாறு விசாலமான நிலப்பரப்பில் படையினர் காலூன்றியிருக்கின்ற போதிலும் அங்கு கொலை, கொள்ளை, களவு, பாலியல் வல்லுறவு, இனந்தெரியாத நபர்களின் தாக்குதல்கள் என்பவற்றுக்கு குறைவேயில்லை.

அண்மைக் காலங்களில் புதிதாகத் திருமணம் முடித்த எத்தனையோ குடும்பங்கள் குடியிருப்பதற்கு நிரந்தரக் காணிகள் அற்று நிர்க்கதியான நிலையிலேயே வாழ்கின்றனர். மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கான நிரந்தர வீட்டுத் திட்டத்திற்கான பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டபோதும் அரச அதிகாரிகள் சொந்தக்காணி உறுதிகளை பொதுமக்களிடம் கேட்டிருந்தார்கள். ஒரு பரப்பு நிலம் கூட சொந்தமாக இல்லாத இந்தக் குடும்பங்கள் காணி உறுதிக்கு எங்கே போவார்கள்? படையினர் வசமுள்ள பெருமளவு அரச காணிகளை இவ்வாறான காணிகள் அற்ற குடும்பங்களுக்கு பகிர்ந்து வழங்குவதற்கு அரசாங்கம் எள்ளளவிலும் நாட்டம் கொள்ளவில்லை. மாறாக மேன்மேலும் காணிகளை அபகரிப்பதிலேயே அரச ஆர்வம் காட்டிவருகிறது.

யாழ்மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பதினைந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் பெருமளவு தனியாரின் காணிகளையும், வீடுகளையும், வியாபார நிறுவனங்களையும் இராணுவமும், பொலிசாரும், கடற்படையினரும் கையகப்படுத்தி வைத்திருக்கின்றனர். அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தனியார் காணிகளையும் விட அரச காணிகளை மிகவும் குறைந்தளவிலேயே கையகப்படுத்தி வைத்திருப்பதை அண்மையில் வெளியாகிய புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டு அறியமுடிகிறது.

அண்மையில் காணிகள் அபகரிப்புத் தொடர்பாக யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க அவர்கள் வெளியிட்ட கருத்தை உற்றுநோக்கும் போது தனியார் காணிகளை இராணுவம் அபகரித்திருப்பதை அவர் அடியோடு மறுத்திருக்கின்றார். அத்தோடு படைமுகாம்களை நிறுவுவதற்கு அரச நிலங்களை படையினர் ஆக்கிரமித்திருப்பதை ஏற்றுக் கொண்டுள்ளார். ஹத்துருசிங்க அவர்களின் கருத்தையும் அண்மையில் பத்திரிகையில் வெளியாகிய சுவீகரிக்கப்பட்ட காணிகள், வீடுகள் தொடர்பான புள்ளிவிபரத்தையும் ஒப்பிடும்போது நிறையவே முரண்பாடுகள் காணப்படுகின்றது.

இறுதிப்போர் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளிவாய்க்கால் கிராமத்திலும் 17.5 ஏக்கர் நிலப்பரப்பை படையினர் ஆக்கிரமித்துக் கொள்ளும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அரச படைகளின் இந்த நில ஆக்கிரமிப்பானது எதிர்காலத்தில் தமிழ் மக்களின் இருப்பையே கேள்விக் குறியாக்குகின்ற ஒரு அபாயநிலை தோன்றுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

நிசிக்கேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தை நோக்கி

உண்மைச் சம்பவம்

என்னைப் பற்றி அதிகம் சொல்ல விரும்பவில்லை. எனது பெயர் டொறீன். வயது 21. நிறுவனம் ஒன்றில் வரவேற்பாளராகப் பணி புரிபவள். எனது காதலன் பெயர் சுமித். வயது 24. பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையின் இறுதியாண்டு மாணவன். துப்பாக்கியால் குறி பார்த்துச் சுடுவதில் வல்லவன். அதுவே அவரது பொழுதுபோக்கும் கூட.

அன்று எனக்கு அலுவலக விடுமுறை நாளாதலால் நானும், சுமித்தும் கடற்கரைக்குச் சென்றோம். கடற்கரையில் வைத்துத் தான் சுமித் துப்பாக்கியால் குறிபார்த்துச் சுடும் பயிற்சியினை இடைக்கிடையில் மேற்கொள்வதுண்டு.

அன்றும் அவ்விதமே அவன் பயிற்சியில் ஈடுபட்டான். அவன் துப்பாக்கியை எடுத்து குண்டுகளை அதில் போட்டான். நான் கடற்கரையில் நின்றவாறு, அவன் துப்பாக்கியால் சுடுவதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன்.

அவன் சொல்லி முடிப்பதற்குள் துப்பாக்கி வெடித்தது. திடீரென்று குண்டு என் நெற்றியில் பாய்ந்தது. கண்கள் இருண்டன. இரண்டு கண்களுக்கு நடுவே குண்டு பாய்ந்திருந்தது. இரத்தம் உடை மீது கொட்டியது. எனக்கு வலி எதுவுமே அப்போது தெரியவில்லை.



அவன் நான்கு தடவைகள் சுட்டான். அதன் பிறகு, அவனால் துப்பாக்கியின் விசையை அசைக்க முடியவில்லை. அது அப்படியே நின்று விட்டது. அவனும் பல முறை விசையை இழுத்துப் பார்த்தான். அது சற்றும் அசைந்து கொடுக்கவில்லை. அவன் எனக்குப் பத்தடி தூரத்தில் நின்றிருந்தான். என்னைத் திரும்பிப் பார்த்து "அது அப்படியே நின்று விட்டது. அசையவே இல்லை." என்று கூறியபடியே விசையை அசைத்துக் கொண்டிருந்தான்.

அவன் சொல்லி முடிப்பதற்குள் துப்பாக்கி வெடித்தது. திடீரென்று குண்டு என் நெற்றியில் பாய்ந்தது. கண்கள் இருண்டன. இரண்டு கண்களுக்கு நடுவே குண்டு பாய்ந்திருந்தது. இரத்தம் உடை மீது கொட்டியது. எனக்கு வலி எதுவுமே அப்போது தெரியவில்லை. அப்போது நான் நின்று கொண்டிருந்தேன். நான் பயப்படவில்லை. பிறகு, நான் தொல்லைப்படப் போவதை அப்போது உணரவேயில்லை.

கடற்கரையில் நின்றிருந்த யாரோ ஓடிவந்து என் கையில் துவாயைக் கொடுத்தார்கள். அதை நான் இரத்தம் பெருகும் இடத்தில் வைத்து அழுத்திக் கொண்டேன். சுமித், திகைப்பினால் அதிர்ந்துபோய் சிலைபோல் அசையாது நிற்பதும் என் மங்கிய பார்வையில் தென்பட்டது. குண்டு என்னைத் தாக்கியது தெரியும். என் கூலிங் கிளாசின் ஸ்டீல் பிரேமைத் தாக்கி அதுதான் என் நெற்றியைக் கிழித்திருக்கலாம் என்று எண்ணினேன். பிறகுதான் நான் நினைத்தது தவறு என்று புரிந்தது.

கடற்கரைச்சாலையில் போய்க் கொண்டிருந்தவர் பார்த்து விட்டு, நிலைமையைப் புரிந்து கொண்டு தம் காரை நிறுத்தினார். அங்கிருந்தவர்களிடம் என்னைக் காரில் ஏற்றும்படி சொன்னார். மருத்துவ மனைக்குக் கார் பறந்தது.

அந்நிலையிலும், என்னால் கார் முழுவதும் இரத்தக் கறை ஆகிவிடப் போகிறதே என்றெண்ணிக் கவலைப்பட்டேன். டவலை வைத்து அழுத்திப் பிடித்திருந்ததால் வலி அதிகமாக இருந்தது. என்ன நடந்தது என்று சிந்தித்தேன்.

நான் மருத்துவமனைக்குச் சென்ற சமயம் எனக்குப் பேராபத்து எதுவும் இல்லையென்று எண்ணினேன். எனினும், மருத்துவமனையில் சேர்த்ததும் தான் என் பயம் ஆரம்பமாயிற்று.

டொக்டர்கள் என்னைச் சோதனை செய்து பார்த்தனர். காயத்திற்கு தையல் இடப்பட்டது. இரத்தப் பெருக்கு ஒருவாறு நின்றது. எப்படி இந்த விபத்து ஏற்பட்டது என்று கேட்டார்கள். வேறு எதுவும் சொல்லவில்லை. கெல்கஸ்ரர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். ஏனெனில், அங்குதான் இப்படிப்பட்ட விபத்துகளுக்கு சிகிச்சை செய்ய வசதிகள் இருக்கின்றன.

பதினைந்து மைல் தூரம் அம்புலன்சில் பயணம் செய்தது போன்ற மோசமான நிலை வேறு எதுவுமே இருக்க முடியாது. உண்மையில் எனக்கு என்ன ஆபத்து என்று தெரியவில்லை. அம்புலன்சின் எச்சரிக்கை ஒலி தொடர்ந்து ஒலி எழுப்பிற்று. அதன் ஒலி என்னைப் பிய்த்து விடுமோ என்று அஞ்சும் படி இருந்தது.

கெல்கஸ்ரர் மருத்துவமனையில் என்னைத் தள்ளுவண்டியில் வைத்து எடுத்துச் சென்றனர். அங்கிருந்த டொக்டரும் முதலிலிருந்து எல்லாக் கேள்விகளையும் கேட்டார். நானும் பதில் சொன்னேன். அவருடன் கண், காது, தொண்டை மருத்துவ நிபுணரும் என்னைச் சோதனை செய்தனர். அவர்கள் பேசியதிலிருந்து அறுவைச் சிகிச்சை செய்வது மிகவும் சிக்கலானது என்று தெரிந்தது. அதனைவிட, என்னை நரம்பு சம்பந்தமான நோய்களுக்குச் சிகிச்சை செய்யும் நிபுணரும் பார்க்க வேண்டும்.

என் விபத்து குறித்து அனைத்து நிபுணர்களும் ஒன்று கூடிப் பேசினர். கூலிங்கிளாசில் குண்டுபட்டுத் திசைமாறி நெற்றியில் மண்டை ஓட்டின் பகுதியில் பாய்ந்திருந்தது. நெற்றியில் மண்டை ஓட்டுப் பகுதியில் ஆழமாகக் குண்டு பாய்ந்திருந்தது. எக்ஸ்ரே படம் எடுத்து மூளைக்கு ஏதாவது சேதம் ஏற்பட்டிருக்குமா என்று பார்க்க வேண்டும்.

அப்போதுதான் எனது மோசமான நிலைமையினை உணர்ந்தேன். அப்பவும் என் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று நினைக்கவேயில்லை.

சுமார் ஒரு மணி நேரத்திற்குள் என்னை அம்புலன்சில் ஏற்றிக் கொண்டு பழைய சேர்ச் தெருவிலிருக்கும் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். அங்குதான் நரம்பு சம்பந்தமானவற்றைக் கவனிக்கும் அறுவைச் சிகிச்சை நிபுணர் இருக்கின்றார்.

நான் படுக்கையில் படுத்ததும் இரண்டு இரகசியப் பொலிசார் வந்தனர். என்னை மடக்கி, மடக்கிக் கேள்வி மேல் கேள்விகளாகக் கேட்டனர்.

என் காதலன் வேண்டுமென்றே என்னைச் சுட்டுவிட்டதாக அவர்கள் நினைத்தனர்... அப்படி எதுவுமேயில்லை. அது எதிர்பாராத நிகழ்ச்சி என்று திரும்பத் திரும்பச் சொன்னேன். நான் சொன்னதில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

அவர்கள் என்னைக் கண்காணிக்கத் தொடங்கினர். நான் கண் விழித்த போதெல்லாம் அவர்களில் ஒருவர் என் அருகில் நிற்பார். கேள்விக் கணைகளைத் தொடுப்பார். எனக்கு காயத்தின் வேதனை, வலியைவிட இவர்களின் தொல்லை பெரிய தலையிடியாக இருந்தது. என்ன செய்ய முடியும்? அது அவர்களது கடமை போலும். எனக்குச் சத்திரசிகிச்சை நடக்கும் வரை பொலிசாரின் விசாரணை தொடர்ந்தது. எனக்கு வெறுப்பே ஏற்பட்டது.


சத்திரசிகிச்சை முடிவடைந்து நான் படுக்கைக்கு வந்ததும் டொக்டரிடம் "என்னைத் தாக்கிய குண்டு எங்கே?" என்று கேட்டேன். எனது படுக்கைக்கு அருகில் ஒரு சிறிய ஜாடி இருந்தது. அதில் என் நெற்றியில் பாய்ந்திருந்த குண்டின் பெரும்பகுதி கிடந்தது.

குண்டின் தலைப்பாகம் இன்னும் என் மண்டை ஓட்டினுள்ளேயே இருந்தது. அது மண்டை ஓட்டினுள் கெட்டியாகப் புதைந்திருந்தது. டொக்டரின் முயற்சி பலனளிக்கவில்லை. என் மூளைப்பகுதிக்கு அதனால் அபாயம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

சில சமயம் குண்டின் ஈயம் மூளையைப் பாதிக்கலாம். ஈய நஞ்சுத் தன்மையால் ஆபத்து அல்லது வேதனை தரும் கழலையாகவே உருவாகலாம்.

எந்தவழியிலும், நான் பிழைக்க அவர்கள் உறுதியளிக்கவில்லை.

இது நடந்தது 2002 ஆம் ஆண்டில்.



அப்போது அவர்கள் நான் இன்னும் பத்து ஆண்டுகள் வரையில் தான் உயிரோடு இருக்கலாம் என்று கூறினார்கள்.

இப்போது ஒன்பது ஆண்டுகள் கடந்து விட்டன.

மூளைப் பகுதியில் மண்டையோட்டினுள்ளிருக்கும் குண்டினால் தொந்தரவு என்றால் அவர்கள் மீண்டும் அறுவைச் சிகிச்சை செய்வார்கள். ஆனால் அப்போது நான் பிழைப்பது என்பது நூற்றில் ஐந்து சதவீதம் தான்.

என்னை மோசமானவளாகக் கருதாதீர்கள். அனுதாபமும் காட்டாதீர்கள். நான் உயிர்வாழ்ந்து நல்லவிதமாக இருந்தாலே போதுமானது. காதலன் சுமித்தும் வேறொருத்தியைத் திருமணம் செய்துவிட்டான். அதில் எனக்கு எதுவித கோபமுமில்லை. மரணத்தை எந்நேரமும் எதிர்பார்த்தபடி வாழும் எனக்கு ஓர் இல்லற வாழ்க்கை அவசியம் தானா?

விபத்து ஏற்பட்டு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் என்னிடம் ஒரு அறுவைச் சிகிச்சை நிபுணர் மரணத்திற்குப் பிறகு தலைப்பகுதியை மருத்துவமனைக்குத் தானமாகக் கொடுக்க முடியுமா என்று கேட்டார். அது மாணவர்களின் போதனைக்குப் பயன்படும் என்றார்.

எனக்கு ஏற்பட்ட விசித்திரமான விபத்தைக் கூறவில்லை. நான் தொடர்ந்து வேலைக்குச் செல்கிறேன். எந்தச் சலுகையையும் கேட்கவில்லை. என் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான நாட்களும் இருந்தன. துன்பமயமான நாட்களும் இருந்தன. என் உடல் ஆரோக்கியம் சீர்கெட்டு வருகிறது. மரணம் என்னை நெருங்குவதை நான் உணர்கிறேன். என்ன செய்வது? இதுதான் வாழ்க்கை!

தமிழில் – ஜெகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# அறியாமை

காலை இளந்தென்றல் சுகமாய் வீசுகின்றது. மக்கள் இயந்திரம் போல் தொழிற்பட ஆரம்பித்து விட்டார்கள். வாகனங்கள் வருவதும் போவதுமாக இருக்கின்றன. பழக்கப்பட்ட வாழ்க்கையை மக்கள் தொடர்ந்து பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

நகர்ப்பகுதியின் சந்தையை அண்டிய சைக்கிள் தரிப்பிடத்தில் கணேசன் அமர்ந்திருக்கிறான். மிதிவெடியில் ஓர் காலை இழந்து, துண்டை விரித்து பிச்சை எடுக்கும் நிலைக்கு அவன் மாற்றப்பட்டான். அவனுடைய பொய்க்காலுக்கு முன்னே விரிக்கப்பட்ட துண்டில் சில ரூபாய் நாணயங்கள் அவனைக் கேலியாய்ப் பார்த்து சிரிப்பது போல் அவன் உணர்ந்தான்.

"அம்மா, ஐயா" என்ற யாசித்தலுக்கு சனங்கள் பெரிதாக இரங்குவதாக இல்லை. இவனைச் சிலர் கண்டும் காணாததுமாகச் சென்றார்கள். மிதிவெடியில் சிதைந்தகாலை அவன் வருடிப் பார்க்கும் போதெல்லாம் வேதனையால் அவன் கண்களில் கண்ணீர் முட்டும்.

விதி செய்த சதியா, அல்லது நான் செய்த பாவமா என அவன் மனம் கேள்வி கேட்கும். அவனைப் போல் எத்தனையோ மக்கள் இந்த அவல நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இது தமிழ்மக்களுக்கு கிடைத்த சாபக்கேடு தானே! இதை மாற்றியமைக்க யாராலும் முடியாதா? முடியும் என்று அவன் மனம் சில நேரங்களில் ஆறுதலடையும். நாம் ஒன்றுபட்டால், நாம் ஓரணியில் திரண்டால் முடியாதது ஒன்றுமில்லை. நிச்சயமாக இந்த நிலையை மாற்றியமைக்கலாம். இந்த நம்பிக்கை அவன் சோகத்தைச் சிறிது சிறிதாகக் குறைக்கத்தான் செய்கின்றன.

பசியுணர்வு தலைகாட்ட கணேசன் பக்கத்திலே இருக்கின்ற கந்தசாமியின் கடைக்குச் சென்றான்.


"கந்தசாமியண்ணை ஒரு வடையும் தேத்தண்ணியும் தாங்கோ" பரிவாகக் கேட்டது பழகிப் போன கணேசனின் மிருதுவான குரல்.

"உ திலை இரு தரல்லாம்" அலட்சியமான குரல். யாரையும் மதிக்காத தன்மை, அடங்காத்தனம், வரட்டுக் கௌரவம் இவைகள் கந்தசாமிக்கு அதிகம் என கணேசன் நினைப்பதுண்டு. மனித நேயம் அறியாதவர்கள் மனிதர்களிலே வேறுபாடு உணர்வு கொள்பவர்கள். கடவுள் படைப்பிலே வேறுபாட்டையும், வேற்றுமைகளையும் காண்பவர் எப்படி மனிதனாய் இருக்க முடியும்? மதிகெட்ட மனித ஜென்மங்கள். மகாகவி பாரதியாரின் ஓர் பாடல் இவன் காதுகளில் அடிக்கடி ரீங்காரமிடும். 'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதனை நினைத்து விட்டால்'

கந்தசாமியண்ணையின் ரேடியோவில் சில நேரங்களில் இந்தப்பாடல் ஒலிபரப்பாகும்போது இவன் மிக விரும்பிக் கேட்பதுண்டு.

கொடுக்கப்பட்ட வடையைச் சுவைத்தபடி தேநீரை அருந்தினான் கணேசன்.

அம்மா சொல்லக் கூடாது கந்தசாமியண்ணையின் வடை தனி ருசியானது. கணேசன் தன் மனத்திற்குள்ளே சொல்லிக் கொண்டான். இன்னொரு வடை சாப்பிட மனம் இருந்தாலும் கிடைத்த சில்லறைகள் போதுமானதாக இருக்கவில்லை! திரும்பவும் அவன் பழைய இருப்பிடத்திற்குச் சென்றான்.



இன்று தீபாவளித் திருநாள் கணேசனின் மனத்திற்கு எந்தக் குதூகலத்தையும் அளிக்கவில்லை. பெண்கள் புதுப்புடைவைகள் உடுத்தி, தலைநிறைய பூ வைத்து, திலகமிட்டு நிறைய நகைகளை அணிந்து கொண்டு சந்தையின் உட்புறத்தேயுள்ள பழக்கடையில் வாழைப்பழம், வெற்றிலைப் பாக்கு, ஊதுபத்தி,கற்பூரம், சாத்துப்பட்டு என்பன வாங்கிக் கொண்டு வெளியேறுவது இன்று மும்முரமாய் இருந்தது. சந்தையை விட்டு வெளியேறும் பெண்கள் அவனைத் தாண்டித்தான் செல்ல வேண்டும்.

"அம்மா" என்ற அவன் அழைப்பு. சிலரால் சில நாணயக்குற்றிகளை அவன் முன்னே வீசியெறியத்தான் முடிகின்றதே தவிர பெரிய தொகையாக எதையும் பெற வைக்கவில்லை. விரைவாக கோயிலுக்குப் போய் வழிபட வேண்டுமென்ற அவசரம் அவர்களுக்கு. இந்தப் பிச்சைக்காரனை கணக்கில் எடுப்பதற்கு என்ன இருக்கின்றது.

எது உண்மையான வழிபாடு? விக்கிரகத்திலே தெய்வத்தைக் காண ஓடுவதா? அல்லது தாங்கள் சுயநல தேவைகளை நிறைவு செய்வதற்காக ஒரு தெய்வம் தேவை என்பதா? இது தானா உண்மையான வழிபாடு?

'மனத்தூய்மை, பிறருக்கு நன்மை செய்வது. இதுவே எல்லா வழிபாடுகளின் சாரமாகும். ஏழையிடமும், பலவீனரிடமும் நோயுற்றோரிடமும் சிவபெருமானைக் காண்பவனே உண்மையில் சிவபெருமானை வழிபடுகிறான்' சுவாமி விவேகானந்தரின் அருள் மொழிகள் இந்த மனிதர்களுக்கு கேட்கவில்லையா? தாம் வேண்டுபவற்றைக் கொடுக்கவில்லை என்றால் தெய்வ நம்பிக்கை அற்றுப் போய் விடுகிறது. பணமும், வேறு உதவிகளும் கிடைக்காமல் வேறு மார்க்கம் சென்று விடுகின்ற மடமை, கேவலம் நமக்குள்ளே இருக்கின்றது.

'அழியாத பேரின்பத்தின் குழந்தைகள் நாம்' என்றுரைத்த வீரத்துறவியின் பொருள் பொதிந்த வார்த்தைகளை விளங்கிக் கொள்ள முடியாதவர்களாகி விட்டார்களே!


கணேசனின் சிந்தனைகளுக்கும் வேதனைகளுக்கும் எல்லையில்லாது போய் விட்டன. அழியாத பேரின்பத்தின் குழந்தைகளில் நானும் ஒருவன் தானே! என்னைப் போல் உள்ளவர்களில் ஏன் இரக்கமற்றவர்களாக இருக்கிறார்கள்.

சடசடக்கும் வெடியோசைகள் இவன் சிந்தனைகளை இடைமறிக்கின்றன. சந்தியிலே நிற்கும் இளைஞர்கள் வெடிகள் கொழுத்தி மகிழ்ச்சி அடைகின்றார்கள். பணம் எப்படி வருகின்றது எப்படி செலவாகின்றது என்பதை அறிந்து கொள்ள முடியாதவர்களாகி விட்டார்கள் நம் வருங்கால வாலிபர்கள்.

கரியாகச் செலவழியும் பணத்தையேனும் எமக்கு கரிசனை காட்டித் தரக்கூடாதா கணேசனின் மனம் எரிந்து வெடிக்கும் வெடிபோல் உடைந்து சிதறுகிறது.

ஆ.வடிவேலு

# பிச்சை...!



...ந்தப் பேருந்து நிலையத்தில், பேருந்துக்காகக் காத்துக் கொண்டிருந்தேன், உச்சி வெயில் மண்டையைப் பிளந்தது, வழிந்த வியர்வையைத் துடைத்தபடியே பேருந்து வருகிறதா எனப் பார்த்துக் கொண்டிருந்தேன். யாரோ சட்டையைப் பிடித்து இழுப்பது போல் உணர்ந்து திரும்பிப் பார்த்தேன்.

"அய்யா... அய்யா.." தட்டை ஏந்தியபடி பிச்சையெடுக்கும் கிழவி.

"சில்லறை இல்லை போ" என்று என் காத்திருத்தலின் எரிச்சலை அவளிடம் காட்டினேன்,

நாயாகக் கெஞ்சிக் கொண்டிருந்தாள் கிழவி. இருக்கிற எரிச்சலில் இது வேறு முணுமுணுத்தபடியே சட்டைப் பையில் இருந்த நூறு ரூபாய், ஐம்பது ரூபாய் நோட்டுகளை கையில் எடுத்து வைத்துக் கொண்டு பையைத் துழாவினேன். இருந்த சில்லறைக் காசில் தேடிப் பிடித்து ஒரு ஐம்பது சதத்தை எடுத்துத் தட்டில் போட்டேன்.

ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு கிழவி நகர்ந்தாள்.

திடீரென நான் நின்று கொண்டிருந்த நடைமேடைக்கு எதிரே பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்கள் சிலரும் நின்று கூடினர். அவர்களின் கையில் 'வெள்ள நிவாரண நிதி' என்று எழுதி[...] வைத்திருந்தனர்.

ஆசிரியர் ஒருவர்' சமீபத்தில் பெய்த மழை வெள்ளத்தால் ஏற்பட்ட அழிவுகளையும், அதனால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்களையும் உருக்கமாக எடுத்துக்கூறி இறுதியாக "எங்கள் மாணவர்கள் உங்களிடம் உண்டியல் ஏந்தி வருவார்கள். தாங்கள், தங்களால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

மாணவர்கள் நாலாபக்கமும் உண்டியலை ஏந்திச் சென்று கொண்டிருந்தனர். நான் நின்று கொண்டிருந்த நடைமேடைக்கும் ஒருவன் வந்து கொண்டிருந்தான்.

இவங்களுக்கெல்லாம் வேறு வேலை இல்லை என்று நினைத்தபடியே பேருந்து வருகிறதாவெனப் பார்த்துக் கொண்டிருந்தேன்,

எங்க ஊர் பேருந்தைத் தவிர மற்ற அனைத்துப் பேருந்துகளும் வந்து போய்க் கொண்டிருந்தன.

அதற்குள் உண்டியல் ஏந்திய மாணவன் என்னை மிக நெருங்கி விட்டான். என்னிடம் வருவதற்குள் பேருந்து வந்து விட வேண்டுமென்று படபடப்போடு பேருந்து வருகிறதாவெனப் பார்த்தேன்.

சனியன் பிடித்த பேருந்து இன்னும் வரவில்லை,

மாணவன் என்னை நெருங்க நெருங்க, நான் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டேன். அப்படியே என்னிடம் கேட்டாலும் இல்லையென சொல்லிட வேண்டியதுதான் என நினைத்தபடியே நின்றுகொண்டிருந்தேன்.

"தம்பி" என யாரோ கூப்பிடுவதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். சற்று முன் என்னிடம் பிச்சை கேட்ட கிழவி அந்த மாணவனைக் கூப்பிட்டு தன் தட்டில் உள்ள சில்லறைகளையெல்லாம் அந்த உண்டியலில் போட்டுக் கொண்டிருந்தாள்.

[...]என் முகத்தில் காறி உமிழ்ந்தது போல் இருந்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26

# மௌன மனவெளிகள்

தங்கவேலுக்குக் கடிதம் அனுப்பி ஒரு வார மாகியும் எவ்வித பிரதிபலிப்பும் இல்லாமலிருந்தது சொர்ணத்திற்குப் பெரும் ஏமாற்றமாக வேயிருந்தது. அவள் அக்கடிதத்தில் தன்னைத் தொடர்ந்து படிக்க அனுமதிக்காதது பற்றிக் குறிப்பிட்டு விட்டு தங்கவேலின் தகப்பன் சுந்தரமூர்த்தி வந்து தனது தகப்பனிடம் கதைத்து சம்மதிக்க வைக்கும் படி கேட்டிருந்தாள். பிரதான தடைக்கல்லாகப் பாட்டியே இருக்கிறாள் என்பதை அவள் சுட்டிக் காட்டவும் தவறவில்லை. அவள் கடிதம் கிடைத்த அடுத்த நாளிலேயே அவர்களை எதிர்பார்த்தாள். பாடசாலையும் முதலாம் தவணை லீவு விட்ட படியால் தங்க வேலையும் நேரில் சந்திக்க முடியவில்லை.

இளையவன் காயம் பட்ட பின்பு அன்றுதான் மீவலுக்கு வந்திருந்தான். அவனைக் கண்டதுமே சொர்ணம் போய் சங்கடப்படலையடியிலேயே வழி மறித்தாள். அவள் சுற்றும் முற்றும் பார்த்து ஒருவரும் இல்லையென்பதை உறுதி செய்த பின்பு தாழ்ந்த குரலில் "இளையவன் நான் தந்த கடிதம் பெட்டியிலை போட்டு விட்டனியே" எனக் கேட்டாள்.

இளையவன் "ஓம் பிள்ளை.. அண்டைக்கே ஆஸ்பத்திரிக்குப் போகேக்கை முத்திரை ஒட்டிப் போட்டிட்டுத்தான் போனனான்" என்றான்.

"அப்ப சரி" என்று விட்டு அவள் உள்ளே திரும்ப முயன்ற போது கார்ச்சத்தம் கேட்டுக் கிலி ஒழுங்கையை எட்டிப் பார்த்தாள். அங்கே சுந்தரமூர்த்தியின் மஞ்சள் ஏ-10 வாகனம் வந்து கொண்டிருந்தது.

கார் படலைக்குள் வந்து நின்றதும் அதிலிருந்து தங்கவேலும் சுந்தரமூர்த்தியும் இறங்கினர். அவளால் மகிழ்ச்சியைத் தாங்கமுடியவில்லை.

"வாங்கோ மாமா.." என்று விட்டு பலத்த குரலில் "பாட்டி ஐயாவிட்டை சுந்தரலிங்கம் மாமா வந்திருக்கிறார் என்று சொல்லிவிடனை" எனச் சத்தமிட்டாள்.

இருவரையும் முன் விறாந்தைக் கதிரைகளில் அமரும்படி சொல்லி விட்டு உள்ளே போனாள் சொர்ணம். பின் விறாந்தையில் இருந்த விதானையார் எழுந்து முன் பக்கமாகப் போனார்.

ஒரு புன்சிரிப்புடன் வந்த விதானையார் "வாருங்கோ வாருங்கோ நல்ல நாள் பார்த்துத் தான் வந்திருக்கிறியள்" என்றார்.

சுந்தரமூர்த்தி சிரித்தவாறே "எனக்கு உந்த நாள் நட்சத்திரங்களிலை நம்பிக்கையில்லை. நல்ல மனதோடை புறப்பட்டால் எல்லா நாளும் நல்ல நாள் தானே?" என்றார். விதானையாரும் அதை ஆமோதிப்பது போல் ஒரு மெல்லிய புன்னகையை முகத்தில் தவழ விட்டார்.

சுந்தரமூர்த்தியின் கம்பீரமான நிமிர்ந்த உடலும் பெரிய மீசையும் அதன் கீழ் பல்வரிசையில் ஒரே ஒரு தங்கக் கட்டுப் பல்லும் அவருக்கு ஒரு தனி ஆளுமையைக் கொடுக்கிறது.

அவர்கள் பொதுவான விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்த போது சொர்ணம் பெரிய பித்தளை மூக்குப் பேணியில் பால் தேநீரைக் கொண்டு வந்து வைத்தாள்.

அவளை நிமிர்ந்து பார்த்த சுந்தரலிங்கம் "சொர்ணலட்சுமி.. தங்கவேலை கூட்டிக் கொண்டு போய் கதைச்சுக் கொண்டிருங்கோ நானும் உங்கடை அப்பாவும் கொஞ்சம் தனியக் கதைக்கப் போறம்" என்றார்.

"சரி மாமா..." என்று விட்டு தங்கவேலுக் கான பேணியை தானே கையில் எடுத்துக் கொண்டு "வாங்கோ" என அழைத்தாள். அவனும் எழுந்து அவளின் பின்னால் போனான். பின் விறாந்தையில் கிடந்த கதிரை ஒன்றை எடுத்துக் கொண்டு போய் மாமரத்தின் கீழ் போட்டு அவனை அமரும்படி கூறிவிட்டு விறாந்தைப் படியில் வைத்த தேநீரை எடுத்து வந்து அவனிடம் நீட்டினாள்.

"நீங்கள் நிற்கவே போறீங்கள்" எனக் கேட்டான் தங்கவேல். "இஞ்சை இருக்குது என்ரை சிம்மாசனம்" என்று விட்டு அருகில் மாமரக் கிளையில் தொங்கிய ஒற்றைக் கயிறு ஊஞ்சலில் அமர்ந்து கொண்டாள்.

தங்கவேலுக்கு அந்த மூக்குப் பேணியில் தேநீர் குடிப்பது மிகவும் சிரமமாகவே இருந்தது. அதைக் கவனித்த சொர்ணம் "வாயை வைத்துக் குடியுங்கோ" என்றாள்.

ஒருவாறு தேநீரைக் குடித்து முடித்துவிட்டு தங்கவேல் கேட்டான் "உங்கடை வீட்டிலை கிளாஸ் பாவிக்கிறேல்லையே?"

அவள் "இல்லை நாங்கள் வீட்டிலை சுண்டுக் கோப்பை பாவிப்பம். ஆரும் எங்கடை ஆக்கள் வந்தால் பித்தளை மூக்குப் பேணி. மற்றவைக்கு தகர மூக்குப் பேணி" என்றாள்.

"மற்றவை எண்டால்...?" எனப் புருவத்தை உயர்த்தியவாறு கேட்டான் தங்கவேல்.

"மற்றவை எண்டால்..." என்று விட்டுச் சிறிது தயங்கிய சொர்ணம் பின், "அது சீவல்காரர், முடிவெட்டுற ஆக்கள் போலை இருக்கிறவை" என்றாள்.

"அப்படியெண்டால் நீங்கள் பெரிய சாதித் தடிப்புப் பிடிச்ச ஆக்கள் போலை?" என்று உடனடியாகவே கேட்டு வைத்தான் அவன். சொர்ணம் ஒரு பெரு மூச்சுடன் சொன்னாள் "ம் பாட்டி, அம்மா எல்லாரும் அப்படித்தான். ஐயாவுக்கு வெளியிலை மட்டும் தான் சாதி. மனதிலை இல்லை..."

"அப்ப உங்களுக்கு...?"

சில வினாடிகள் மௌனத்தின் பின் சொர்ணம் உறுதியுடன் சொன்னாள் "நான் கலியாணம் கட்டுறதெண்டால் ஒரு குறைஞ்ச சாதிக்காரனைத் தான் கட்டுவன். இல்லாட்டில் இப்படியே இருப்பன்."



தங்கவேல் அதிர்ந்து போய் "நீங்கள் என்ன சொல்லுறியள்" என்றான்.

அவள் நிதானமாகச் சொன்னாள் "இப்ப எனக்குக் கலியாணம் பற்றி யோசிக்கிற வயதில்லை. ஆனால் அந்தக் காலம் வரயுக்கை அப்படித் தான் செய்வன்"

தங்கவேல் சற்றும் இப்படியெல்லாம் அவள் கதைப்பாள் என எதிர்பார்க்கவேயில்லை. உலகையே தன் காலடியில் விழுத்தி விடும் அவளின் அந்தப் புன்னகையை மட்டுமே இதுவரைக்குக் கண்ட அவன் அவளுள் இப்படி ஒரு ஆழம் இருக்கும் என எதிர்பார்க்கவேயில்லை.

அவன் ஒரு மெல்லிய தயக்கத்துடன் "சொர்ணம் உங்கடை குடும்பத்தைப் பொறுத்த வரையிலை உது ஒரு பெரிய விஷப்பரீட்சை" என்றான்.

"தெரியும். தெரிஞ்சதாலை நான் என்ரை மனதுக்கு விலங்கு போடப்பார்க்கிறன் முடியேல்லை...?"

"முடியும்....?"

"எப்படி..." என்று கேட்டாள் சொர்ணம் விழிகளை அகல விரித்தபடி.

"நான் இப்ப சொல்ல விரும்பேல்லை. ஏனெண்டால் எனக்கும் காதல் கலியாணம் இவையைப் பற்றி இப்ப முடிவெடுக்கிற வயதில்லை" என்றான் தங்கவேல் நிதானமாக. அவனின் மனதில் இருப்பது என்னவென்று அவளுக்குப் புரிவது போலிருந்தது. ஆனால் அது பற்றி மேலும் கதைக்க அவள் விரும்பவில்லை.

"ஓமோம் எங்கள் இரண்டு பேருக்குமே இப்படி இதுகளைப்பற்றி கதைக்கிற வயதில்லை. படிக்கிறதைப் பற்றிக் கதைக்கிறதை விட்டிட்டு என்னவோ அலம்பிக் கொண்டிருக்கிறோம். நல்ல பகிடிதான்" என்று விட்டுப் பலமாகச் சிரித்தாள் சொர்ணம்.

"சில வேளை பகிடியுக்கையும் சில உண்மையள் இருக்கும்" என்று விட்டு அவனும் சிரித்தான்.

பலமாகச சிரித்ததில் சொர்ணத்திற்கு புரக்கேறி இரும ஆரம்பித்து விட்டது. தங்கவேல் அவளின் உச்சந்தலையில் தட்டி "செருமுங்கோ.. செருமுங்கோ" என்றான்.

சீவி முடித்து விட்டு வந்த இளையவன் கண்களில் அந்தக் காட்சி பட்டு விட்டது. அவன் உச்சியில் தட்டிய அந்தத் தட்டை இளையவன் தனது நெஞ்சில் உலக்கையால் அடித்த அடியாகவே கருதினான். அவன் முகம் ஒடிக் கறுத்து விட்டது.

ஒருவாறு இருமல் முடிவுக்கு வர சொர்ணத்தின் கலங்கிய கண்களில் இளையவன் பட்டுவிட்டான். தலையைத் தட்டிய தங்கவேலின் கையைத் தன்கையால் பிடித்து நீக்கி விட்டு அவள் "இளையவன் இஞ்ச வா!" என்று கூப்பிட்டாள்.

இளையவன் எதுவும் பேசாமலே அருகில் வந்து நின்றான்.

சொர்ணம் தங்கவேலுவிடம் "இவன் தான் நான் உங்களுக்கு எழுதின கடிதத்தைப் பெட்டியிலை கொண்டு போட்டது. நான் கடிதத்தை குடுக்க ஆள் வேறை மாதிரி யோசிச்சிட்டுது" என்றாள்.

தங்கவேல் இளையவனைப் பார்த்து சிநேகபூர்வமாக ஒருமுறை சிரித்தான்.

சொர்ணம் தொடர்ந்தாள் "தங்கவேல் அப்பிடி ஒண்டும் இல்லை எண்டு இவனட்டை சொல்லி விடுங்கோ..."

தங்கவேல் சொர்ணம் தன்னை சரியான இக்கட்டில் மாட்டிவிட்டதாகவே உணர்ந்தான். அவன் மனதில் சொர்ணம் பற்றிய ஒரு சலனம் நீண்டகாலமாகவே இருந்து வருகிறது. எப்படி அவனால் அப்படி இல்லையென்று மறுதலிக்க முடியும்.

சில வினாடிகள் மௌனத்தின் பின் தங்கவேல் "சொர்ணம் அப்படியான பிள்ளை இல்லை" என்றான்.

இளையவனுக்கு தங்கவேல் சொர்ணத்திற்கு தலையில் தட்டிய போது ஏற்பட்ட கோபம் மனதில் குமைந்து கொண்டிருந்தது.

"தம்பி இதெல்லாம் பெரிய இடத்து விஷயம். இதிலை நல்லது கெட்டது சொல்ல நாங்கள் ஆர். நான் வாறன்!" என்று சொல்லி விட்டு அவன் அவ்விடத்தை விட்டு நடக்கத் தொடங்கினான்.

சொர்ணம் இப்படியான ஒரு அதிரடியை இளையவனிடம் எதிர்பார்க்கவேயில்லை. அப்படியே திகைத்துப் போய் நின்று விட்டாள்.

இப்படியாக மாமரத்தடியில் வெளிவராத உணர்வுகள் மௌனமாகவே ஒன்றுடன் ஒன்று இணையவும் முடியாமல் பிரியவும் முடியாமல் பின்னுப்பட, முன் விறாந்தையில் சுந்தரம் சொர்ணத்திற்காகத் தனது காய்களை நகர்த்திக் கொண்டிருந்தார்.

"அப்ப விதானையார்... பிள்ளையை எந்தப்பள்ளிக்கூடத்திலை சேர்க்கலாம் எண்டு யோசிக்கிறியள்?" எனக் கேட்டார் சுந்தரமூர்த்தி.

"படிப்பிக்கிறதோ இல்லையோ எண்டே இன்னும் முடிவு செய்யேல்லை" என இழுத்தார் விதானையார்.

"என்ன விதானையார் நீங்கள் ஒரு படிச்ச மனுஷன் அந்தப் பிள்ளையின்ரை திறமையை வீணாக்கப் போறியளே?"

"எனக்கு விருப்பம் தான். ஆச்சி தான்" என்று விட்டு இடை நிறுத்தினார் விதானையார்.

"என்ன ஆச்சியோ. நான் கதைக்கிறன்" என்று விட்டு எவரின் அனுமதியையும் எதிர்பாராமலே எழுந்து உள்ளே போனார் சுந்தரமூர்த்தி.

(தொடரும்)

நா.யோகேந்திரநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்

## மௌனத்தின் மொழிகள்



காரணம் இன்றி
கண்ணீர் சிந்துகிறேன்!
காகிதம் இன்றியும்
கவிதை தொடுக்கின்றேன்!
புரிதல் அற்ற
பிரிதலுக்காய்
வெற்றுத் தாள்கள்
விரதம் இருக்கின்றன...
ஆனபோதும்...!
மௌனத்தின் மொழிகள் மட்டும்
மௌனித்துக் கொள்கின்றன.

வே.ஜெயப்பிரியா
திருவையாறூர்.

## நடிப்புச் சுதேசிகள்



பதவியிலிருக்கும் போது
சுயசிந்தனையும்
பயனுக்கு வருவதில்லை!

நீலிக்கண்ணீர் வடிக்கும்
ஏப்பம் பட்டவர்கள்
வாலில்லாத பட்டம்
போன்றவர்கள்!

சர்வ அதிகாரமும்
தன்கையில் இருக்கும் போது
நன்மையான
செயற்பாடுகளை
நாட்டுக்குச் செய்ய மாட்டார்கள்!

கன்றாவிப் பதவி அவர்கள்
கண்ணை மறைந்து விடும்
முன் யாக்கிரதையாக
தேசியப் பிரச்சினையை
தீர்க்காமல் சும்மா
காலத்தைக் கடத்தி பதவி
காத்துக் கொள்வார்கள்
பதவி போன பின் நல்லவர்களாக
பவ்வியமாய்ப்பார்கள்.

– செவனப்பூர்
[illegible]

## அந்த நாட்கள்



உதவி வரும் உதவி வரும்
உலக நாடுகள் உதவ வரும்.
என்று ஏங்கி ஏங்கி
காத்திருந்த எம்மைத் தேடி
ஓடி வந்தவை...
எறிகணைகளும் கொத்துக்
குண்டுகளும் தான்.
பிஞ்சுக் குழந்தைகள்
பெரியவர்கள் என்று
வஞ்சகம் காட்டாமல்
அவை வந்து எம்மை
அரவணைத்த போது
எழுந்த மரண ஓலங்கள்
கடவுளே.....
நினைத்துப் பார்க்கவே
முடியாதவை.
விழுந்து துடித்து
இறந்த உடல்களில்
தடுக்கி விழுந்து
தடுமாறிய படி
உயிர் காப்பதற்காக
நாம் ஓடிய ஓட்டம்
வாழ் நாளில் என்றுமே
மறக்க முடியாதவை.
அவலங்கள்... அழுகுரல்கள்
அம்மா...அப்பா...தம்பி...
தங்கச்சி என்ற
அழைப்புக் குரல்கள்...
அவல அலறல்கள்
எமக்கென்றொரு
சொந்த மண் கிடைத்தால்...
இவையே எமது தேசிய கீதமாக
ஒலிக்க வேண்டும்.
எமது விடிவிற்காக
நாம் பட்ட இன்னல்கள்
வரலாறாகி....
எம் எதிர்கால வரவுகளின் காதில்
என்றுமே ஒலித்துக்
கொண்டிருக்க வேண்டும்
வைகாசியின் இருண்ட
நாட்களே
எமது விடியலின்
விடிவெள்ளிகள்.

- புதுக்கவி

## அன்பு



தாயின் அன்பு
தாரகை போல எண்ணமுடியாது.
தந்தையின் அன்பு
தரணியைப்போல மிகப்பெரியது.
அண்ணனின் அன்பு
ஆறுகளைப் போல நீளமானது.
அக்காவின் அன்பு
அம்மாவின் அன்புக்கு நிகரானது.
தம்பியின் அன்பு
தங்கக் குடம் போல பெறுமதியானது.
தங்கையின் அன்பு
உமிழ் நீர் போல சுரந்து கொண்டிருக்கும்.

– கலைச்சித்ரா
கல்வெட்டித்திடல்

## யாரிடம் சொல்வோம்



அலைக்கழிக்கப்பட்ட
அற்புதத்திருவந்தாதியாய்
எம் தமிழிச்சிகள்
உங்கள் கண் முன்னே.
கண்டு கொள்ள உங்களுக்கு
கணப்பொழுதும்
நேரமில்லை...
விடியலுக்காய்
வெள்ளைச் சேலை
அணிந்தவர்களை
படுக்கைக்கு அழைக்கும்
நீங்கள்
தாலி அறுத்தவளானாலும்
தரம் குறைந்தவர்கள்.
அவள் வறுமையிலும்
தனிமையிலும்
பங்கு கொள்ளாத நீங்கள்
மலர் கொடுக்கிறீர்கள்
இயேசு பாதி
இடியமீன் பாதி என்ற வேடத்தில்
உங்கள் கால்கள்
இலக்கில்லாமல்
பயணிக்கின்றன
அது மீதமிருக்கும்
எம் உறவுகளை தின்பதற்கா..?

க.லோகேஸ்வரன்
– நெடுந்தீவு –

## இதயம் வரை நனைகிறேன்



மௌனம் கலந்த
ஜாமத்தின் நிசப்தமான
அந்தப் பொழுதுகளில்
ஒரு புல்லாங்குழலின் ராகம்
என் வாசல் வரை வந்து
சொல்லிச் செல்கிறது
எனக்காக என்னவன்
காத்திருக்கிறான் என்று...
தூக்கங்கள் கலைந்து போன
பின்னும் என் கனவு தேசத்தில்
தூறல்கள் விழவில்லை
இதயம் வரை நனைகிறேன்
நான் என்றும்
உன் நினைவுகளுடன்.....

பிரியா
[illegible]

## எப்படி மறைப்பாய்...?

நீ
என கடிதங்களை கிழித்திருக்கலாம்
என் கனவுகளைத் தகர்த்திருக்கலாம்
காரணம் ஏதுமற்றே
எனைக் கைவிட்டுப் போயிருக்கலாம்
ஆனால்.....
என் காதலைச் செப்பியே
தினசரி செய்தியாகும்
என் கவிதைகளை
எப்படி மறைக்கப் போகிறாய்...?

– எ.செல்விகள்
[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலக நாயகன் கமலஹாசனின் புதல்வியும் சர்ச்சைக்குரிய 3 படத்தின் நாயகியுமாகிய சுருதி ஹாசன் வெற்றியின் இரகசியங்களை பகிர்கின்றார்.......



தெலுங்கு சினிமாவின் 80 வருட வசூல் சாதனையை உடைத்த ரூகப்பார் சிங் படத்தின் ஹீரோயின்... ஸ்ருதிஹாசன். இந்த வெற்றியால் அளவுக்கு அதிகமாக உற்சாகமாக இருக்கிறார் ஸ்ருதிஹாசன். அவருடைய ஒவ்வொரு வார்த்தைகளிலும் வெடிக்கிறது வெற்றியின் சந்தோசம்.

**எதிர்பார்ப்பே இல்லாத சமயம் இப்படி ஒரு ஹிட்... எப்படி இருக்கு?**

அதுதான் சினிமாவோட அழகு. இதுக்கு முன்னாடி நான் நடிச்ச சில படங்கள் சரியாக ஓட வில்லை. அப்போ கொஞ்சம் வருத்தமாத்தான் இருந்தது. ஆனா, அதுக்கு யாரையும் குற்றம் சொல்ல முடியாது. எந்த சினிமா ஓடும், எது ஓடாதுனு யாராலயும் சொல்ல முடியாது. உழைப்பைக் கொட்ட வேண்டியது மட்டும் தான் ஒரு கலைஞனுடைய கடமை. அதனால, ஒவ்வொரு படத்துக்கும் சீரியசாக உழைச்சேன். அப்படித் தான் ரூகப்பார் சிங்குக்கும் உழைச்சேன். இந்தப் பிரமாண்ட வெற்றி... என்ன சொல்றதுனு தெரியலை... ரொம்ப சந்தோசம்! அப்பாவுக்கு இது ரொம்ப ரொம்ப சந்தோம். வெற்றியோ, தோல்வியோ எல்லாமே ஒரு அனுபவம்னு நினைப்பேன். தோல்வியை ஏற்றுகிட்ட மாதிரி இந்த வெற்றியைக் கொண்டாடுறேன்!

**விஸ்வரூபம் படத்துல உங்க பங்கு என்ன?**

எனக்கும் விஸ்வரூபத்துக்கும் துளி சம்பந்தம் கிடையாது. ஆனா, அப்பா படம் பற்றி நிறைய சொன்னார். கேட்கவே சந்தோசமாக இருந்துச்சு. சில படங்களை அப்பா தனக்காகவும் சில படங்களை ரசிகர்களுக்காகவும் செய்வார். விஸ்வரூபம் ரெண்டு பேருக்குமான படமா இருக்கும்!

**உங்களோட நடிச்ச ஹீரோக்களைப் பற்றி கொஞ்சம் கொஞ்சம் பகிர்ந்துகொள்ளலாமே?**

சூர்யா... எங்க குடும்ப நண்பன். சினிமா, நடிப்பு, தொழில்நுட்பம் என்று பல வியங்கள் சொல்லிக்கொடுத்தார். அவர்கூட இருக்கும்போது, குடும்பத்துல ஒருத்தர் பக்கத்துல இருந்து உற்சாகம் கொடுக்கிற மாதிரி இருக்கும். சித்தார்த், தனுஷ் நல்ல நண்பர்கள்! என்னைப் புரிஞ்சுக்கிட்டு விட்டுக்கொடுக்கிற நல்ல நண்பன். ஒரே வார்த்தையில் சொல்லணும்னா, எல்லாரும் எனக்கு நல்ல நண்பர்கள்!

**நீங்க இப்படிச் சொல்றீங்க. ஆனா, சித்தார்த்தோட சேர்ந்து வலம்வருதல், தனுோட லவ்னு நிறைய சர்ச்சைகள் ரவுண்ட் அடிக்குதே?**

என் மனசாட்சிக்கு என்னைத் தெரியும். சினிமாவில் என் லைஃப் ஆக்ஷன், கட் இரண்டுக்கும் நடுவில் மட்டும்தான் இருக்கு. வேற எந்த தனிப்பட்ட வாழ்க்கையையும் நான் இன்னும் தெரிவு செய்யவில்லை. நான் நினைச்சிருந்தா, வெளிநாட்டில படிச்சபோது காதலிச்சிருக்கலாம். ஆனால் இன்றைவரை அப்படி ஒரு எண்ணமே எனக்கு வரவில்லை. அப்போ மியூஸிக்ல பிஸியா இருந்தேன். இப்போ ஷூட்டிங்ல பிஸியா இருக்கிறேன். அவ்வளவுதான்!


**தனுஷ், ஸ்ருதி நெருக்கமா நடிச்ச காட்சிகளைப் பார்த்து இயக்குநர் என்பதை மறந்துட்டு, மனைவியா ஐஸ்வர்யா ரென்சன் ஆனாங்க. அதைத்தான் ஊடகங்கள் பெரிதுபடித்தின என்பதை கஸ்தூரி ராஜா சொல்லியிருக்கிறார். ஐஸ்வர்யா அப்படி எதுவும் ஃபீல் பண்ணினாங்களா?**

தனுஷ், ஐஸ்வர்யா ரெண்டு பேரும் கணவன், மனைவிங்கிறதைவிட, ஹீரோ, இயக்குநர் என்றுதான் சூட்டிங் ஸ்பாட்ல நடந்துக்கிட்டாங்க. 3 படத்தில் நடிக்க நான் சம்மதிச்சதே ஸ்கூல் பொண்ணு, மனைவி, விதவைனு மூன்று வேடங்களில் நடிக்கலாம் என்றுதான். ஐஸ்வர்யா எப்படி டைரக்ட் பண்ணுவாங்களோனு சந்தேகமா இருந்துச்சு. ஆனா, முதல் நாளே அவங்க நல்ல இயக்குநர் எண்டு தெரிஞ்சுக்கிட்டேன். படத்துல நடித்தபோது, நான் ஜனனி என்கிற கேரக்டரை மட்டும்தான் ஃபீல் பண்ணினேன். அவங்க என்னை ஸ்ருதியா பார்த்தாங்களா... அதனால ரென்சன் ஆனாங்களானு எல்லாம் எனக்குத் தெரியாது!

**இப்படி நிறைய சர்ச்சை வர்றதைப் பார்த்துட்டு அப்பா எதுவும் கேட்டாரா?**

உங்களுக்கு நான் ஸ்ருதி... அவருக்கு நான் மகள். நீங்க என்னை நம்பாம இருக்கலாம். ஆனா, அவர் எப்படி நம்பாம இருப்பார்? யாரையும் காதலிச்சா, நானே அப்பாகிட்ட சொல்லிடுவேன். அதனால, அவர் இதைப்பத்தி ஒரு வார்த்தைகூடக் கேட்கலை. கேட்கவும் மாட்டார்!

# உலக நாயகனின் 'கதக் டான்ஸ்'



கமல்ஹாசனின் விஸ்வரூபம் ஸ்டில்களைப் பார்க்க நேர்ந்தபோது ஒரு ஸ்டில் மட்டும் அப்படியே பார்வையை அங்கேயே நிலைக்க வைத்தது. காரணம், அது கமலா என்ற ஆச்சரியத்தால். அப்படி ஒரு உருமாற்றம் அதில்.

எதைச் செய்தாலும் A - Z சரியாக செய்ய வேண்டும் என்பதில் கமல் ஆர்வம் கொண்டவர் என்பது எல்லோருக்கும் தெரியும். அதையேதான் விஸ்வரூபத்திலும் அவர் செய்திருக்கிறார் என்பது படத்தின் ஸ்டில்களைப் பார்க்கும்போதே தெரிகிறது.

ஆன்ட்ரியா ஜெரிமியாவுடன் கதக் ஆடும் கமலைப் பார்க்கும் யாருக்குமே சற்றே ஆச்சரியம் பொங்குவதைத் தடுக்க முடியாது. ஆண்ட்ரியாவை விட கமல்ஹாசன்தான் இதில் அழகாக, நடனத்துக்கே உரிய பெண்மை மிளிர காணப்படுகிறார். நடனத்துக்கு முதல் முக்கிய விஷயமே 'அம்சம்', முக பாவனை, உடல் அசைவு. அவை அத்தனையும் கமல்ஹாசனிடம் அப்படியே பொருந்திப் போயிருக்கிறது இந்த ஸ்டில்லைப் பார்க்கும்போது. முழுமையான நெளிவு சுளிவுகளுடன், அட்டகாசமான உடல் வளைவுடன், அழகான டான்ஸராக இதில் ஜொலிக்கிறார் கமல்.

இத்தனைக்கும் இப்படத்தில் நடிக்கப் போவதற்கு முன்பு வரை கதக் குறித்து அவருக்கு ஏபிசிடி கூட தெரியாதாம். இந்தப் படத்துக்காகத்தான் கமல் கதக் கற்றுக் கொண்டார். கதக் மேதையான குருஜி பர்ஹு மஹராஜிடம் மிகக் குறுகிய காலத்திற்குள் இந்த நடனத்தைக் கற்றுக்கொண்டு அதை படத்தில் அழகாக பயன்படுத்தியிருக்கிறார். இந்த பர்ஹு மஹராஜ்தான், தேவதாஸ் படத்தில் மாதுரி தீட்சித்தை கதக் ஆட வைத்து அனைவரையும் மயக்கியவர்.

விஸ்வரூபம் படத்திலும் கமல்ஹாசன் ஆடும் இந்தக் கதக் நடனம் சூப்பர் ஹிட் விருந்தாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இந்த நடனக் காட்சியில் பர்ஹு மஹராஜின் கதக் பள்ளியைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட நடனக் கலைஞர்கள் வந்து [illegible] நடனத்திற்கும் பாடலுக்கும் மேலும் உயிர் கொடுத்துள்ளனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வு நேரத்தில் சாயி கோயிலுக்கு



திரையுலக பிரபலங்கள் தங்களுக்கு ஓய்வு கிடைத்தால் ரெஸ்ட் எடுக்க குடும்பத்துனோ, நண்பர்களுடனோ வெளிநாடுகளுக்கு பறந்துவிடுவார்கள். அங்கு சில நாட்கள் தங்கிவிட்டு புதுப்பொலிவுடன் நாடு திரும்பி மீண்டும் ஷூட்டிங் செல்வார்கள்.

ஆனால் அஜித் குமார் சற்றே வித்தியாசமானவராக உள்ளார்.

அவர் தனக்கு ஓய்வு கிடைத்தால் உடனே வெளிநாடுகளுக்கு பறப்பதில்லை. மாறாக மகராஷ்டிரா மாநிலத்தில் உள்ள ஷீரடி சாய்பாபா கோயிலுக்கு சென்று தரிசனம் செய்துவிட்டு வருகிறார். மேலும் சென்னையில் உள்ள சாய்பாபா கோயிலுக்கு செல்வதையும் வழக்கமாக கொண்டுள்ளார். அவர் ஓய்வெடுக்க வெளிநாடு செல்லாவிட்டாலும் தனது குடும்பத்தாரை லண்டனுக்கு அனுப்பி வைத்துள்ளார் ்ன்பது குறிப்பிடத்தக்கது.

# சினி.. பிட்ஸ்

## விஜய் பிறந்த நாளில் அஜித் பில்லா 2

அஜித் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்ப்பார்க்கும் பில்லா 2 ஜூன் 22 ஆம் திகதி உலகம் எங்கும் வெளியாகிறது. அதிகாரப்பூர்வமாக இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அஜித்துக்கு ஜோடியாக பார்வதி ஓமனக்குட்டன் நடித்துள்ளார். சக்ரி டோலட்டி இந்தப் படத்தை இயக்கியுள்ளார். யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். இன் என்டர்டெயின்மெட் தயாரித்துள்ளது. ஜூன் 22 அஜித்தின் திரையுலக போட்டியாளரான விஜயின் பிறந்த நாள் என்பது குறிப்பிடத்தக்கது.

## நமீதாவின் முதுகின் ரகசியம்

ஒருகாலத்தில் தமிழ்சினிமா ரசிகர்களைக் கைக்குள் வைத்துக்கொண்டிருந்த நடிகை நமீதாவிற்கு தற்போது எந்த ஒரு பட வாய்ப்புகளும் இல்லாமல் என்ன செய்வதென்று தெரியாமல் சுற்றிக்கொண்டிருக்கிறார் . சினிமா வாய்ப்புகள் இல்லாததால் கடை திறப்புவிழா போன்ற நிகழ்ச்சிகளில்தான் கலந்துகொள்கிறார். கடைதிறப்பு விழாவிற்கு சென்றால் வெறும் பணத்தை மட்டும் கொடுப்பதில்லை, பணத்தோடு கை நிறைய அன்பளிப்புகளையும் கொடுக்கிறார்கள். அதோடு வெளிநாடுகளில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு சிறப்பித்து வருகிறார். இதன் மூலம் அவர் சினிமாவில் சம்பாதித்ததை விட அதிகமாகவே சம்பாதிக்கிறார்.

இதற்கிடையே சினிமாவில் வாய்ப்புகள் குறைந்துள்ளது பற்றி அவர் ஒரு ஜோதிடரை சென்று பார்த்துள்ளார். அதற்கு அந்த ஜோதிடர் உங்கள் முதுகில் 27 நட்சத்திரங்களை பச்சை குத்தினால் வாய்ப்புகள் வந்து குவியும் என்று கூறியுள்ளார்.

உடனே நமீதாவும் தனது முதுகில் 27 நட்சத்திரங்களைப் பச்சைக் குத்திவிட்டார். வாய்ப்புகள் வருகிறதா.........? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்!

## தனுசுக் ந எதிராக வாலைக் கிளப்பும் சிம்பு


வாலு படத்தில் ஹன்சிகா பேசும் ஒரு வசனத்தால் சிம்பு, தனுஷ் இடையே உள்ள மோதல் மேலும் வலுக்கும் சூழல் உருவாகியுள்ளது.

சிம்புவுக்கும், தனுஷுக்கும் ஏழாம் பொருத்தமாகத் தான் உள்ளது. தனுஷுடன் சுள்ளானில் நடித்த சிந்து துலானியை சிம்பு தனது மன்மதன் படத்தில் விலைமாதாக்கினார். சிம்புவுடனான காதல் முறிந்த பிறகு நயன்தாராவுடன் தனுஷ் யாரடி நீ மோகினியில் நடித்தார். தனுஷ் ஒய் திஸ் கொலவெறிடி பாட சிம்பு பதிலுக்கு ஒரு பாட்டை பாடி யூடியூப்பில் விட்டார். பாட்டு பஞ்சராகிப் போனது.

இந்நிலையில் சிம்பு நடிக்கும் வாலு படத்தில் அவரைப் பார்த்து ஹன்சிகா ஒரு சில பசங்கள பாக்க பாக்கத் தான் பிடிக்கும். ஆனா உன்ன மாதிரி பசங்கள பாத்த உடனே பிடிச்சிடும் என்று டயலாக் விடுகிறாராம்.

படிக்காதவன் படத்தில் தனுஷ் தன்னைப் பார்த்தாலே முகம் சுளிக்கும் தமன்னாவைப் பார்த்து என்ன மாதிரி பசங்கள பார்த்த உடனே பிடிக்காது. பாக்கப் பாக்கத் தான் பிடிக்கும் என்னும் பஞ் டயலொக் வந்தமை குறிப்பிடத்தக்கது.

படம்: அழகன் அழகி



## விஸ்வரூபத்தின் ட்ரைலர் வெளியீடு

பெரும் பொருட்செலவில் கமல்ஹாஸன் எடுத்துள்ள விஸ்வரூபம் படத்தின் முதல் வெள்ளோட்டம் சிங்கப்பூரில் வெளியானது. ஒன்றரை நிமிடம் ஓடும் இந்த ட்ரைலரில், படத்தின் பிரமாண்டமும், செய்நேர்த்தியும் ரசிகர்களைக் கவர்வதாக உள்ளன.

தீவிரவாதம், அதற்கு எதிரான போராட்டம்தான் படத்தின் மையக்கரு என்பது இந்த ட்ரைலரில் தெரிகிறது.

அமெரிக்கா, ஆப்கானிஸ்தானில் இதுவரை பார்த்திராத இடங்களில் காட்சிகளை எடுத்திருக்கிறார்கள்.

கமலின்பரதநாட்டியமும்இதில்இடம்பெற்றுள்ளது.அந்த பரத நாட்டிய தாளக்கட்டுக்கு ஏற்ப பின்னர் துப்பாக்கிகள் வெடிக்கும் சத்தத்தை வைத்திருப்பது சுவாரஸ்யம்.

சிங்கப்பூரில் நடக்கும் ஐஃபா விழாவில் கமல் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு இந்த ட்ரைலரை வெளியிட்டார். படத்தின் சில காட்சிகளையும் அங்கே திரையிட்டுக் காட்டினார்.



## பக்தி மானாகிறார் நயன்தாரா

நடிகை நயன்தாரா தியானம், யோகா என்று ஆன்மீக வாதியாகியுள்ளார்.

கிறிஸ்தவரான நயன்தாரா பிரபுதேவாவை திருமணம் செய்வதற்காக இந்து மதத்தை தழுவினார். அதில் இருந்து அவர் திருப்பதி ஏழுமலையான் கோயில், குருவாயூர் பகவதி அம்மன் கோவில் என்று பல்வேறு கோயில்களுக்கு சென்று வருகிறார். நெற்றியில் விபூதி, குங்குமம் வைத்து பக்திப் பரவசமாக திகழ்கின்றார்.

தெலுங்கில் ஸ்ரீராமராஜ்ஜியம் படத்தில் அவர் சீதையாக நடித்தபோது கூட மாமிசம் சாப்பிடாமல் விரதம் இருந்து வந்தார். இந்நிலையில் அவர் தியானம், யோகா என்று ஆன்மீகவாதியாக மாறியுள்ளார். ஷூட்டிங்கில் நேரம் கிடைத்தாலும் கூட கண்களை மூடித் தியானம் செய்ய ஆரம்பித்துவிடுகிறாராம்.

நயன்தாரா முன்பெல்லாம் கோபம் வந்தால் கையில் கிடைப்பதைத் தூக்கி எறிவார். ஆனால் தற்போது கோபம் வந்தால் யாருடனும் பேசாமல் அமைதியாக இருந்து விடுகிறாராம்.

யோகா, தியானம் மூலம் தனது கோபத்தை கட்டுப் படுத்தி வருகிறார் போலும். தான் செய்த தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொண்டுள்ளதாகக் கூறுகிறார்.

மேலும் தான் பிரச்சினைகளில் இருந்து மீண்டு வந்துவிட்டதாகவும் அவர் தெரிவித்தார். தற்போது அவர் முகத்தில் விரக்தியோ, கவலையோ இல்லை. மாறாக சாந்தம் குடிகொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமர்சனம்

# மனம்கொத்தி பறவை



மனம் கொத்தி பறவை கதைப்படி வேறு வேறு சமூகத்தை சேர்ந்த எதிர், எதிர் வீட்டைச் சேர்ந்தவர்கள் நாயகன் சிவகார்த்திகேயனும், புதுமுக நாயகி ஆத்மியாவும் சின்ன வயதில் இருந்து ஒன்றாக படித்து வளர்ந்த நாயகி மீது நாயகருக்கு காதல் என்றால் அப்படி ஒரு காதல்! ஆனால், கல்விதரத்திலும், வாழ்க்கை தரத்திலும், சமூக அந்தஸ்த்திலும் மிகவும் உயர்ந்த நாயகியிடம் தன் காதலை சொல்ல நாயகருக்கு பயங்கர தயக்கம்! ஆனால், நாயகி நட்பாக தன்னிடம் பழகுவதை எல்லாம் தன் ஆண் நட்பு வட்டாரத்தில் தப்பாக இல்லை, இல்லை... காதலாக கலந்துகட்டி சொல்லும் நாயகர் தனது பொய்களாலேயே நாயகியின் திருமணம் நின்று போக காரணமாகிறார். அப்புறம்? அப்புறமென்ன...? நாயகிக்கும், நாயகர் மீது காதல் இருந்ததா? இல்லையா...? உற்றார், ஊரார் எதிர்பார்ப்பையும் மீறி நாயகனும், நாயகியும் இணைந்தார்களா...? இல்லையா...? என்பது மனம் கொத்தி பறவை படத்தின் மீதிக்கதை!

கண்ணனாக, காதலனாக, கதாநாயகராக சிவகார்த்திகேயன் வாழ்ந்திருக்கிறார். தன் தந்தை இளவரசு சொல்லும் வேலைகளை தட்டிக்கழித்தும், எதிர்வீட்டு நாயகியின் குடும்பத்தார் சொல்லும் காரியங்களை காதலுக்காக வேகமாக முடிப்பதுமாக கலக்கி இருக்கிறார் சிவகார்த்தி!

ரேவதி பாத்திரத்தில் வரும் ஆத்மியா கதைக்கே சுற்றால் போல் கலக்கியிருக்கிறார்.

சிங்கம் புலி, பரோட்டா சூரி, வெண்ணிற ஆடை மூர்த்தி, சாமஸ், ஸ்ரீநாத் உள்ளிட்டவர்கள் காமெடியில் பின்னியிருக்கிறார்கள். இளவரசு, ரவிமரியா, கிஷோர், ஆடுகளம் நரேன், வனிதா உள்ளிட்டவர்களும் பாத்திரமறிந்து பளிச்சிட்டிருக்கின்றனர்.

டி.இமானின் இசையில் 'டங்... டங்...' மற்றும் போ போ... போ... உள்ளிட்ட பாடல்கள் படத்தின் பக்கபலம்!

'காதலுக்கு மரியாதை' க்ளைமாக்ஸை மீண்டும் ஒரு முறை க்ளைமாக்ஸ் ஆக்கியிருப்பதை மட்டும் இயக்குநர் எஸ்.எழில் தவிர்த்திருந்தார் என்றால் 'மனம் கொத்தி பறவை' ரசிகர்களின் மனங்களை கொத்திப் பறக்கும் எனலாம்.

# சினி துளிகள்

- ★ நான் விலை உயர்ந்த பிஎம்டபுள்யூ கார் வாங்கியிருக்கிறேன் என்று பெருமையாக மார்தட்டிய ஹன்சிகாவின் பெயர் தற்போது வருமான வரித்துறையினர் பட்டியலில் சேர்ந்துள்ளதாம்.
- ★ தனுஸ் நடிக்கும் இரண்டு படங்களுக்கு இசையமைப்பாளராக ரஹ்மான் ஒப்பந்தமாகியுள்ளார். இந்தியில் தனுஷ் நடிக்கும் ரஞ்சானா மற்றும் தமிழில் பரத்பாலா இயக்கத்தில் உருவாகும் மரியான் ஆகிய படங்கள்தான் அவை.
- ★ இயக்குநர் ஏ.எல். விஜய் நடிகர் விஜயை வைத்து எடுக்கவிருக்கும் படத்தின் பெயர் தலைவன் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் படத்தின் பெயருக்கும் கதைக்கும் தொடர்பில்லை என்று உணர்ந்த இயக்குனர் தலைப்பை மாற்ற முடிவு செய்துள்ளாராம். தற்போது புதிய தலைப்பை தேடும் வேலையில் ஈடுபட்டுள்ளாராம்.
- ★ பிரியாமணி முதல்முறையாக இரட்டை வேடங்களில் ஒரு படத் தில் நடிக்கிறார். இந்தப் படத்துக்கு, 'சாருலதா' என்று பெயர் சூட்டப் பட்டிருக்கிறது.
- ★ கலகலப்பு படம் ஏற்படுத்திய உற்சாகத்தில் சுந்தர்.சி. கலகலப்பு படத்தின் இரண்டாம் பகுதியை உருவாக்கத் தீர்மானித்து விட்டார். அதற்கான கதை விவாதம் வேகமாய் நடந்து வருகிறது. நடிப்பவர்கள் பெரும்பாலும் முதல் கலகலப்பு படத்தில் நடித்தவர்கள் தான்.
- ★ கௌதம்மேனன் இயக்கும் 'நீதானே என் பொன்வசந்தம்,' ராஜ மௌலி இயக்கத்தில் 'நான் ஈ' ஆகிய படங்கள் விரைவில் வெளி வர இருக்கின்றன. ஷங்கர் இயக்கத்தில் உருவாக இருக்கும் படம், வெங்கட்பிரபு இயக்கும் 'பிரியாணி', தெலுங்கில் இரண்டு படம் என ஒப்பந்தமாகி இருக்கும் சமந்தா திகதிகள் குளறுபடியால் மணி ரத்னத்தின் 'கடல்' படத்திலிருந்து தானாக விலகிவிட்டார்.
- ★ கொலிவுட்டில் அலைகள் ஓய்வதில்லை முதல் பல படங்களில் நடித்து தமிழில் முன்னணி நடிகையாக இருந்தவர் ராதா, இவரின் மகள் கார்த்திகா கோ படத்தில் அறிமுகமானார். தற்போது கார்த்திகாவைத் தொடர்ந்து அவரின் பெரியப்பா மகள் கவுரி நம்பியாரும் செம்பட்டை என்ற புதிய படத்தில் அறிமுகமாகியுள்ளார்.
- ★ தென்னிந்திய சர்வதேச திரைப்பட விருது விழா, எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் டுபாயில் நடைபெற இருக்கிறது. நான்கு மொழிகளிலும் 2011 இல் வெளியான படங்களிலிருந்து சிறந்த படம், சிறந்த நடிகர், நடிகைகள், இயக்குநர்கள், இசை அமைப்பாளர்கள், பாடகர், பாடகி உட்பட 19 பிரிவுகளில் விருது வழங்கப்பட இருக்கிறது.
- ★ யுடிவி மோஷன் பிக்சர்ஸ் தயாரிக்கும் படம், தாண்டவம். விக்ரம், அனுஷ்கா, எமி ஜாக்சன், ஜெகபதி பாபு உட்பட பலர் நடிக்கின்றனர். ஜி.வி.பிரகாஷ் குமார் இசை அமைக்கிறார். ஏ.எல்.விஜய் இயக்குகிறார். இந்தப் படத்தின் ஷூட்டிங் லண்டனில் தொடர்ந்து நடைபெற்று. படம் செப்டம்பர் மாதம் வெளியாகும் என படக் குழு கூறியுள்ளது.

# திரைக்கு வரவுள்ள...

**எப்படி மனசுக்குள் வந்தாய்**
நடிகர் : விஸ்வாஸ், நடிகை : தன்வி
இயக்குநர் :பிரசாந்த்






**வாலு**
நடிகர் : சிம்பு,
நடிகை : ஹன்சிகா
இயக்குநர் :விஜய்




**கோழி கூவுது**
நடிகர் : அசோக்,
நடிகை : ஸ்ரீஜா
இயக்குநர் :ரஞ்சித்

**விஸ்வரூபம்**
நடிகர் : கமல்ஹாசன்
நடிகை : பூஜா குமார்
இயக்குநர் :கமல்ஹாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அம்மா நினைவில் வரிக்குதிரை

சீனாவில் ஹான்யாங் என்ற இடத்தில் வூகான் மிருகக் காட்சிசாலை உள்ளது. இங்கு குட்டியை ஈன்ற வரிக்குதிரை ஒன்று இறந்து விட்டது. அதன்பிறகு மிருகக்காட்சி சாலை ஊழியர்கள் அந்தக்குட்டிக்கு போத்தல் மூலம் பால் கொடுக்க முயன்ற போது அது குடிக்க மறுத்து விட்டது. பின்னர் கறுப்பு வெள்ளை கோடுகள் கொண்ட உடை அணிந்து கொடுத்த போது அந்த வரிக்குதிரை பால் குடித்தது. அந்த குட்டிக்கு லிட்டில் பைவ் என்று பெயரிட்டுள்ளனர். தனது தாயுடன் அந்தக்குட்டி 5 நாட்கள் மட்டும் இருந்ததால் இந்தப் பெயர் சூட்டி உள்ளனர்.

## நடனம் ஆடும் சிம்பன்சி

கனடாவில் உள்ள கால்கரி மிருகக் காட்சிசாலையில் ஜோலா என்ற 8 வயது மனிதக் குரங்கு உள்ளது. இதற்கு தண்ணீர் என்றால் கொள்ளைப் பிரியம். தண்ணீரைக் கண்டதும் இது நட னம் ஆடி தனது மகிழ்ச்சி யை வெளிப்படுத்தும்.





## சாக்லேட் சாப்பிடும் மீன்

லண்டனில் உள்ள கடல் வாழ் உயிரினங்கள் அருங்காட்சியகத்தில் கேரி என்ற பெயருள்ள பெரிய மீன் ஒன்று உள்ளது. இதை முன்பு வளர்த்தவர் இந்த மீனுக்கு எசாக்லேட் உணவுகளை கொடுத்து வளர்த்திருந்தார். இதனால் அருங்காட்சியகம் வந்த பின்னரும் சொக்லேட் கலந்த உணவுகளை மட்டுமே இது சாப்பிடுகிறது. மற்ற உணவுகளை இது சீண்டிக்கூட பார்ப்பதில்லை.



## நீண்ட தூரம் நீந்திய போலார் கரடி

பனிப்பிரதேசங்களில் வாழக்கூடிய போலார் கரடிகள் கொஞ்சம் சோம்பேறித்தனம் கொண்டவை. இந்த நிலையில் ஒரு போலார் கரடி அலாஸ்கா கடல் பகுதியில் 9 நாட்கள் தொடர்ந்து நீந்தி 687 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்தது. போலார் கரடி இவ்வளவு தூரம் நிற்காமல் நீந்தியது அதிசயமானது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



## ஆர்ட்டிக் முயல்!

ஆர்ட்டிக் முயல். வட அமெரிக்காவின் குளிர்ந்த பிரதேசத்திலுள்ள மரங்களற்ற சதுப்புநில பகுதியில் வாழ்கிறது. இதன் குட்டையான கறுப்பு கோடுகளைக் கொண்ட காதுகள், குளிர்காலத்தில் உடல் வெப்ப இழப்பு ஏற்படாமல் பாதுகாக்க உதவுகிறது. நீண்ட ரோமங்கள், குளிர் காலத்தில் குளிரை தாங்கவும், எதிரிகளின் பார்வையிலிருந்து மறைத்துக் கொள்ளவும் பயன்படுகிறது. கோடை காலத்தில், இதன் உடல் மற்றும் தலை, சாம்பல் கலந்த வெளிர் பிரவுண் நிறத்தில் காணப்படும். மணிக்கு 64 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடும். இதன் பின்னங் கால்கள், கங்காரு போன்று வலிமையானது.



## சிந்தனைக்கு...

- ★ 40 ஆண்டுகள் ஆடாய் வாழ்வதைவிட 4 நாட்கள் புலியாய் வாழ்ந்து மடிவேன் - திப்புசுல்தான்
- ★ நான் தோற்கவில்லை. சரியாக ஒன்றைச் செய்வதற்கு சரியில்லாத 10 ஆயிரம் வழிமுறைகளைக் கண்டுகொள்ள வேண்டியிருந்தது - **தோமஸ் ஆல்வா எடிசன்**
- ★ காரியத்தில் நாம் வெற்றி பெற்றுவிட்டால் நம்மைப் பற்றி பல்வேறு விதமான விமர்சனக் கருத்துக்களை கூறியவர்களே போற்றுதல்களையும் புகழாரங்களையும் சூட்டுவார்கள். அதனால் இவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளாமல் கடமையை மட்டுமே செய் - ரூஸ்வெல்ட்.
- ★ உற்சாகத்தை இழக்காமல் நம்பிக்கையுடன் ஒரு தோல்வியிலிருந்து இன்னொரு தோல்விக்குப் பயணிப்பது வெற்றியாகும் - **சர்ச்சில்**
- ★ பொய்யான கருத்துக்களை எதிர்த்த போராட்டத்தின் மூலம்தான் உண்மையான கருத்துக்களை அடைய முடியும் - **மாசேதுங்**

## இல்லை...!


- ★ நிலங்கள் இல்லாத கிரகம் மொர்க்குரி
- ★ எரிமலையே இல்லாத கண்டம் ஆஸ்திரேலியா
- ★ கொசுக்களே இல்லாத நாடு பிரான்ஸ்
- ★ பாம்புகளே இல்லாத தீவு ஹவாய்
- ★ மீன்களே இல்லாத ஆறு ஜோர்டான்
- ★ பழங்களே இல்லாத மரம் பைன்
- ★ தேசியமொழி இல்லாத நாடு சுவிட்சர்லாந்து
- ★ வருமான வரி இல்லாத நாடு குவைத்
- ★ அர்ஜென்டினாவில் உள்ள எல்குலாத் என்ற இடத்தில் மழை பெய்வதே இல்லை.

## தெரிந்துகொள்ளுங்கள்

- ★ மூங்கிலில் சுமார் 1,450 வகைகள் உள்ளன.
- ★ பைசா நகர சாய்வு கோபுரம் கட்டி முடிக்க 177 ஆண்டுகளாயின.
- ★ தாஜ்மகாலைக் கட்டி முடிக்க 21 ஆண்டுகள் ஆயின.
- ★ 1,192 தீவுகள் உள்ள நாடு மாலைதீவு
- ★ ஒட்டகச்சிவிங்கியின் நாக்கு 21 அங்குலம்
- ★ பத்து நாள்களில் நகம் 1 மி.மீ. வளர்கிறது.
- ★ ஒரு மனிதனின் சராசரி உயரம் 174 செ.மீ.
- ★ ஒரு மின்னலின் சராசரி நீளம் 6 கி.மீ.
- ★ பின்லாந்து நாட்டில் சுமார் 1,000 ஏரிகள் உள்ளன.
- ★ நமது உடலில் சராசரியாக 5 லீற்றர் ரத்தம் ஓடுகிறது.
- ★ சிலந்தி ஒரே சமயத்தில் 600 முட்டைகள் இடும்.
- ★ கடல் நீரில் 78 சதவீதம் உப்பு உள்ளது.
- ★ கலங்கரை விளக்கம் முதன்முதலில் கி.மு. 500-ல் எகிப்தியர்களால் அமைக்கப்பட்டது.
- ★ பசுவின் பாலில் உள்ளதைப் போன்று 10 மடங்கு இரும்புச் சத்து ஒட்டகப் பாலில் இருக்கிறது.
- ★ ஒரு நட்சத்திரத்தின் ஆயுள் காலம் சராசரியாக ஒரு கோடி ஆண்டுகள்.

## பழமொழிகள்

01. கடைந்த மோரிலே குடைந்து வெண்ணெய் எடுக்கிறது.
02. கண் கண்டது கை செய்யும்.
03. கண் குருடு ஆனாலும் நித்திரையில் குறையுமா?
04. கணக்கன் கணக்கறிவான் தன் கணக்கைத் தான் அறியான்.
05. கணக்கன் கணக்கைத் தின்னாவிடில், கணக்கனை கணக்கு தின்று விடும்.
06. கணக்கைப் பார்த்தால் பிணக்கு வரும்.
07. கண்டது சொன்னால் கொண்டிடும் பகை.
08. கண்டதே காட்சி கொண்டதே கோலம்.
09. கண்டால் ஒரு பேச்சு, காணாவிட்டால் ஒரு பேச்சு.
10. கண்ணிலே குத்தின விரலைக் கண்டிப்பார் உண்டோ



அண்ணல் காந்தியடிகள் லண்டனுக்கு கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவருடன் பயணித்த ஒரு வெள்ளைக்காரப் பயணிக்கு அவரின் எளிய தோற்றமும் மெலிந்த உருவமும் என்ன எண்ணத்தை உருவாக்கியதோ! காந்திஜியைக் கிண்டலும் கேலியும் செய்து கொண்டே வந்தான். காந்திஜி அவனது செய்கைகளையும் பேச்சுக்களையும் கண்டு கொள்ளாமல், புத்தக வாசிப்பில் கவனம் செலுத்தினார்.

காந்திஜியின் இந்த சகிப்புத் தன்மையும் எதிர்வினை செய்யாத பொறுமையும் அந்த வெள்ளையனுக்கு துணிவைத் தந்தது. அவன் முன்னிலும் கூடுதலாக தனது இகழ்ச்சி நடவடிக்கைகளைத் தொடர்ந்தான். இம்முறை அவனுடைய பேச்சுக்களில் சில தடித்த வார்த்தைகளையும் பயன்படுத்தினான். அப்போதும் காந்திஜி அமைதியாகப் படித்தவாறே சகிப்புக் காட்டினார்.

அந்த வெள்ளைக்காரனுக்கு ஏதோ அவசர வேலை ஒன்று வந்தது. அவன் வெளியே போகவேண்டியிருந்தது. அப்பவும் அவன் அவனது இகழ்வு வேலையை விட்டுச் செல்ல மனமில்லை. காந்திஜியை எவ்வளவு திட்டவேண்டுமோ அத்தனையையும் ஒரு காகிதத்தில் எழுதி, அதைக் காந்திஜியின் கையில் திணித்துவிட்டுச் சென்றான்.

வேலைமுடித்து வெள்ளையன் திரும்பி வந்தான். அப்போதும் காந்திஜி அமைதியின் உருவமாக புத்தக வாசிப்பில் இருந்தார். வெள்ளையனைக் கண்டுகொள்ளவில்லை.

அதைப் பார்த்த வெள்ளையனுக்கு அதிசயமாக இருந்தது.

என்ன... நான் கொடுத்த காகிதத்தைப் படித்தீரா? என்று கேட்டான்.

காந்திஜி அப்பொழுதுதான் அந்த வெள்ளையனை ஏற இறங்கப் பார்த்தார்.

அதோ அங்கே இருக்கிறது.. உமது கடிதம் என்று அருகில் இந்த குப்பைக் கூடையைக் காட்டினார்.

அவன் சினம் கொண்டு கேட்டான். அதில் உமக்கு வேண்டியது எதுவுமில்லையா?

இருந்ததே.. இதோ இதுமட்டும்தான்...

என்றவாறே கையை விரித்தார் காந்திஜி. அவர் கையில் ஒரு குண்டூசி இருந்தது.

வெள்ளைக்காரன் ஒன்றும் பேசவில்லை. அவமானப்பட்ட முகத்துடன் இடத்தை மாற்றிக் கொண்டு போய்விட்டான்.

சகிப்புத்தன்மையால் கூட மரண அடி கொடுக்க முடியும் என்பதற்கு காந்திஜியின் வாழ்க்கையில் நடந்த இந்த நிகழ்வு ஓர் எடுத்துக்காட்டு.

### காந்தியின் வாழ்வில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் பிரச்சினைகளும் துன்பங்களும் உண்டு. அவற்றுக்குத் தீர்வு காண்பது தான் முக்கியம்.

துயரங்கள் அடிக்கடி வருகின்றன, வெவ்வேறு வடிவுகளில், அளவுகளில் சம்பவிக்கின்றன. அவற்றைத் தவிர்க்க முடியாது.

பிரச்சினைகளைக் கண்டு நடுங்காமல் அவற்றுடன் வாழ்வதற்கும் பழகிக் கொள்ள வேண்டும்.

கஷ்டங்களையும், சங்கடங்களையும் கண்டு அஞ்சினால் அது நம் தவறே.

எண்ணங்களால் வாழ்வைப் பயனுள்ளதாக மாற்றலாம். உணர்வுகளால் துன்பங்களே மிகுதியாகும்.

**கோபம் ஒரு வியாதி.** சற்று நேரம் உங்களைப் பலம் கொண்டவர் போலக் காட்டும். ஆனால் நேரம் ஆக ஆக நீங்கள் சோர்ந்து போவீர்கள். அதன் பிறகு உடலும் உள்ளமும் சோர்ந்து போகும்.

பிரச்சினையைக் கண்டு உணர்ச்சி வயப் பட்டால் அடுத்ததைத் தாங்கும் சக்தி கிடைக்காமல் போகிறது.

துயரத்தில் உணர்ச்சி வசப்படுவது என்பது மாடிப்படி உச்சியிலிருந்து பெரும் கல்லை உருட்டி விடுவது போன்றது. அதை நடு வழியில் நிறுத்த முடியாது. கீழே விழும் வரை பயங்கரமாகவே இருக்கும்.





# துயரத்தால் உணர்ச்சியடையாதீர்கள்

வாழ்க்கை உண்மை, வாழ்வு சத்தியம், அதற்காக கோபக்கனல் தெறிக்க நீ வாழ வேண்டாம்.

உணர்ச்சிவசப்பட்ட, துயரங்கள் பொறுக்காத, ஆவேசப்பட்ட மக்கள் தங்களைச் சுற்றி உள்ள ஒவ்வொன்றிலும் தவறு காண்கிறார்கள். சில சமயம் ஊரைத் திருத்துகிறேன் என்று கோபம் கொப்பளிக்கக் கிளம்புகிறார்கள். அல்லது உள்ளூரக் கொதிக்கும் கோபத்தால் வெந்து வேதனைப்படுகிறார்கள்.

துயரம் என்றால் என்ன என்று உண்மையிலேயே புரிந்து கொண்டால் தான் பிரச்சினையை அணுக முடியும். துயரம் என்பது பரிசோ, தண்டனையோ அன்று. அது ஒரு விளைவு - அவ்வளவுதான்.

காரணத்தைப் புரிந்து கொண்டால் துன்பம் வராமல் தடுக்கலாம். இது சாத்தியமே. சில கஷ்டங்களை முன் கூட்டியே உணர முடியாமலோ, தவிர்க்க முடியாமலோ போகலாம். இருக்கட்டுமே வரும்போது சமாளிப்போம்.

**முதல் தேவை கஷ்டம் வரும்போது உணர்ச்சியால் கொந்தளிக்காதீர்கள்.**

உணர்ச்சி வயப்படுவதால் துயரத்தின் தன்மை எதுவாயினும் அதை அதிகரிக்கும். உணர்ச்சிமயமாக ஆகா விட்டால் துன்பத்தைச் சந்திக்கத் தேவையான மன - உடல் பலத்தைப் பெறலாம்.

துன்பத்தைப் பற்றிக் குறைப்பட்டுக் கொண்டே இருந்தால் துயரத்தை அதிகரிக்கிறோம் - "நாம் அதிகமாக எதிர்க்கிறோம்" என்கிறார் ஷேக்ஸ்பியர்.

கையில் தோன்றும் அரிப்பு மனத்தில் விழும் அடியன்று. அதற்காக வருந்தக் கூடாது. உடலை விட உள்ளந்தான் பல சமயங்களில் பாதிக்கப்படுகிறது.

என்னுடைய துன்பம்தான் மிக அதிகம் என்று வருவதற்கு முன்னே அங்கலாய்க்கிறார்கள் பலர்.

**பல துன்பங்கள், அவை மேற்போக்காகத் தெரிவது போலக் கெட்டவையே அல்ல, அப்படி இருக்க முடியாது.**

தேனிக் கூட்டில் கை வைக்காதீர்கள். துன்பத்தை வரவழைக்காதீர்கள். அவை தானாக வரட்டும். அதற்கு மிக நீண்ட காலம் பிடிக்கும்.

துயரங்கள் வந்தாலும், புத்தரைப் போல, யேசு கிறிஸ்துவைப் போல அமைதியாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

அமைதியான மனத்தின் மூலம் பிரச்சினைகளுக்கான காரணங்களை ஆராயுங்கள்.

ஒரு மனோதத்துவ நிபுணர் தம்மிடம் வந்த நோயாளியின் குறைகளைக் கேட்பது போல உங்கள் துன்பத்தின் சாரத்தைக் கேளுங்கள். தம்முடைய உணர்ச்சிகள் பாதிக்காதவாறு நோயாளியைப் பரிசீப்பது போல் உங்கள் துன்பச்சாயல் உங்களை அணுகாமல் இருக்கட்டும்.

துயரமே போதுமானது. அதை ஏன் உணர்ச்சிப் பெருக்காய் அதிகரிக்க வேண்டும். அதை மெல்லத் தொட்டு நீக்க வேண்டும்.

நின்று போன கடிகாரத்தைச் சுத்தியல் கொண்டு அடித்துச் சரி செய்ய முடியுமா?

வாழ்க்கைக் கடிகாரத்தையும் மெல்ல மெல்லச் சரி செய்து நிமிடி, மணி முட்களை ஓட்டச் செய்து காலத்தைக் கடந்து நிற்கும் பேரின்பத் தோடு சேர்ந்து ஓடச் செய்ய வேண்டும்.

**மனம் அமைதி பெற வேண்டுமானால் அதிகம் வாதம் செய்ய வேண்டாம்!**

துன்பங்களும் துயரங்களும் உண்டாகின்றன என்று பலர் நினைக்கிறார்கள்.

அப்படி இல்லை.

கோபம், பயம், துன்பம் போன்ற துக்ககரமான உணர்ச்சிக் குழப்பங்கள் பற்றி நீங்கள் என்ன **நினைக்கிறீர்கள்** என்பதே முக்கியமானது.

உங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படும் துன்பங்களுக்கு ஆரம்பக் காரணம் நீங்களாக இருக்க வேண்டியதில்லை. ஆனால் நீங்கள் எப்படி உணருகிறீர்கள் என்பதைப் பொறுத்தே வெறுப்பான உணர்ச்சிக் கொந்தளிப்புகள் உண்டாகின்றன.

'நம் நடத்தையைக் கட்டுப்படுத்தி நமது உணர்வுகளை அடக்கலாம்' என்பார் புகழ் பெற்ற மனோதத்துவ நிபுணர் வில்லியம் ஜேம்ஸ்.

துன்பங்களையும் துயரங்களையும் நீக்குவதற்கு எதிர்த் தாக்குதல் பயன் தராது. நமது அறிவுக்கு எட்டும் ஒவ்வொரு கருத்து, நிலைமை, நிகழ்ச்சிகளுக்கு நாம் நான்கு வகையில் **எதிர்த்தாக்குதல்** செய்கிறோம்.

1. சாதாரணமான எதிர்த் தாக்குதலில் இருந்து பயங்கரமான எதிர்த் தாக்குதல் வரை சென்று நமது இதயம் பலவீனமாக மரணம் அடையும் வரை சிலர் நடந்து கொள்கிறார்கள்.

2. சிலர், மற்றவர்கள் நடந்து கொள்வதற்கு மாறாகச் சமயத்தில் எதிர்த் தாக்குதல் செய்வதுண்டு. உதாரணமாக மற்றவர்களுக்குத் துன்பம் வந்தபோது, சிரிப்பது, உதவி கேட்டால் ஏளனம் செய்வது, எச்சரிக்கைகளை உதாசீனம் செய்வது.

3. சில சமயம் ஒன்றுமே செய்யாமல் இருந்து விடுவது.

4. அமைதியான மனத்தால் ஆராய்ந்து செயல்படுவது.

ஒன்றுமே சொல்லாமல் அமைதியாக இருந்தாலும், அமைதியாகச் சிந்தித்தாலும், செயற்பட்டாலும் வெற்றி நிச்சயம்.

விரிவான முறையில், பகுத்தறியாமல், வைத்தியக் காரணம் போல எதிர்வாதம் செய்தால் வைத்தியம் செய்ய வேண்டியதுதான்.

"நடந்ததைப் பற்றிக் கூட கவலை இல்லை. என்ன நடந்தது என்பதைப் பற்றிய எண்ணமே மக்களை உறுத்துகிறது" என்கிறார் பிரான்சு நாட்டு தத்துவ ஞானி மாண்டேன்.

**அதிகமாக உணர்ச்சிவசப்படாதீர்கள். இதனால் அதிகம் எதிர்வாதம் செய்வதைத் தவிர்க்கலாம்.** இது வாழ்வினை முழுமைப் பயன் அளிக்கும்.

மக்கள், பொருள்கள், நிலைமைகள் எதுவும் சரியானதாக இருப்பதில்லை என்று புரிந்து கொண்டால் அதிகம் ஏமாற்றம் இல்லாமல் தவிர்க்கலாம்.

அவை உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறோ உங்களுக்கு மகிழ்ச்சி தருவதற்காகவோ அமைக்கப்படவில்லை.

குறைகள் மிகுந்த இந்த உலகத்தைத் திருத்துவது உங்கள் கடமையா என்ன? அல்லது சரியாக இருக்க வேண்டும் என்று கேட்பது முறையா?

மற்றவர்கள் குறைகளை ஏற்பீர்களேயானால், உங்கள் குறைகளையும் அவர்கள் அங்கீகரிப்பார்கள்.

குறைகளை மிகவும் அதிகமாக எதிர்க்காதீர்கள். அவை அடிக்கடி நிகழ்கின்றன. சுயநலவாதிகள் நிறைந்த இந்தக் கூட்டத்தில் அவர்களுக்குத் தெரியாமலே உங்கள் மீது இடிக்கலாம். அது வேண்டுமென்றே செய்த தவறன்று. அதைப் பொருட்படுத்தாதீர்கள்.

**அவர்கள் பிரச்சினையில் அவர்கள் கவலை. ஆகவே உங்கள் உணர்ச்சிகளை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.**

**இதைப் புரிந்து கொள்ளுங்கள்.**

குறைகளைக் கண்டு பொங்கி எழுந்தால் நீங்கள் இருக்குமிடம் தெரியாமலே போய்விடுவீர்கள். அல்லது உங்களுக்கு ஆபத்தே காத்திருக்கும்.

ரோமானிய சக்கரவர்த்திகளிலே மிகச் சிறந்த அறிஞரான மார்க்கஸ் அரேலியஸ் தன்னுடைய குறிப்பில் எழுதி வைத்திருக்கிறார் - "நான் இன்று அதிகம் பேசும் மக்களை, சுயநலவாதிகளை, தற்பெருமைக்காரர்களை, நன்றி கெட்டவர்களை சந்திக்கப் போகிறேன். உலகில் இப்படிப்பட்டவர்கள் இல்லாமல் இருக்காது. ஆகவே எனக்கு ஆச்சரியமோ, அதிர்ச்சியோ இல்லை."

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு அப்படிப்பட்ட மனிதர்களை நீங்கள் சந்திக்கிறீர்கள். அவர்களின் குறைகளைக் கண்டு அதிகம் கலங்காதீர்கள். கோபம், துக்கம், எதிர்ப்பு போன்ற குணங்களோடு எதிர்த் தாக்கம் செய்யாதீர்கள்.

அப்படிப்பட்ட மனிதர்கள் இருக்கிறார்கள். இருந்தார்கள். இனியும் இருப்பார்கள்.

மனித இனத் தொடக்க காலத்தில் இருந்தே வந்து கொண்டிருக்கும் இந்தக் குணங்களை யாரும் மாற்ற முடியவில்லை. அதைச் செய்வதற்கு இப்போது நீங்கள் படைக்கப்படவில்லை.

அமைதியாக இருங்கள். குறைகளைக் கண்டு அதிகம் வாதம் செய்யாதீர்கள். அவற்றைக் கண்டு துவண்டு விடாதீர்கள். அவற்றை மறுப்பதற்காக எதிர்வாதம் செய்யாதீர்கள். மாற்ற முடியாதவற்றை ஏற்றுக் கொள்ளப் பழகிக் கொள்ளுங்கள்.

அமைதியான மனத்துடன் இருங்கள்.

**வெற்றியின் படிகள் நீளும்....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரசிட்டமோல் பாவிப்பதில் என்ன தவறு?

கே.ரஞ்சனி
கொட்டாஞ்சேனை.

**கேள்வி:** எனது மகனுக்கு 7 வயது. காய்ச்சல் அண்மையில் அவருக்கு ஏற்பட்டபோது பரசிட்டமோல் ஒரு வில்லை கொடுத்தோம். ஆனால் வைத்தியரிடம் சென்றபோது இது இந்தக் குழந்தைக்கு அளவுக்கு மிஞ்சிய பரசிட்டமோல் அளவு (Over dose) என்றார். பரசிட்டமோல் சாதாரணமாகக் கிடைப்பது. தானே காய்ச்சல் அடங்காவிடில் ஏற்று அதிகம் கொடுப்பது தவறா?




**விடை:** உங்கள் மகனின் உடல் நிறையை நீங்கள் குறிப்பிடவில்லை. பரசிட்டமோல் டோஸ் உடல் எடையை அடிப்படையாகக் கொண்டே கணக்கிடப்படும். உங்கள் மகனின் வயதுப்படி சராசரி 22 கிலோ எடை இருக்கக்கூடும். ஆனால் சில குழந்தைகள் குண்டாகவும் வேறுசில குழந்தைகள் மெலிவாகவும் இருப்பதும் வழமைதான். 22 கிலோ எடை எடுத்துக் கொண்டால் அவருக்கு ஆகக் கூடியது 330 மில்லிகிராம் பரசிட்டமோல் தான் வழங்கலாம். ஒரு நாளில் இதை ஆகக் கூடியது 6 மணித்தியாலத்துக்கு ஒரு முறை கொடுக்க முடியும். ஒரு கிலோ கிராம் உடல் எடைக்கு 12 முதல் 15 மில்லி கிராம் (12 - 15mg) அளவு பரசிட்டமோல் வழங்க முடியும் என்பதை வைத்தே இதை கணக்கிட்டுள்ளோம். (22kg X 15mg / kg = 330mg) ஆனால் பெரியவர்கள் விழுங்கும் பரசிட்டமோல் வில்லையில் 500mg பரசிட்டமோல் உள்ளது. எனவே 330mg மட்டுமே வழங்கக் கூடிய உங்கள் மகனுக்கு நீங்கள் 500mg வழங்கியுள்ளீர்கள் என்றால் அது நிச்சயமாக அளவுக்கு மிஞ்சிய டோஸ் தான். இதையே சரியாக வைத்தியர் உங்களிடம் சுட்டிக் காட்டி உள்ளார்.

இலங்கையில் அடிக்கடி மழை பெய்வதால் டெங்கு முதலிய நோய்கள் தொடர்ச்சியாக ஏற்பட்ட வண்ணமே உள்ளன. டெங்கு நோயில் காய்ச்சல் மிக உச்சமாக இருக்கும். இது சாதாரண பரசிட்டமோல் வில்லைக்குக் கூட கட்டுப்படாத தன்மை இருக்கும். இதனால் பெற்றோர் பயப்பீதி அடைவதும் இயல்பான ஒன்றே.

## உடல் நலம்

ஆனால், இதற்காக பரசிட்டமோலை அளவுக்கு மிஞ்சி கொடுக்கப்படுவது சரியல்ல. நோய்க்குரிய இரத்தப் பரிசோதனை செய்து உரிய வைத்தியரின் ஆலோசனைப்படி வைத்தியசாலையில் குழந்தையை அனுமதிப்பதும் அவசியப்படலாம். அதை விடுத்து இலகுவான குறுக்குவழியாக வீட்டில் வைத்து அதிகளவு பரசிட்டமோலைக் கொடுத்து பிரச்சினையை சரி செய்து விடலாமெனக் கருதக்கூடாது. பரசிட்டமோல் அளவை மீறி உட்கொண்டால் முக்கியமாகப் பாதிக்கப்படும் உறுப்பு ஈரலாகும். டெங்கு நோயிலும் கூட பாதிக்கப் படும் உறுப்புகளில் முக்கியமானது ஈரலே. எனவே டெங்கு முற்றி காய்ச்சல் இறங்க மறுக்கும் குழந்தைக்கு பரசிட்டமோலை அளவுமீறி வழங்கினால் ஈரல் இரு முனைகளில் தாக்கப்படலாம். சில சமயங்களில் உயிரிழப்பும் ஏற்படலாம்.


அப்படியானால் பரசிட்டமோல் ஆபத்தானது அறவே தவிர்க்கப்பட வேண்டியது என்பது அர்த்தம் அல்ல. மருத்துவத்தில் மருந்தியல் அற்புதமே அளவோடு மருந்தை உள்ளெடுப்பது தான். இந்த எல்லையை மீறுவது என்பது தான் பிரச்சினையே. அளவுக்கு மிஞ்சினால் பிரச்சினைதான். அளவுக்கு மிஞ்சினால் அமுதம் நஞ்சாகும் என்பதால் அமுதத்தை தவிர்க்க வேண்டுமா? இல்லை! அது போல பரசிட்டமோலையும் அறவே ஒதுக்க வேண்டிய அவசியமில்லை. அளவுக்கு மிஞ்சி அதை உட்கொள்வது நமது தவறே. தூக்க மாத்திரை உட்கொண்டால் இறப்பு நிகழுமென பலர் தவறாக நினைக்கின்றனர். உண்மையில் இலங்கையிலும் பல படிப்பறிவு கூடிய நாடுகளிலுமே கூட தூக்கமாத்திரையால் ஏற்படும் இறப்புகளை விட பரசிட்டமோல் காரணமாக ஏற்படும் இறப்புகளே அதிகமென ஆராய்ச்சிகள் சுட்டிக் காட்டுகின்றன.



[illegible]

# பெண்களைக் குறிவைத்துத் தாக்கும் நோய்

பெண்களைக் குறி வைத்துத் தாக்கும் நோய்களில் தைரொய்டும் ஒன்று. இது நோய்க் கிருமிகளால் தாக்கப்படுவதில்லை. அயோடின் குறைவே இதற்குக் காரணம். கழுத்தில் மூச்சுக் குழலின் கீழே காணப்படும் தைரொய்டு சுரப்பிகள் உற்பத்தி செய்யும் ஹோர் மோன்கள் மனித உடலின் இயக்கத்தில் பெரும் பங்கு வகிக் கிறது. அயோடின் சத்து குறைந்தால் இந்த சுரப்பிகளின் செயல் பாட்டைப் பாதிக்கிறது. இதனால் தைரொய்ட் நோய் ஏற்படுகிறது.




தைரொய்ட் குறைபாடு காரணமாய் பெண்கள் பருவமடையும் வயது தள்ளிப்போக நேரிடலாம், குறைந்த வயதிலேயே வயதுக்கு வருவதும் உண்டாகலாம் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.


இன்றுள்ள சூழ்நிலைக்கு 100 க்கு 30 பேருக்கு தைரொய்ட் பிரச்சினை உள்ளது. உடல் நிறை கூடுகிறது என்று தெரிந்தவுடன் முதலில் தைரொய்ட் பரிசோதனை எடுத்துப் பார்த்துவிட்டு தைரொய்ட் இல்லையென்றால் நிறை குறைவதற்கு எந்த சிகிச்சை நல்லது என்று தேர்வு செய்து நிறையைக் குறைப்பது நல்லது. தைரொய்ட் டி.எஸ்.எச் அளவு அதிகமாக உள்ளது என்று தெரிந்தவுடன் தைரொய்ட் குறைய சிகிச்சை எடுக்க வேண்டும். டி.எஸ்.எச் அளவு ரத்தத்தில் அதிகமானால் ஹை தைரொய்ட் (அதிகமான தைரொய்ட்). குறைவான தைரொய்ட் உடலில் அயோடின் சத்து குறைந்தால் வீக்கம் வேறு வந்து விடும். சில சமயம் சிறு, சிறு கட்டிகள் தோன்றி கான்சரா என்று பயம் ஏற்படும். கட்டிகள் என்ன என்பதை ஸ்கான் மூலம் பார்த்துத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

தைரொய்ட் சுரப்பி குறைவாக இருந்தால் ஆரம்பத்தில் தெரிந்தோ, தெரியாமலோ இருக்கும். முதல் மாற்றம் மாதவிலக்கில் மாற்றம் ஏற்படலாம். (அதிகமாக அல்லது குறைவாக) உடல் பருமன் அதிகமாகி விடும்.

இளம் பெண்களுக்கு கருமுட்டையில் நீர்க் கட்டிகள் (பாலி சிஸ்டிக் ஓவரியன் டிஸீஸ்) இருக்கலாம். சில பெண்களுக்கு குழந்தை பிறப்புக்குப் பிறகு தைரொய்ட் சுரப்பி குறைவாகச் சுரக்கும். பிரசவத்திற்குப் பிறகு உடல் குண்டாவது முகம் பருமனாகிவிடும். கைகளில் வீக்கம், கழுத்து பகுதியில் வீக்கம் ஏற்படும். அதிக களைப்பு, குளிர்ச்சியைத் தாங்க முடியாமல் தோன்றும். கை, கால்கள் உளைச்சல், மூட்டுவலி, ஞாபக மறதி, மனச்சோர்வு அதிகமாகும். சிலருக்கு குரல் மாறும். எச்சில் முழுங்கும் போது வலி ஏற்படும். சருமம் வறண்டு பொலிவு இழந்து [illegible] வேலை செய்யாமல் முடி வளர்ச்சி இல்லாமல் கொத்து கொத்தாகக் கொட்டி சிலருக்கு வழுக்கையே வந்து விடும். கருமுட்டைகள் சரியாக வளர்ச்சியில்லாமல் உடல் பருமன் காரணமாக குழந்தை பிறப்பை தடுத்து விடும்.

ஜெனடிக் காரணமாய் தைரொய்ட் பிரச்சினைகள் வருகிறதெனச் சொல்கிறார்கள் சிலர். சில குழந்தைகள் பிறக்கும் போதே இந்தக் குறைபாட்டுடன் பிறப்பதுண்டு. ஆனாலும் இந்நோய் ஆண்களை விடப் பெண்களை 7 மடங்கு அதிகமாய்த் தாக்குகிறது. எனவே பெண்கள் இது விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். பச்சைக் காய்கறிகள், பழங்கள், கீரைகள் ஆகியவற்றைத் தினசரி உணவில் சேர்ப்பதோடு, உடற்பயிற்சியும் செய்ய வேண்டும்.

தைரொய்டு சுரப்பி, அதிகமாகச் சுரந்தாலும், கழுத்து வீக்கம், உடல் சூடு, படபடப்பு, வியர்வை அதிகமாகும். நாக்கு வறண்டு, குமட்டல், வாந்தி கூட வரும். சிலருக்கு குறைப் பிரசவம், கருச்சிதைவு போன்றவை உண்டாகும். சிலருக்குக் கண்கள் பெரிதாக வெளியில் விழும் மாதிரி தோன்றும். பார்வை மங்கும். இந்த தைரொய்ட் பிரச்சினைக்கு வாழ்நாள் முழுவதும் மருந்து சாப்பிட வேண்டும் என்று பலர் நினைத்துக் கொள்கிறார்கள். இல்லவே இல்லை. சித்தா மருந்திலிருந்து 3லிருந்து 6 மாதம் வரை அவரவர் அளவுக்கேற்ப மருந்து எடுத்துக் கொண்டால் மேல் சொன்ன வியாதிகளை அனைவரும் தவிர்க்கலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் சுடர்

# வேலைக்குச் செல்லும் பெண்களின் பிரச்சினை!




## இளமையைத் தொடர்ந்திடு...



ஐம்பது வயதான பெண்கள், தினமும் ஒரு மணி நேரம் என, தொடர்ந்து 12 வாரங்கள் உடற்பயிற்சி செய்தால், 30 வயதில் இருந்த உடல் கட்டமைப்பைப் பெறலாம் என, அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இந்த ஆய்ச்சியில் 50 வயதான பெண்கள், தொடர்ந்து 12 வாரங்கள் ஜிம்மிற்கு சென்று பயிற்சி செய்தல், நீச்சல் பயிற்சி ஆகியவற்றை மேற்கொள்வதன் மூலம், 20 ஆண்டுகளுக்கு முன், 30 வயதில் இருந்த உடல் கட்டமைப்பைப் பெற முடியுமென்பதை தெரியவந்துள்ளது.

இதே போன்று கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மேற்கொண்ட இரண்டு ஆய்வில், முறையான உடற் பயிற்சியின் மூலம், இளம் வயதில் பெற்ற பலன்களை, மாதவிடாய் நின்ற பின்னும் பெண்கள் பெறமுடியும் எனத் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக, சினைப்பைகளை அகற்றிய 55 வயது பெண்களிடம் மேற்கொண்ட ஆய்வில், ஹோர்மோன் மாற்றங்கள், உடலை சீராக வைத்துக் கொள்வதைக் குறைக்காது எனக் கண்டறிந்துள்ளனர்.



தற்கால சூழ்நிலையில் படித்த பெண்கள் வினோதமான சில பிரச்சினைகளுக்கு ஆளாகிறார்கள்! சாதாரணமாக வேலைக்குச் செல்லும் பெண்கள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் புதிய பிரச்சினைகள் இவை தான் என்று அறிய முடியாமல் தடுமாறுகிறார்கள்.

பெண்கள் இதுவரை ஆண்கள் செய்து வந்த பொறுப்புகளைக் கூடுதலாக ஏற்றுக் கொள்ளும்போது ஏற்படும் வாழ்வியல் சிக்கல்கள் சாதாரணமானவை அல்ல. அவை அவர்களால் வாழமுடியாத சூழ்நிலைக்குக் கொண்டு செல்லும் அளவுக்கு தற்போது பூதாகாரமாக வடிவெடுத்துள்ளன!

வேலைக்குச் செல்லும் பெண்கள் வாழ்வியல் கோளாறுகளாவன

Anxiety -மன நிலைக் கலக்கம்
Fear -பயம்
Uneasyness-இயல்பாக இருக்கமுடியாமை
Hysteria -ஹிஸ்டீரியா- வீட்டிலும், அலுவலக அழுத்தங்களிலும்.

இவற்றால் உறவுகளை சரிவர பராமரிக்க முடியாமை (Battling Relationship Issues)

பணியிடச் சுமைகளைச் சமாளிக்க இயலாமை (Not able to cope up with job and studies pressure)

வீட்டிலிருப்போரிடமிருந்தும், அலுவலகத்தில் உள்ளோரிடமிருந்தும் விலகிப்போதல் ஆகியவை ஏற்படுகின்றன.

இத்தகைய நோய்க்குறிகளை மிகவும் படித்த பெண்கள், மற்றும் அவருடைய குடும்பத்தினர், நண்பர்கள், கணவன் ஆகியோர் கூட உணர முடிவதில்லை. அப்படிக் கூறினாலும் தான் படித்தவர், தனக்குத் தெரியாததா? என்ற அதீத நம்பிக்கையினால் பிரச்சனையை ஒத்துக்கொள்ளவோ, அதனைக்கேட்டு அதன்படி சீரமைப்பு முயற்சிகளிலோ ஈடுபடுவதில்லை. அவர்கள் தங்களுடைய மனநிலைக் குழப்பங்கள், மனநிலை மாற்றம் ஆகியவற்றை உணருவது இல்லை என்பது ஒருபுறமிருக்க, தன்னுடைய பிரச்சினைகளுக்குப் பிறர்தான் காரணம் என்று எண்ணி அதீத கோபம் வெறுப்பு ஆகியவற்றைத் தன் குடும்பத்தாரிடம் காட்டி அவர்களிடமிருந்து விலகிச் செல்கிறார்கள்.




குடும்பம், வேலை ஆகிய இரண்டின் அழுத்தத்தையும் தாங்க முடியாமல் அவதியுறுவதே இன்றைய பெண்களின் மிகப் பெரும் பிரச்சினையாக உள்ளது.

இத்தகைய பிரச்சினைகள் இன்றைய எமது குடும்ப அமைப்பில் மிகப்பெரும் விரிசல்களை ஏற்படுத்துவதே மிகவும் கவலைக்குரியதாக உள்ளது.

முந்தைய குடும்ப அமைப்பில் குழந்தைகளைக் கவனிக்கவும், வீட்டைக் கவனித்துக் கொள்ளவும் பெற்றோர்கள் இருந்தனர். ஆனால் இன்றைய நகரச் சூழ் நிலைகள் அப்படி அமைவதில்லை.

பெண்களே பெரிய பொறுப்பான அலுவலகங்களின் உயரிய வேலையையும், கணவன், குழந்தைகள் என்ற குடும்பத்தின் பொறுப்புக்களையும் சுமக்கும் போது ஏற்படும் மனவியல் அழுத்தங்கள் இன்றைய பெண்கள் முன் உள்ள மிகப்பெரிய சவால்! இதில் எத்தனை பேர் வெல்கிறார்கள், எத்தனை பேர் தோற்கிறார்கள் என்பதே எதிர்காலத்தில் குடும்ப அமைப்புகள் இருக்குமா? அல்லது மெல்ல அழியுமா? என்ற கேள்விகளின் விடையாக அமையும்!

## தேங்காய் பர்பி



மைக்ரோவேவ் உபயோகித்து மூன்றரை நிமிடங்களில் ருசியான தேங்காய் பர்பி செய்வது எப்படி? இதோ உங்களுக்கான செய்முறை.

**தேவையான பொருள்கள்:**

தேங்காய்த் துருவல் - 1 கப்
ஏலக்காய் - 3
முந்திரிப் பருப்பு - 8
சர்க்கரை - 1 கப்
பச்சைக் கற்பூரம் - 1 சிட்டிகை
நெய் - 1 தேக்கரண்டி

**செய்முறை:**

தேங்காயை நைசாகத் துருவிக் கொள்ளவும்.

ஏலக்காயையும், பச்சைக் கற்பூரத்தையும் சிறிது சர்க்கரையுடன் சேர்த்து, நைசாகப் பொடித்துக் கொள்ளவும்.

முந்திரிப் பருப்புகளைச் சிறு துண்டுகளாக ஒடித்துக் கொள்ளவும்.

எல்லாப் பொருள்களையும் நன்றாகக் கலந்து ஒரு மைக்ரோவேவ் பாத்திரத்தில் மூடாமல் வைக்கவும்.


3 1/2 நிமிடங்கள் மைக்ரோ ஹையில் வைக்கவும். நடுவில் ஒருமுறை லேசாகக் கிளறிக் கொடுக்கவும்.

மைக்ரோவேவிலிருந்து எடுத்த கையோடு, நெய் தடவிய தட்டில் கொட்டிச் சமமாகப் பரப்பவும்.

சிறிது சூடு ஆறத் தொடங்கியதும், நெய் தடவிய கத்தியால் 3 செ.மீ. சதுரக் கட்டிகளாக வெட்டவும்.

மூன்றரை நிமிடங்களில் தேங்காய் பர்பி தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# காங்கிரசுடன் கூட்டணிசேர தே.மு.தி.க.முயற்சி;

நடந்துமுடிந்த புதுக்கோட்டை சட்டசபைத் தேர்தலில் வெளிப்படையாக தி.மு.க - தே.மு.தி.க. உறவு மலரும் என எதிர்பார்க்கப்பட்டாலும் அது நடக்கவில்லை. பிரசாரத்தின்போது விஜயகாந்தின் மனைவி பிரேமலதா திமு.க.வை காட்டமாக விமர்சித்தது இந்தப் புதிய கூட்டணி நம்பிக்கையில் இருந்த இருதரப்புக்கும் பெரும் பின்னடைவாகப் போனது.

எனினும் பிரேமலதா காங்கிரஸ் கட்சியை விமர்சிக்காது அமைதி காத்தது, காங்கிரசுடன் உறவுக்கு தே.மு.தி.க. விளைவதை தெளிவாக எடுத்துக் காட்டியது. இடைத்தேர்தல் நடந்தபோதே மத்தியிலுள்ள காங்கிரஸ் அரசு பெற்றோல் விலையை அதிகரித்திருந்தது. இதை எதிர்த்து அ.தி.மு.க, தி.மு.க என அனைத்துக் கட்சிகளுமே போராட்டம் நடத்தியிருந்தன. ஆனாலும் விஜயகாந்த் பெயரளவில் போராட்டம் நடத்தியதுடன் நிறுத்திக்கொண்டார்.

காங்கிரசுடன் உறவை அவர் விரும்புகிறார் என்பதை இந்நிகழ்வுகள் காட்டிக் கொடுத்தன. 2014ல் அடுத்து வரும் லோகசபா தேர்தலில் ஏதாவது ஒரு கட்சியுடன் கூட்டணி வைத்தே ஆகவேண்டிய நிர்ப்பந்தம் தே.மு.தி.க.வுக்கு உள்ளது. அதிலும் தேசிய தேர்தல் என்றால் தேசிய கட்சியான காங்கிரசுடன் உறவு கொள்வது தே.மு.தி.க.வுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். காங்கிரஸ் - தி.மு.க. உறவு இன்றைக்கு முறியுமா நாளைக்கு முறியுமா என தடுமாறும் நிலையில் காங்கிரஸ் புதிய கூட்டாளிகளைத் தேடக் கூடும். காங்கிரசுடனோ பி.ஜே.பி.யுடனோ கூட்டு வைக்காது தனித்து நின்று தனது கெட்டித்தனத்தை காண்பிக்கவே ஜெயலலிதா விரும்புகிறார். எனவே காங்கிரசுடன் கூட்டணி வைக்க அவரும் விரும்பவில்லை. இவ்வாறு நிலைமைகள் இருப்பதால் காங்கிரசுக்கும் கூட்டணி வைக்க விஜயகாந்தை விட்டால் வேறு வழியில்லை என்ற நிலையே உள்ளது.

எனவே, இதற்கு வழிசமைக்கும் விதமாக காங்கிரசை அவ்வளவாக சாட வேண்டாம் என விஜயகாந்த் தனது கட்சியினரை அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிகிறது. கடந்த ஆண்டு சட்டசபைத் தேர்தலின்போது மத்தியில் ஆளும் காங்கிரசையும் மாநிலத்தை ஆண்ட தி.மு.க.வையும் ஒரு பிடி பிடித்து வந்த விஜயகாந்த் இப்போது காங்கிரசைச் சாடும் விடயத்தில் அடக்கி வாசிப்பது இதை ஒட்டியே என்று தெரிகிறது.

பி.ஜே.பி. மதவாதக்கட்சி என்றால் தேசியக் கட்சி என்ற போதும் பி.ஜே.பி.யுடன் அணிசேர விஜயகாந்த் விரும்பவில்லை. ஆரம்பத்திலிருந்தே அவர் காங்கிரசுடன் மறைமுகமாக நல்லுறவிலேயே இருந்து வந்துள்ளார். அவரது 29 எம்.எல்.ஏ.க்களுமே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் காங்கிரசின் வேட்பாளரையே ஆதரிப்பர் என்றும் கூறப்படுகிறது. இவையெல்லாம் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. தலைமைகளுக்கு அவ்வளவு உவப்பான விடயங்களல்ல. அ.தி.மு.க.வானது லோக்சபா தேர்தலில் தனித்தே போட்டியிட விரும்புகிறது. காங்கிரஸ் கூட்டணியில் விஜயகாந்த் இணைவார் என்ற ஹேஷ்யங்களைப் பற்றி ஜெயலலிதா கிஞ்சித்தும் கவலைப்பட்டவராகத் தெரியவில்லை. அவரது தன்னம்பிக்கை அளவுக்கு மிஞ்சிய தன்னம்பிக்கையா என்பது போகப்போகத் தெரியவரும்.

அதே வகை தன்னம்பிக்கையுடன் இருக்க கலைஞரால் முடியவில்லை. புதுக்கோட்டை இடைத்தேர்தலில் தே.மு.தி.க. ஆதரவைக் கூட்டணிக்கு அடித்தளம் அமைக்கலாம் எனக் கலைஞர் கருதி இருந்தார். ஆனால் பிரேமலதா தி.மு.க.வின் ஆட்சியைச் சாடியது கூட்டணியைக் குழப்பியது போலாகிவிட்டது. தே.மு.தி.க.விலுமே ஒரு தரப்பு இவ்வாறு தி.மு.க.வை சீண்டாது நாசுக்காக அவர்களது வாக்குகளை அப்படியே அள்ளி இருக்கலாம் எனக் கூறிக் கவலைப்பட்டுக் கொண்டனராம்.

அ.தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெறுவது உறுதியே என்றாலும் அவரது வெற்றி இடைவெளியை குறுக்கி தே.மு.தி.க.வுக்கு வலுவான வாக்கு வங்கி உள்ளது என நிரூபிக்க தே.மு.தி.க.வினர் விரும்பி இருந்தனர். இந்த எண்ணத்தில் மண்ணள்ளிப்போட்டதுபோல பிரேமலதா காரியத்தைக் கெடுத்தார் என்று பேசப்பட்டு வந்தது. எனினும் இந்தச் செய்தி அச்சுக்குப்போகும்போது வாக்குப்பதிவில் தி.மு.க.வினரும் மிக ஆர்வத்துடன் பங்கேற்றதாக தகவல்கள் கூறுகின்றன. அவ்வாறாயின் அவர்கள் நிச்சயமாக தே.மு.தி.க.வேட்பாளரை ஆதரித்திருப்பர் என்பதில் சந்தேகமில்லை.

வெல்வது அ.தி.மு.க. வேட்பாளரே என்பது உறுதியாகத் தெரிந்தாலும் அவரது வெற்றிக்கு கடும் சவாலாக தே.மு.தி.க. இருக்கமுடியுமாயின் அதுவே போதுமானது என்பது விஜயகாந்தின் எதிர்பார்ப்பாகும்.

இதற்கிடையில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தின் தலைமீது தொங்கிக் கொண்டிருந்த கத்தி இன்னும் தாழ்வாக அவரது கழுத்துக்கு வந்துவிட்டதோ என எண்ணுமளவுக்கு கடந்த வார நிகழ்வுகள் அமைந்துள்ளன. ஏற்கனவே இருதடவை 'இராஜினாமா' என்ற கண்ணியில் தப்பிப்பிழைத்த சிதம்பரம் இம்முறை மற்றொரு தாக்குதலுக்கு இலக்கானார்.

கடந்த 2009 லோக்சபா தேர்தலில் அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட சிவகங்கை தொகுதியில் அவரது எதிரி வேட்பாளர் அ.தி.மு.க.வின் ராஜ கண்ணப்பன் தாக்கல் செய்த தேர்தல் முடிவை ஆட்சேபிக்கும் மனுவை மதுரை உயர் நீதிமன்ற கிளை விசாரணை அனுமதித்ததை அடுத்து சிதம்பரம் தார்மீக அடிப்படையில் பதவி விலகுமாறு எதிர்க்கட்சிகள் நிர்ப்பந்திக்கத் தொடங்கியுள்ளன. குறிப்பாக சிதம்பரத்தை பரம வைரியாகக் கருதும் ஜெயலலிதா சிதம்பரம் உள்துறை அமைச்சர் பதவியில் தொடர்வது ஜனநாயகத்துக்கு இழுக்கு என கண்டித்துள்ளார். இதற்கு முன்னர் ராசா சம்பந்தப்பட்ட 2ஜி ஸ்பெக்ரம் வழக்கிலும் ராசா விதிமுறைகளை மீறி தொலைத்தொடர்பு உரிமம் வழங்க சிதம்பரம் வெளிப்படையாக இடமளித்ததாக் குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன.

அதன்போதும் அவர் பதவி விலகும்படி எதிர்க்கட்சியினர் கோஷம் எழுப்பியிருந்தனர். பின்பு சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரம் ராஜஸ்தான் அம்புலன்ஸ் சேவையில் ஊழல் செய்ததான குற்றச்சாட்டுகளினால் நாடாளுமன்றமே சில தினங்கள் செயலிழக்கும் அளவுக்கு எதிர்க்கட்சிகள் சிதம்பரம் எதிர்ப்புக் கோஷத்தை தீவிரப்படுத்தி இருந்தன. இந்தத் தடவை தேர்தலில் தில்லுமுல்லு செய்து வெற்றி பெற்றதான குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதற்குப் பதிலளித்த சிதம்பரம் தற்போதய லோக்சபாவில் 530க்கு மேற்பட்ட எம்பிக்களில் 111 பேர் மீது தேர்தல் தில்லுமுல்லு என வழக்குப் பதியப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி அவர்களும் பதவி விலக வேண்டுமே என மறுத்தாக் போட்டுள்ளார். எனினும் உள்துறை அமைச்சராக இருப்பவர் போலல்ல ஏனைய 111 எம்.பி.க்களும். அவர்கள் சாதாரண எம்.பி.க்கள் மட்டுமே.

சிதம்பரமோ பிரதமருக்கு அடுத்த பிரதான பதவியான உள்துறை அமைச்சர் பதவியில் உள்ளார். தான் வகிக்கும் உயர்பதவியின் கௌரவத்தைக் காப்பதை முன்னிட்டு அவர் தார்மீக அடிப்படையில் விலக வேண்டுமென பி.ஜே.பி. உள்ளிட்ட எதிர்கட்சிகள் கோஷம் எழுப்பத் தொடங்கியுள்ளன. வழக்கு விரைந்து விசாரணைக்கு எடுக்கப்பட்டு சிதம்பரம் மீது சிறு மாசு மறுவேனும் நிரூபிக்கப்படின் அவர் அமைச்சரவையிலிருந்து விலகுவதைத் தவிர வேறு வழியில்லை. அந்தத் தேர்தலில் ஆரம்பத்தில் அ.தி.மு.க. வேட்பாளர் ராஜகண்ணப்பன் முன்னிலையில் இருந்ததாகவே செய்திகள் வெளிவந்திருந்தன.

எனினும், சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரம் பம்பரமாக சுழன்று தில்லுமுல்லுகள் செய்து தந்தையை வெற்றியடையச் செய்ததாக அப்போதே தகவல்கள் பரவலாக உலாவத் தொடங்கி இருந்தன. சிதம்பரம் மத்திய அரசில் முக்கிய புள்ளியாக இருந்தபோதும் தேர்தல்களில் வெல்வது அவருக்கு சிம்மசொப்பனமாகவே இருந்துள்ளது என்பதை புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

முதன் முதலில் 1977ல் அவர் போட்டியிட்ட சட்டசபைத் தேர்தலில் படுதோல்வியுற்றார். இதன்பின் 1980ல் முதல் தடவையாக சிவகங்கை தொகுதிக்கு அதிர்ஷ்டவசமாக எம்.பி.யானார். தொடர்ந்து 1984 லோக்சபா தேர்தலிலும் இந்திராகாந்தி மரண அனுதாப அலையில் அமோக வெற்றி கண்டார். அதன் தொடர்ச்சியாகவே அவர் மத்திய இணையமைச்சராக ராஜீவால் நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

1989, 1991, 1996, 1998 என தொடர்ந்து ஆறுமுறை சிவகங்கை எம்பியாக இருந்த அவரை 1999ல் காங்கிரசின் சார்பில் சுதர்சன நாச்சியப்பன் தோற்கடித்திருந்தார். அச்சமயம் சிதம்பரம் தமிழ் மாநில காங்கிரசில் போட்டியிட்டார். எனவே, தேர்தல் தோல்வி என்பது சிதம்பரத்துக்கு வழமையான ஒன்றுதான் என்பதும் சர்ச்சைக்குரிய இந்த 2009 தேர்தலிலும் அவர் தோல்வியையே காண இருந்தார் என்பதும் வெளிப்படையாக தெரியாவிட்டாலும் அதுவே உண்மையாக இருக்கக் கூடும் என்பது பலருக்கும் தெரிந்த விடயமே. சோனியாகாந்தியின் நம்பிக்கை ஒன்றே இதுகாறும் சிதம்பரத்தைக் காத்து வந்துள்ளது. நாளாந்தம் சிதம்பரம் காரணமாக லோக்சபா ஒத்திவைக்கப்படுவதை பிரதமரும் எவ்வளவு நாளைக்குத்தான் பொறுக்கமுடியும்? புதிய உள்துறை அமைச்சராக ஏ.கே.அந்தோனியை நியமிக்க சோனியா தயாராகவே இருப்பதாகவும் தெரிகிறது. இதுதவிர நிதியமைச்சர் முகர்ஜி ஜனாதிபதியாகலாம் என பரவலாக எதிர்பார்க்கப்படுவதால் புதிய நிதியமைச்சருமே நியமிக்கப்பட வேண்டிய தேவையும் எழலாம்.

■ அபிஜித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# லண்டன் உங்களை வரவேற்பதில்லை



பல வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் கொழும்பு துறைமுகத்தில் வெள்ளைக்கார இளைஞர் ஒருவர் இங்கிலாந்திலிருந்து வந்த கப்பலிலிருந்து இறங்குகிறார். இலங்கையை ஆண்ட பிரிட்டிஷ் அரசிடம் அவருக்கு ஒரு வேலை காத்திருக்கிறது. அவருடைய சடைநாய் அவரை முந்திக்கொண்டு பாய்ந்து பாய்ந்து ஓடுகிறது. புதிய நாடு, புதிய மனிதர்கள் புதிய மணம். அப்பழுக்கில்லாத வெள்ளை உடையில் ஒரு சிங்களவர் நிற்கிறார். நாய் ஓடிச்சென்று காலைத் தூக்கி லண்டன் விளக்குக் கம்பம் என்ற நினைப்பில் அவர் மேலே மூத்திரம் பெய்கிறது. அந்த மனிதர் ஒரு பேறு கிடைத்தது போல உணர்ச்சியற்ற நிலையை அடைகிறார். அவர் மனதுக்குள் நாயை திட்டியிருக்கலாம், ஆனால் எதிரில் நிற்கும் வெள்ளைக்கார அதிகாரியை பார்த்திருப்பார். அதனால் பேசாதிருக்கிறார். இப்படியாக குறிப்புகள் எழுதி வைத்திருக்கிறார் இலங்கையில் உயர் அதிகாரியாக 1904 - 1911 வருடங்களில் பணியாற்றிய லியனாட் வூல்ப் என்ற ஆங்கிலேயர். நூறு வருடங்களுக்கு முந்திய இலங்கையைப் பற்றிய துல்லியமான சித்திரத்தை இந்தச் சம்பவம் தருகிறது.

இளைய அப்துல்லாஹ் எழுதிய 'லண்டன் உங்களை வரவேற்பதில்லை' என்ற தொகுப்பு நூலை படித்தபோது மேலே சொன்ன சித்திரத்தை நினைவூட்டுவதுபோல, சமகாலத்தில் லண்டனில் முதன்முதல் போய் இறங்கும் ஓர் இலங்கை இளைஞனின் படம் ஒன்று கிடைத்தது. ஒவ்வொரு கட்டுரையும் ஒரு காலக்கட்டத்தின் முக்கியமான பதிவாக இருந்தது. கைத்தொலைபேசிகள் பற்றி ஒரு கட்டுரை. அதைத் தொடர்ந்து குழந்தை தாய்க்கு பாரமா என ஒன்று. புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் வாழ்க்கையை சித்தரிக்கும் விதத்தில் தடம்புரளும் தமிழர் வாழ்வு என இன்னொன்று. இப்படி ஒவ்வொரு பதிவும் ஏதோ ஒரு விதத்தில் லண்டன் வாழ்வு முறையை சொல்வதாகத்தான் அமைந்திருக்கிறது.

இளைய அப்துல்லாஹ் முதன்முதல் லண்டன் வந்திறங்கிய நிகழ்வை கலைபடச் சொல்கிறது புத்தகத்தின் தலைப்பாக அமைந்த 'லண்டன் உங்களை வரவேற்பதில்லை' என்ற கட்டுரை. முதலில் ஆறு மாதங்களுக்கு அவருக்கு வேலை கிடைக்கவில்லை. பின்னர் வீதி வீதியாக தொலைபேசி அட்டைகள் விற்கும் வேலை கிடைத்தது. காலையில் அட்டைகளை எடுத்துக்கொண்டு புறப்பட்டால் மாலையில் மீதி அட்டைகளுடன் வந்து பணத்தைக் கட்ட வேண்டும். கையிலே நிறையக் காசு புழங்கும் வேலை. ஒருநாள் இவரைப் போல வேலைசெய்த ஒருவரை நினைவு தப்பும் வரைக்கும் அடித்துப்போட்டுவிட்டு காசை கொள்ளையடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். ஆகவே அந்த வேலையைத் துறந்துவிட்டு பெற்றோல் நிலையத்தில் வேலை பார்க்கிறார். அங்கே அவருடைய முதலாளியை அவர் மனைவி வந்து ஆட்களுக்கு முன்னால் அடிப்பதை பார்த்து அதையும் விட்டுவிடுகிறார். அவருடைய முதல் வேலைதான் மிக மோசமானது. உருளைக்கிழங்கு தொழிற்சாலையில் கடுமையான அதிகாரியின் கீழே, இரக்கமற்ற, சட்டப்படி அங்கீகாரம் இல்லாத வேலை. ஆகக்குறைந்த நாள் கூலி. கைகள் விறைக்க குளிர் தண்ணீரில் கிடாரமாக உருளைக் கிழங்குகளை எடுத்து கூரிய கத்தியால் வெட்ட வேண்டும். இதைப் படித்தபோது 170 வருடங்களுக்கு முன்னர் ஒலிவர் ட்விஸ்ட் நாவலில் சார்ள்ஸ் டிக்கின்ஸ் வர்ணித்த "ஐயா இன்னும் கொஞ்சம் உணவு" என்று கெஞ்சிய கட்டம் நினைவுக்கு வருகிறது. இன்னமும் சில இடங்களில் லண்டன் அந்தக்காலம்போல அப்படியேதான் இருக்கிறது என்று நினைக்கும்போது திகைப்பாயிருக்கிறது.



இளைய அப்துல்லாஹ்வை நான் சந்தித்தது கிடையாது. அவ்வப்போது அவர் எழுதுவதை படித்ததுதான். அவர் தொலைபேசியில் ஒருமுறை அழைத்தபோது அவரைப் பற்றிய பின்னணியைக் கேட்டேன். அவர் சொன்னது கூட ஒரு திகில் நாவல் போல இருந்தது. ஒட்டுசுட்டானில் புளியங்குளம் என்ற கிராமத்தில் பிறந்தவர். 1981ம் ஆண்டில் கிராமத்தை விட்டு கால் போனபோக்கில் திக்கற்ற பயணத்தை ஆரம்பித்தார். உடுப்பிட்டியில் மேசன் வேலையும் தச்சு வேலையும் பயின்றார். வல்வெட்டித்துறையில் மேசன்மார்களுக்கு வீடு கட்ட முட்டாள் தொழில் செய்தார். மயிலிட்டியில் மீன் பிடிக்கும் தொழில். திருகோணமலையில் மிளகாய் அரைக்கும் மில்லில் சிலகால வேலை. அதே நேரம் கலேவெல பகுதியில் செத்தல் மிளகாய் கொள்வனவு செய்யும் வியாபாரம். மாத்தளையில் மருந்தகத்தில் வேலை பார்த்தார். நாவலப்பிட்டியில் அரபுக் கல்லூரியில் படித்து அக்குறணையில் சின்னப் பிள்ளைகளுக்கு குர்ஆன் சொல்லிக்கொடுத்தார். இஸ்லாமிய வங்கி ஒன்றில் வேலை செய்தபோது இலங்கை வானொலியில் நிகழ்ச்சி செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த சமயம் ஜேர்மனியில் நடந்த ஓர் இலக்கிய சந்திப்புக்காக வந்த இடத்தில் கென்டயினரில் ஏறிக் களவாக லண்டன் போய்ச் சேர்ந்தார். இவ்வளவு அலைச்சல்களிலும், சோதனைகளிலும் அவர் எழுத்துத் தொழிலை நிறுத்தவேயில்லை. தற்போது லண்டனில் தீபம் தொலைக்காட்சியில் வேலை செய்கிறார். அறிவிப்பாளர், செய்திவாசிப்பாளர், செய்தி தயாரிப்பாளர், விவரண தயாரிப்பாளர், என்று பல பணிகள்.

சைக்கிள் ஓட்டுவது பற்றி ஒரு கட்டுரை. இளைய அப்துல்லாஹ்வுடைய நண்பர் ஒருவருக்கு சைக்கிள் ஓட்டத் தெரியாததால் லண்டன் அரச தபால் சேவையில் கிடைக்கவிருந்த வேலை கிடைக்கவில்லை. சைக்கிள் ஓட்டத் தெரிந்தால்தான் அந்த வேலை என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள். அதைப் படித்தபோது இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் வெளிவந்த இத்தாலிய திரைப்படமான "பைசிக்கிள் தீவ்ஸ்" ஞாபகத்துக்கு வந்தது. அதிலேயும் இப்படித்தான் ஒருத்தருக்கு அவர் ஒரு சைக்கிள் கொண்டுவந்தால்தான் அவருக்கு போஸ்டர் ஒட்டும் வேலை கிடைக்கும் என்று சொல்வார்கள். சிறுவனாயிருந்தபோது புளியங்குளத்தில் சைக்கிள் பழகிய அனுபவங்களை சொல்லிக்கொண்டு வந்த இளைய அப்துல்லாஹ் இன்னும் பல விவரங்களைத் தருகிறார். சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கு சைக்கிள் பயணமே உகந்தது என்ற பிரசாரங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் ஒலிக்கத் தொடங்கிவிட்டன. பல நாடுகளில் சைக்கிள் பாதைகள் தனியாக உருவாகி சைக்கிள் பாவனையும் அதிகமாகிவிட்டது. நோர்வேயில் இலவச சைக்கிள் அட்டைகள் வழங்குகிறார்கள். அந்த அட்டையை உபயோகித்து நகரத்தின் எந்த இடத்திலிருந்தும் ஒரு சைக்கிளை எடுத்துக் கொண்டு இன்னொரு இடத்துக்கு பயணிக்கலாம். போய்ச் சேர்ந்த இடத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு போக, அதை இன்னொருவர் எடுத்து உபயோகிப்பார். ஹொலண்ட் நாட்டுப் பிரதமர் தினமும் பாராளுமன்றத்துக்கு சைக்கிளில்தான் பயணம் செய்கிறார். இப்படியான தகவல்கள் கிடைக்கின்றன.

இரண்டு பிரபல ஆங்கில தினசரிகளுக்கு எதிராக வழக்குத் தொடுத்து வென்ற பரமேஸ்வரன் சுப்பிரமணியன் [illegible] படித்தபோது மனம் அதிர்ந்து, இப்படியும் நடக்குமா என்ற வினா ஒவ்வொரு வாசகரின் மனதிலும் எழும். ஈழத்துப் போரில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களைக் காப்பாற்றும் கோரிக்கை வேண்டுகோள் வைத்து பரமேஸ்வரன் ஏப்ரல் 7ம் தேதி 2009ம் ஆண்டு உண்ணாவிரதம் ஆரம்பித்து அப்படியே தொடர்ந்து 24 நாட்கள் பட்டினிப் போராட்டம் நடத்தினார். ஆனால் லண்டனில் வெளியான 'சன்' 'டெய்லி மெயில்' ஆகிய இரண்டு ஆங்கிலப் பத்திரிகைகளும் அவர் நாடகம் ஆடியிருப்பதாகவும், திருட்டுத்தனமாக உணவு உண்டதாகவும் எழுதின. பரமேஸ்வரன் மனம் நொந்துபோய் மான நட்ட வழக்குத் தொடுத்து அதில் வெற்றியும் பெற்றார். இரண்டு பத்திரிகைகளும் அவரிடம் பகிரங்க மன்னிப்பு கேட்டதுடன் நட்ட ஈடாக பரமேஸ்வரனுக்கு 77,500 பவுண்கள் வழங்கின. பரமேஸ்வரனை இளைய அப்துல்லாஹ் நேர்கண்டபோது வழக்கில் தான் தோற்றிருந்தால் தற்கொலை செய்திருப்பது நிச்சயம் என பரமேஸ்வரன் கூறியிருந்தது அவர் இந்தச் சம்பவத்தால் எவ்வளவு வேதனை அடைந்திருந்தார் என்பதைத்தான் காட்டுகிறது.

மிகவும் சுவாரஸ்யமாக எழுதப்பட்டது கன்னிமையை விற்ற ஹங்கேரியப் பெண் கட்டுரை. வாசித்தபோது பல இடங்களில் வாய்விட்டுச் சிரிக்க வைத்தது. ஆனால் இது நகைச்சுவை கட்டுரை அல்ல. வாழ்வின் மீதான பல பார்வைகளை மீளாய்வு செய்ய வைக்கும் கட்டுரை. 'மிஸ் ஸ்பிரிங்' என்ற 18 வயதான ஹங்கேரியப் பெண், தாயின் முழுச் சம்மதத்துடன் தன் கன்னிமையை ஏலத்தில் விட்டு ஒரு பிரிட்டிஷ் காரருக்கு 2 லட்சம் பவுண்களுக்கு விற்றிருக்கிறார். ஏலத்தின் கடைசி வரை எஞ்சிய ஐரிஷ் காரருக்கும் பிரிட்டிஷ் காரருக்கும் இடையில்தான் கடும் போட்டி. மிஸ் ஸ்பிரிங் பிரிட்டிஷ் காரரை தெரிவு செய்ததற்கு என்ன காரணம் என்று கேட்டபோது அந்தப் பெண் அவரிடம் பணம் மாத்திரமல்ல சிறிது கருணையும் இருந்தது என்று சொல்லியிருக்கிறார். இது விபசாரம் அல்ல. 18 வருடங்களாக கட்டிக்காத்த கன்னிமைக்கு ஒரு விலை உண்டு. அதை விற்றதாக பெண் சொல்கிறார். இந்த ஒப்பந்தம் மூலம் அடமானத்தில் இருக்கும் தாயாரின் வீட்டை மீட்கலாம் அத்துடன் தன் படிப்பைத் தொடரலாம் என மிஸ் ஸ்பிரிங் கூறுவதை பலர் நியாயப்படுத்தினாலும் பெரும்பான்மையானவர்கள் சம்மதமடையவில்லை.

புத்தகத்தை முடித்தபோது சமீபத்தில் படித்த சோஃபியா ரோல்ஸ்ரோயின் நாட்குறிப்புகள் ஞாபகத்துக்கு வந்தன. ரோல்ஸ்ரோய் உலகப் புகழ் வாய்ந்த ரஸ்ய எழுத்தாளர். அவருடைய 48 வருட மனைவி சோஃபியாவின் குறிப்புகளில் நிறையப் புலம்பல்கள் இருக்கும். நான் நிறைய அவரைக் காதலிக்கிறேன். இதனிலும் அதிகமாக என்னால் காதலிக்க முடியாது அவருடைய இன்பத்துக்காகத்தான் நான் இருக்கிறேன். நான் ஒரு வீட்டுத் தளபாடம்தான் என்றெல்லாம் எழுதுவார். இதையெல்லாம் ஒருவர் ஏன் எழுதவேண்டும். அதை ஏன் இன்னொருவர் படிக்கவேண்டும் என்றெல்லாம் கேள்வி இருக்கிறது. ரோல்ஸ்ரோய் மாபெரும் மேதை. அவரையும் அவருடைய எழுத்தையும் இன்னும் ஆழமாக அறிவதற்கு இந்தக் குறிப்புகள் பயன்படுவதோடு அவருடைய எழுத்தின் பின்புலமும் தெளிவாகும். மாபெரும் நதி போல ஓடிக்கொண்டிருக்கும் வரலாற்றை அறிவதற்கு மேலும் ஒரு யன்னல் எங்களுக்கு திறந்து கொள்கிறது.

இலக்கியம் என்றால் என்ன? வாழ்வின் புதிருக்கு விடை தேடுவதுதானே? மனித நல்லியல்பை நோக்கிய நகர்தானே? வாழ்வின் உன்னத கணத்தை தரிசிக்கும் ஒரு விடாமுயற்சி. அந்த வகையில் ஒரு காலகட்டத்தின் பிரதிபலிப்பாக இந்த எழுத்து நிற்கும். நண்பர் இளைய அப்துல்லாஹ் நிறைய எழுதவேண்டுமென வாழ்த்துகிறேன்.

(இளைய அப்துல்லாஹ் எழுதிய 'லண்டன் உங்களை வரவேற்பதில்லை' நூலுக்கு பிரபல எழுத்தாளர் அ.முத்துலிங்கம் எழுதிய முன்னுரை)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூலியஸ் சீஸரின் கொலை...!

யூலியஸ் சீஸர் சாதாரண குடும்பத்தில் ஒளரேலியாவின் மகனாக கி.மு.100 வது ஆண்டில் பிறந்தார். சுபுரா என்ற ரோம நகர்ப்பகுதியில் ஒரு சாதாரண வீட்டில் வசித்தார். சீஸரின் தந்தையை விட அவர் தாயின் கவனிப்பில் தான் வளர்ந்தார். சீஸரின் கல்வி அவரின் ஏழாம் வயதில் இலத்தீன், கிரேக்க மொழிப்பாடங்களுடன் துவங்கியது. கிரேக்க, இலத்தீன் இலக்கணம், கணித இயல், உரைத் திறன் முதலியவற்றை சீசரும், அவரின் தங்கைகளும் வீட்டிலேயே கற்று அறிந்தனர். பன்னிரண்டு வயதில் இலக்கியம், கவிதைகள் இவற்றையும் சீசர் கற்றிருந்தார். சீஸரின் ஆசிரியர் பெயர் மார்க்கஸ் அந்தோனியஸ் க்னிஃபோ அவர் எகிப்திய நாட்டிலுள்ள அலெக்ஸாந்திரியா நகரத்தில் கிரேக்கம், இலத்தீன் மொழிகளை நன்கு கற்றுணர்ந்தார்

யூலியஸ் சீஸர் கான்சல் கொர்னெலியஸ் மகள் கொர்னெலியாவை கி.மு. 84 ஆம் ஆண்டில் திருமணம் செய்து கொண்டார். சீஸர் தன் பத்தொன்பதாம் வயதில், படைவீரனாகச் சேர்ந்தார். தெர்முஸ் என்ற உரோமப் படைத்தலைவர், மிடிலின் என்ற கிரேக்க நகரை முற்றுகையிட்டார். அம்முற்றுகை வெற்றி அடைய, அவருக்கு ஒரு கப்பல் படை தேவைப்பட்டது சீஸரின் முயற்சியால், கப்பல் படையுடன் தெர்முஸ் மிடிலின் நகரை வென்றார். சீஸர் வெற்றி முடியை அணியும் உரிமையைப் பெற்றார். கி.மு.78 ஆம் ஆண்டில், சுல்லா உரோமை நகரில் காலமானார். உடனே சீஸர் உரோமை நகருக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்.

சீஸர் உரோமை நகருக்குத் திரும்பி வந்ததும் தன் அரசியல் வாழ்க்கையில் தீவிரமாக ஈடுபட்டார். கி.மு. 69ஆம் ஆண்டில் சீஸரின் மனைவி கொர்னெலியா காலமானார். கி.மு. 67ஆம் ஆண்டில் சுல்லாவின் பேத்தி பொம்பெயாவை மணந்து கொண்டார். அதே ஆண்டில், மிகவும் முக்கியமான ஆப்பியன் வழியை சீர்திருத்தும் பொறுப்பை ஏற்றார். இந்தப்பணியில்

கிளியோபட்ராவை தன் சார்பில் எகிப்தில் அரசியாக நியமித்தார். வட ஆபிரிக்காவில் இருந்த தன் மற்ற எதிரிகளை வென்ற பின்னர், கி.மு. 47ம் ஆண்டு தனது ஆட்சியை முழுமையாக நிலைநிறுத்திய மனநிறைவுடன் ரோமிற்குத் திரும்பினார். ஆனால் சீஸர் அதனுடன் நிற்கவில்லை. கி.மு. 44ம் ஆண்டு வரை தொடர்ந்து தன்னை நிலைநிறுத்திக் கொள்ள போரிட்டு வந்தார். அந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தன்னை வாழ்நாள் சர்வாதிகாரியாகப் பிரகடனம் செய்தார். அவரது இந்தச் செயலும் அதிகார ஆணவமும் அவரது அரசவையில் இருந்தவர்களை அவர் மீது வெறுப்படைய வைத்தன. அவரது அரசவையிலிருந்த அறுபது உறுப்பினர்கள் சீஸரின் சர்வாதிகாரத்தை ஒழிக்க ஒரே வழி அவரைக் கொல்வதுதான் என்று தீர்மானித்தார்கள்.

டமாஸ்கசைச் சேர்ந்த நிக்கோலஸ் என்பவர் சீஸரது மரணத்தைப் பற்றி விரிவாக விளக்குகிறார். அவர் சீஸர் கொல்லப்பட்டதை நேரில் பார்க்கா விட்டாலும் அந்த நிகழ்ச்சியின் போது இருந்தவர்களை சந்தித்துப் பேசும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது.

சீஸரைக் கொல்லத் திட்டமிட்டவர்கள் ஒருபோதும் ஒரே சமயத்தில் சந்தித்துக் கொள்ளவில்லை. யாராவது ஒருவர் வீட்டில் சிலர் கூடிப் பேசுவார்கள். நிறையத் திட்டங்கள் அலசப்பட்டன எப்படி, எங்கே சீஸரைத் தீர்த்துக் கட்டுவது என்று. சிலர் சீஸர் எப்போதும் நடந்து செல்லும் புனித வழி எனும் பாதையில் அவரை மடக்கிக் கொன்றுவிடலாமென்றுகூறினர். இன்னொருயோசனை



அவர் சுற்றுவட்டப்பகுதிகளில் வெற்றி அடையத் துணை செய்தது. உரோமப் பேரரசின் படைபலம் ஓங்க, ஆப்பியன் வழிப் பெருதவி செய்தது. ஆப்பியன் வழியும், மற்றும் உரோமையர் கட்டிய பாலங்களும், இன்றும் நிலைத்திருக்கின்றன.

ஏறக்குறைய அதே சமயத்தில், பொம்பெயி என்ற படைத்தலைவர் கடற்கொள்ளையரை அடக்கி மத்தியதரைக் கடலில் உரோமை அரசின் செல்வாக்கை நிலைநாட்டினார். மேலும், சிரியா நாட்டையும் உரோமையின் அதிகாரத்துக்கு அடியில் கொண்டு வந்தார். பொம்பெயின் செல்வாக்கும், போர்த்திறமையும் வளர்ந்தது சீஸர் தன் அரசியல் செல்வாக்குக்கு, பொம்பெய் ஒரு சவாலாக வருவார் என்பதைச் சீக்கிரம் கண்டுணர்ந்தார்.

கி.மு. 49ம் ஆண்டு யூலியஸ் சீஸர் வடக்கு இத்தாலியிலுள்ள ரூபிகோன் நதியைக் கடந்து ரோமன் குடியரசில் ஒரு உள்நாட்டுப் போரை ஏற்படுத்தினார். யூலியஸ் சீஸரின் பரம எதிரி பொம்பேய் கிரேக்கத்துக்குத் தப்பிச் சென்றார். மூன்றே மாதங்களில் இத்தாலிய தீபகற்பம் முழுவதையும் சீஸர் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். ஸ்பெயின் நாட்டில் பொம்பேய்க்கு ஆதரவளித்தவர்களையும் வென்றார். பின்னரும் விடாமல் பொம்பேயை கிரேக்கத் துரத்திச் சென்றார். ஆனால் பொம்பேய் அதற்குள் எகிப்திற்குத் தப்பிச் சென்று விட்டார். எகிப்திற்குத் தொடர்ந்த சீஸருக்கு பொம்பேயின் வெட்டப்பட்ட தலைதான் பரிசாக அளிக்கப்பட்டது.

எகிப்திலிருந்து திரும்புவதற்கு முன்னால் சீஸர்

சீஸரைத் தேர்தலின் போது கொன்று விடுவது என்பது. அந்த சமயத்தில் சீஸர் தேர்தலுக்கான மாஜிஸ்ட்ரேட்டுகளை நியமிப்பதற்காகப் பாலத்தைக் கடந்து செல்வார். அது சரியான தருணமாக இருக்கும் என்பது அவர்கள் கணக்கு. யார் பாலத்திலிருந்து சீஸரைக் கீழே தள்ளுவது, யார் அவரைக் கொல்வது என சீட்டுப் போட்டுப் பார்க்க வேண்டும் என்றார்கள். அடுத்த யோசனை கத்திச் சண்டைப் போட்டி நடக்கும்போது அவரைத் தீர்த்துக் கட்டிவிடலாம் என்பது. அந்த சமயத்தில் கத்தியுடன் யார் சென்றாலும் சந்தேகப்பட மாட்டார்கள் என்பது அவர்களுக்கு சாதகமாக இருக்கும் என்று எண்ணினார்கள். ஆனால் பெரும்பாலானோர் சீஸரை அரசவையில் வைத்துக் கொன்றுவிட வேண்டுமென்று விரும்பினார்கள். அப்போது உறுப்பினர்களைத் தவிர வேறு யாரும் இருக்க மாட்டார்கள். கத்திகளை மறைத்து வைப்பது சுலபம் என்பது அவர்கள் எண்ணம். கூடியிருந்தவர்களில் பெரும்பாலானோர் இந்த முடிவிற்கு ஆதரவு தெரிவித்தார்கள்.

யூலியஸ் சீஸரின் நெருக்கமான நண்பர்களுக்கு அவரைக் கொல்வதற்கான திட்டங்கள் பற்றி வதந்திகள் கசிந்து வந்தன. அவர்கள் சீஸர் அரசவைக்கு வர வேண்டாம் என்று கருத்து தெரிவித்தார்கள். சீஸரது மருத்துவர்களும் சீஸரின் உடல் நிலையைக் கருதி அவர் அன்று அரசவை செல்ல வேண்டாம் என்றார்கள். அவரது மனைவி கல்பூர்னியா சில நாட்களாகக் கெட்ட கனவுகள் கண்டிருந்ததால் தன் கணவருக்கு ஆபத்து வருமோ எனக் கலங்கியிருந்தாள். இந்த நிலையில் அவளும் கணவன் அரசவை செல்வதை விரும்பவில்லை.

ஆனால் நண்பனைப் போல் உடனிருந்து சீஸரைக் கொலை செய்யத் திட்டமிட்டிருந்தவர்களில் முதல்வனான ப்ருடஸ், சீஸரிடம் இது என்ன பைத்தியக்காரத்தனம்! ஒரு பெண்ணின் அர்த்தமில்லாத கனவுகளையும் சில அறிவில்லாதவர்களின் வார்த்தைகளையும் கேட்டு அவைக்கு செல்லாதிருக்கலாமா? இது அவைக்கு நீங்கள் செய்யும் அவமானமில்லையா? நான் சொல்வதைக் கேளுங்கள். யாரோ சொல்வதைக் கேட்டு அவைக்கு வராமலிருக்க வேண்டாம் என்றான். ப்ருடஸ் சொன்னதைக் கேட்டு மனம் மாறிய சீஸர் அவைக்குச் செல்ல நினைத்தார்.

சீஸர் அரசவை செல்லும் முன் அவரது குருமார்களும் அவருக்காக பலி ஏற்பாடு செய்தபோது ஏற்பட்ட கெட்ட சகுனங்களைக் கூறி அவரை எச்சரித்தார்கள். கெட்ட சகுனங்களால் பலி ஏற்பாட்டை மாலைவரை ஒத்தி வைத்து, மாலைவரை சீஸரை அரசவைக்குச் செல்ல வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்கள். சீஸரும் இதற்கு சம்மதம் தெரிவித்தார்.

எங்கே தாங்கள் திட்டம் வீணாகி விடுமோ என்று எண்ணிய ப்ருடஸ் சீஸரிடம் மறுபடியும் சென்று, யாரோ வேலையில்லாதவர்கள் உளறுவதைக் கேட்டு அரசவைக்கு வராமல் இருக்காதீர்கள். தாங்கள் கூட்டிய அரசவை தங்களுக்காகக் காத்திருக்கிறது. கெட்ட சகுனங்களையே மாற்றி நல்லவைகளாக்கும் சக்தி உங்களுக்கு இருக்கிறது. வாருங்கள்! என்று கூறி சீஸரது வலது கரத்தைப் பற்றியவாறே அவரை அரசவைக்கு அழைத்துச் சென்றான்.

கொலுமண்டபத்திற்கு வந்த சீஸரை அங்கிருந்த உறுப்பினர்கள் கரகோசத்துடன் வரவேற்றனர். அவரைக் கொல்லத் திட்டமிட்டிருந்தவர்கள் அவர் அருகில் நின்றனர். டில்லியஸ் சிம்பர் எனும் அந்த உறுப்பினர் சீஸரால் நாடு கடத்தப்பட்ட தன் சகோதரனுக்காக அவரிடம் பேசும் சாக்கில் சீஸரது கரங்களை அவரது மேலங்கியுடன் சேர்த்து தன் கைகளால் பிடித்துக் கொண்டார். சிம்பர் சீஸரின் கரங்களை கெட்டியாகப் பிடித்துக்கொண்டதால் சீஸரால் அவற்றை விடுவித்துக் கொள்ள முடியவில்லை.

சரியான தருணத்தை உணர்ந்த எதிரிகள் தாங்கள் மறைத்து வைத்திருந்த பிச்சுவாக்களை வெளியே எடுத்து சீஸரை நோக்கிப் பாய்ந்தார்கள். முதலில் சர்விலஸ் காஸ்கா என்பவன் கத்தியை சீஸரின் இடது தோளை நோக்கி செலுத்த முயன்றான். ஆனாலும் அந்த பரபரப்பில் அவனது குறி தவறியது. சீஸர் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயன்றபோது காஸ்கா தனது சகோதரனை நோக்கிக் கத்த, அவன் சீஸரின் விலாவில் கத்தியைச் செலுத்தினான். இன்னொரு உறுப்பினரான காசியஸ் லான்ஜினஸ் குத்த முயன்றபோது குறி தவறி மார்கஸ் ப்ருடஸின் விரலில் குத்திவிட்டான். பின்னர் காசியஸ் சீஸரின் முதுகிலும், புருடஸ் அவரது இடுப்பிலும் குத்தினர். இன்னொருவன் சீஸரது தொடையில் குத்த, தாக்குதல் எல்லா முனையிலிருந்தும் சரமாரியாய் நடந்தது. ஒவ்வொருவரும் சீஸரது கொலையில் தங்கள் பங்கும் இருக்க வேண்டும் என்பதுபோல் தொடர்ந்து குத்தினர்.

இறுதியில் சீஸர் பொம்பேயின் சிலையின் கீழே காயங்களுடன் வீழ்ந்தார் உடலில் முப்பத்தைந்து கத்திக் குத்துக்களுடன். சர்வாதிகாரியாகத் தன்னைப் பிரகடனம் செய்து கொண்ட சீஸரின் இறுதி மூச்சு பிரிந்தது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இப்படித்தான் அடுத்த போர்

- ஜெரா

அண்மையில் சர்வதேச அளவிலான இலத்திரனியல் குற்றச் செயல்களை தடுப்பதற்கான மாநாடு ஒன்று லண்டனில் நடைபெற்றது. இதில் சீனா தவிர்ந்த ஏனைய பல நாடுகளையும் சேர்ந்த பாதுகாப்புத்துறை அமைச்சர்கள், ஆலோசகர்கள், உயர் அதிகாரிகள், படைத் தளபதிகள் போன்றோர் கலந்து கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் இணையவழித் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டோர் என்பதை அவர்களின் கலந்துரையாடல்கள் உறுதிப்படுத்தின.

இதில் ஆக்ரோசமாக கருத்து வெளியிட்ட பிரிட்டன் இராணுவத்துறை அமைச்சர் நிக் ஹார்வி, இனி வரும் காலங்களில் இணையத் தாக்குதல்கள் மிகவும் நன்மை பயக்கக் கூடியவை எனத் தெரிவித்தார். அத்தோடு இந்த இணையத் தாக்குதல்களால் எதிரிகளின் இலக்குகளைக் குறைந்த செலவில் நிகழ்த்த முடியும். கனதியான படையமைப்பைக் கொண்ட நாடுகளது படையியல் திறனை முடக்குவதற்கு இந்த வழித்தாக்குதல்களை விஞ்ச வேறொரு போர் வியூகங்களும் இருக்கப் போவதில்லை என்றார்.

அந்த மாநாட்டில் இதனையே வழிமொழிந்த மலேசியப் பிரதமர் அடுத்து வரும் காலங்களில் வீரியமிக்க அழிவுகளை எதிரிக்கு ஏற்படுத்துவதில் இணையத் தாக்குதல்களுக்கு இணையாக வேறொன்று இருக்காது என்றார்.

உலகத்தை ஆளும் பெரும்பான்மைத் தொகுதி நாடுகளின் எண்ணம் இவ்வாறு இருக்க, இவர்களின் சிந்தனைக்கு எதிராகவே இயங்கும் மற்றைய தொகுதி நாடுகளின் சிந்தனைகளில் இந்த விடயத்தில் மாத்திரம் நேர்த்தியாக ஒத்துப் போவதை அவதானிக்கலாம்.

கடந்த வாரத்தில் ஈரானிலுள்ள அணு மின்னியல் தொடர்பான கல்லூரியில் விரிவுரை ஒன்றை நிகழ்த்தி விட்டு அந்த கல்லூரிக்கு வெளியில் வந்த ஈரானிய ஜனாதிபதி அஹமது நிஜாத்தை ஊடகவியலாளர்கள் சிக்கெனப் பிடித்துக் கொண்டனர். அவரிடம் பல கோணங்களிலிருந்தும் கேள்விகள் விழுந்தன. எல்லாவற்றுக்கும் அமைதி பதில் அளித்த அவர் ஒரு கேள்விக்கு மட்டும் நிதானமாகப் பதிலளித்தார். "உங்கள் அணு செறிவூட்டல் அடுத்த போருக்கு வழி வகுக்கும் என்கிறார்களே?" கேள்வியை அந்த ஊடக வியலாளர் முடிக்கும் முன்பே நிஜாத் சூடான பதிலை வழங்கினார். "உலகம் அணுவின் விபரீதத்தை நீங்கள் பிறப்பதற்கு முன்பே அனுபவித்து விட்டது. இப்போது நாம் இணைய வழியில் புது உலகத்தைக் காண பயணிக்கின்றோம். அதனைப் பற்றி சிந்திக்க முயற்சி செய்யுங்கள்", என பதிலளித்து விட்டு தன் வாகனம் ஏறிப் பறந்தார்.

இதே வரிசையில் இருக்கும் சீனாவின் நிலைப்பாடும் இதுதான். 2011ஆம் ஆண்டில் மட்டும் சீனாவின் 240,000 இராணுவ இணையத் தளங்கள் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளன. இதனால் அதிக பாதிப்பை அந்நாட்டு பாதுகாப்புத் துறை சம் பாதித்துக் கொண்ட போதிலும் மிகையில் மனம் முட்டாது அறிக்கைகளை விட்டது. பல அதிரடியான நடவடிக்கைகளை மேற்கொண்டது. சமூக வலைத்தளங்களான பேஸ்புக், டுவிற்றர் மற்றும் கூகுள், யாகூ, பிங் போன்றனவும் உடனடியாக தடை செய்யப்பட்டன. ஆனாலும் தனது இராணுவத்தின் இணைய விரிப்புகளையும், இணைய வழியிலான கண்காணிப்பு நடவடிக்கைகளையும் சீனா 2011ஆம் ஆண்டில் கற்றுக் கொண்ட பாடத்திலிருந்து வலுப்படுத்தியே வருகின்றது.

இவ்வாறு உலகம் முழுவதும் பலத்தின் அடிப்படையில் உடைந்திருக்கின்ற பல்வேறு துருவ நாடுகளும் புதியதொரு போருக்குத் தயாராகி விட்டன. அது எல்லோரும் எதிர்பார்த்து இருக்கின்ற போர் வகையிலிருந்து மாறுபட்ட ஒன்றாக அமையப் போகின்றது.

சைபர் தாக்குதல்கள் எனப்படும் இணையவழித் தாக்குதல்களை முன்னிறுத்தியே உலகளவில் பலத்தால் முன்னிற்கும் நாடுகள் தமது பாதுகாப்புத் திட்டங்களை வரைபுபடுத்த தொடங்கியுள்ளன. அதாவது இன்று மனிதனின் அன்றாட நடவடிக்கைகள் அனைத்தும் கணினியையும் இணையங்களையும் ஆதாரமாகக் கொண்டே உயிர் பெறுகின்றன. (அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு இது பொருத்தமில்லையாயினும் அந்த நாடுகள் போருக்குத் தயாராகும் நாடுகளோடு மல்லுக்கு நிற்கப் போவதில்லைத் தானே. ஆகவே அவைகளைப் பற்றிப் பலம் பெற்ற நாடுகள் கருத்தில் எடுப்பதேயில்லை.

ஆகவே இந்தக் கட்டுரையும் அந்த நாடுகளைத் தவிர்க்கின்றது). வணிகம், போக்குவரத்து, பாதுகாப்பு என அன்றாட மனிதத் தேவைகள் அனைத்திற்கும் கணினியை நம்பியிருக்க வேண்டிய யுகத்தில் இந்த உலகம் சுழல்வதால் அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் பாதிப்புகள் மனிதனுக்கு மிக மோசமான விளைவுகளை உண்டு பண்ணும் என்ற நம்பிக்கை மேலோங்க உலகு அணுவைக் கைவிட்டு சைபர் தாக்குதல்களை ஆரம்பித்து இருக்கின்றது.

இந்த சைபர் தாக்குதல்களை ஒரு நாட்டின் மீது அல்லது அந்த நாட்டின் இராணுவத் தரப்பு மீது மேற்கொள்ள பல வழிமுறைகளை, தாக்குதலை தொடக்குகின்றவர்கள் கைக்கொள்ள முடியும். அதாவது இப்போதிருக்கின்ற அரசுகளில் முழு நிதிசார் நடவடிக்கைகளும் கணினிமயப் பட்டவையாக இருப்பதனால் கண்டுபிடிக்க முடியாத கணினி வைரஸ்களைப் பரவவிடுவதன் மூலம் குறித்த நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சியை அல்லது பொருளாதாரத் தளம்பலை ஏற்படுத்த முடியும்.

அமெரிக்கத் திரைப்படங்களில் வரும் இராணுவ பாதுகாப்புக் கட்டமைப்பு போன்று பல வல்லரசு நாடுகளின் பாதுகாப்புத் துறை கட்டமைக்கப் பட்டிருப்பதால் அங்கேயும் கணினிகளின் செல்வாக்கு வலுவானதாக இருக்கின்றது. ஆகவே கண்டு பிடிக்கப் படும் கணினி வைரஸ்களைக் கொண்டு குறித்த நாடுகளின் இராணுவம் பயன்படுத்தும் அணு ஆயுதங்கள், தானியங்கி ஏவுகணைகள், அணு மின் நிலையங்கள் போன்றவற்றை கூடாக செயற்பட வைக்கலாம். அப்படி செயற்பட நேர்ந்தால் தவறான கட்டளைகளை வழங்கி பல்வேறு விளைவுகளை ஏற்படுத்த முடியும்.

இதற்காக கண்டுபிடிக்கப்படும் மென்பொருட்களையும் வைரஸ்களையுமே மல்வெயார் என்கின்றனர். ஒரு கணினியின் பதிவாகிய பின் சுயமாக விரிவடையும் திறன் கொண்ட இந்த வகை வைரஸ்கள் மேற்குறித்த துறைகளில் பாரிய தீங்குகளை ஏற்படுத்தக் கூடியவை. குறிப்பாக அதன் தேவை நிமிர்த்தம் நோக்கும் போது நல்லது போல தெரியும் ட்ரோ ஜன் ஹார்ஸ், உடைக்கவே முடியாத பாதுகாப்புக் கடவுச்சொற்களையுடைய வலையமைப்புக்களை உடைக்கும் வோர்ம், தகவல் திருட்டுக்களுக்காகவும் கடவுச் சொல் திருட்டுக்காகவும் உபயோகப் படும் ஸைவெயார், தன்னிச்சையாக இயங்குவதும், விளம்பரங்களை சுயமாக செயற்படுத்துவதுமான ஆட்வெயார் போன்றன இந்தத் தீங்குபயக்கும் வேலைகளைச் செய்யக் கூடியவை.

இவற்றைத் தீவிரவாதிகளும் அரசினரும் பயன் படுத்தி தமது தீய நோக்கங்களைச் செயற்படுத்திக் கொள்வதினாலே இது சைபர் தாக்குதல் எனப்படுகின்றது. அத்தோடு தற்காலத்தில் உலக நாடுகளை பரவலாக்கி வரும் சைபர் தாக்குதல்களுக்குக் கணினிகளின் பங்களிப்பை இந்த வகை [illegible]


வைரஸ்களும் வழங்கி வருகின்றன.

இந்த வகை தாக்குதல்கள் இப்போது வலுப்பெற்றுள்ளமைக்கு அண்மையில் உலகம் முழுவதும் பரவலடைந்த பிளேம் எனப்படும் வைரஸ் மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. மிகவும் தாக்க வன்மைமிக்க பிளேம் கணினிகளுக்குள் விரிவடைந்து சுயமாகக் கட்டளைகளைப் பிறப்பிக்கக் கூடியது. இது தாக்கிய கணினியின் வெப்கேம், புளூருத், மைக்ரோபோன் போன்றவற்றை தேவையேற்படும் போது சுயமாக இயங்க வைக்கக்கூடியது. இவற்றில் புதியவகைக் குறியீடுகளைப் பிரயோகித்து கண்காணிப்பை அதிகப்படுத்தக் கூடியது. கிட்டத்தட்ட 20ற்கும் மேற்பட்ட சேவைகளை சமநேரத்தில் கையாளும் பிளேம், கணினியில் பார்வையிடப்படும் விடயங்களை படம் பிடிக்கும் வசதி கொண்ட வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களிற்கு முன்னர் அறிமுகமாகி கணினி உலகின் வயிற்றில் புளி கரைத்த ஸ்ரொக்ஸ் நெற்றை விட பிளேம் பல மடங்குகளிலும் திறன் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. அதன் கொள்ளளவு, அது எழுதப்பட்டிருக்கும் சிக்கலான குறியீட்டு மொழி போன்றவற்றை அடிப்படையாக வைத்து நோக்கும் போது பிளேம் தனிப்பட்ட குழுவினாலோ அல்லது தனி நபர்களினாலோ உருவாக்கியிருக்க வாய்ப்பில்லை என்கிறது ஹஸ்பர்ஸ்க் என்ற ரஷ்ய நிறுவனம். அந்த நிறுவனத்தின் தீவிர முயற்சியினால் பிளேம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு விட்டதாயினும் பிளேமை கட்டுப்படுத்த நீண்ட பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஏனெனில் பிளேம் வெளிவந்து ஐந்து வருடங்களின் பின்னரே இந்த வருடத்தில் அது கண்டுபிடித்து கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இப்போதைக்கு பிளேமால் பாதிப்புகள் இல்லையாயினும் இனிவரும் காலங்களில் இதைப்போன்ற தாக்குதிறன் அதிகம் கொண்ட வைரஸ்களை உருவாக்க நாடுகள் முனையும். அது உலகப் போக்கில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தும். மனிதர்கள் கணக்கிட முடியாத சில வேலைகளைத் தான் தோன்றித் தனமாக இந்த வகை மல்வெயார்கள் செய்து மனித குலத்திற்கு பெரும் அழிவுகளை ஏற்படுத்தப் போகின்றது. அணுவாயுதப் பரவல் 1945உடன் உலகத்திற்கு நல்லதொரு பாடத்தை வழங்கி, இவ்வளவு காலமும் காப்பாற்றி வந்தாலும் சைபர் தாக்குதல்களால் வரும் அனுபவத்தை வழங்க முடியாது. அதனைக் கண்டுபிடித்தவருக்கே அதனை கட்டுப்படுத்த முடியாத நிலை உருவாகும். அண்மையில் வன்முறையில்லாதவாறு அடிக்கடி விமான விபத்துகள் நடக்கின்றன. இதற்கான காரணம் சரியாக இதுவரை கண்டறியப்படவில்லை. ஆனால் விமானங்களை கட்டுப்படுத்துவதிலும், செயற்படுத்து வதிலும் கணினிகளிற்குப் பங்கிருப்பதை எத்தனை பேர் அறிவர்?

ஆக, உலகம் அடுத்த போருக்கு தயாராகி விட்டது. அந்தப் போரில் படையினர்கள் இருப்பதில்லை. இறப்பதில்லை. மூடிய குளிரூட்டப்பட்ட அறைகளிற்குள் இருந்து கணினிகள் போரை வழிநடத்திக் கொண்டிருக்கும். அங்கேயும் அப்பாவி மக்கள் செத்தொழிவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனைவி ரசித்த பாடல்...



எஸ். சுபாசினி - வவுனியா
**கேள்வி:** எனது கணவர் ஒவ்வொரு நாளும் வெறிறு முட்டைக்கள் குடித்துவிட்டு வருகிறார். எவ்வளவு சொல்லியும் திருந்துகிறார் இல்லை. என்ன செய்வது பித்தா?



**பதில்:** ஒன்றும் செய்ய முடியாது. 'கல் ஆனாலும் கணவன் 'புல்' ஆனாலும் புருஷன் என்று சகித்துக் கொள்ள வேண்டியது தான்.

மு. ரவீந்திரன் - கண்டாவளை
**கேள்வி:** அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்கிற பழமொழி உண்மையானது தானா?

**பதில்:** இதனைப் பழமொழியாக மட்டும் பார்க்க முடியாது. இது ஒரு உளவியல். நமது எண்ணங்கள் முகத்தில் பிரதிபலித்து விடும். முகமே எண்ணங்களின் கண்ணாடி.

பொ.சத்தியமூர்த்தி - பளை
**கேள்வி:** அலுவலகத்தில் இருக்கும் போதும் கூட எனது மனைவி அடிக்கடி சண்டைப் பிடிக்கிறாள். வீட்டிலும் இதேநிலை என்றால் அலுவலகத்திலும் நிம்மதியாக இருக்க முடியவில்லையே...?



**பதில்:** எனது நண்பர் ஒருவர் கோபத்தில் அடிக்கடி கைத்தொலைபேசியை நிலத்தில் அடித்து உடைத்துவிடுவார். ஏன் என்று கேட்ட போது அவருக்கும் இதே பிரச்சினைதான். அவர் இவ்வாறு தொலைபேசிகளை உடைக்கும் போதெல்லாம் மனைவியே புதிய கைத்தொலைபேசியை வாங்கிக் கொடுத்து விடுவாளாம். காரணம் தொடர்ந்தும் சண்டை பிடிப்பதற்குத்தான்.

கே.கருணாகரன் - மானிப்பாய்
**கேள்வி:** 'கற்பழிப்பு', 'பாலியல் வல்லுறவு' இந்த இரண்டு பதங்களுக்கும் என்ன வித்தியாசம்?

**பதில்:** 'கற்பழிப்பு' என்கிற பதம் தவறானது. 'கற்பு' என்பது ஒழுக்கம். பாலியல் ஒழுக்கம் என்று சொல்லலாம். அது பெண்களுக்கு மட்டுமானது அல்ல. ஆண்களுக்குமானது. கற்பை யாராலும் பலாத்காரமாக அழிக்க முடியாது. ஒரு பெண்ணை பாலியல் ரீதியாக வன்முறைக்குள்ளாவதை பாலியல் வன்முறை என்று கூறுவதே சரியானது. பாலியல் ரீதியாக வன்முறைக்குள்ளாக்கப்பட்ட பெண் கற்பிழந்தவள் அல்ல.

பா.ராஜகோபால் - கொட்டாஞ்சேனை
**கேள்வி:** தொடர்ச்சியாக ஊடகங்களால் வெளிப்படுத்தப்பட்டு வரும் போர்க்குற்ற ஆதாரங்களை அரசாங்கம் தொடர்ந்து மறுத்து வருகின்றதே?

**பதில்:** அரசாங்கத்திற்கு வேறு வழிகள் இல்லை. அதனால் எல்லாவற்றையும் பொய் என்றே கூறி மறுத்து வருகின்றது. தொடர்ந்து பொய்களைக் கூறினால் அது ஒரு நாளில் உண்மையாகி விடும் என்று அரசு கருதுகின்றதோ தெரியவில்லை.

கே.தவராஜா - மட்டக்களப்பு
**கேள்வி:** ஒருவர் தகுதிக்கு மீறி ஆசைப்படக் கூடாது என்று கூறப்படுவது சரியா பித்தரே?

**பதில்:** அது எல்லா விடயத்திலும் பொருத்தமான கருத்து அல்ல. ஆசைப்படலாம். ஆசைப்படுவதை அடைவதற்காக எங்கள் தகுதிகளையும் வளர்த்துக் கொள்ள முயல வேண்டும்.

ஆ.சுதன் - யாழ்ப்பாணம்
**கேள்வி:** பித்தா நீங்கள் பாடி, உங்கள் மனைவி இரசித்த பாடல் ஒன்று கூறுங்கள்.




**பதில்:** ஆம். ஒரேயொரு பாடலை மட்டும் நான் பாடி என் மனைவி இரசித்துக் கேட்டிருக்கிறா. அந்தப் பாடல் 'நீ காற்று. நான் மரம் என்ன சொன்னாலும் தலையாட்டுவேன்'

சி.சந்திரசேகரன் - சிலாபம்
**கேள்வி:** பித்தரே உங்களுக்குப் பிடித்த 'கேள்வி பதில்' பகுதி எதுவென்று கூற முடியுமா?

**பதில்:** குமுதம் சஞ்சிகையில் முன்னர் வெளியாகும் 'அரசு பதில்கள்' மற்றது, 'சிரித்திரன்' ஆசிரியரின் மகுடி பதில்கள். இவை இரண்டும் நான் மிகவும் இரசித்துப் படித்த 'கேள்வி பதில்' பகுதிகள்.

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 526



அனுப்புபவர் பெயர்:......................................

விலாசம்:......................................

......................................

கையொப்பம்:......................................

### மேலிருந்து கீழ்

01. தனியுரிமை
02. பாதுகாப்புத் தருபவர்
03. வேறின்மை
04. சிறிய மொழி
06. கரங்களின்
07. ஒரு சிறிய பறவை
09. நெருப்பில்லாமல் இது வராதாமே?
13. ஆகுதி
15. இறத்தல்
17. சீர்மை
18. தங்கு
19. வெட்டும் கருவி
20. மறைவில் அமைப்பது
21. பிரிந்து வீழ
22. நலவ
23. பொழுது

### இடமிருந்து வலம்

01. பதினொன்றாம் திதி
05. குரோதத் தன்மை
08. சிரத்தை எடுத்து நோக்குவது
10. நித்திரையில் வரும்
11. போன்ற
12. எதிரி
14. செய்தவினை
16. படிப்பு
18. தங்களுடையது
19. ஒரு மரக்கறி வகை
21. அரிசியை சூழ இருக்கும் காப்புறை
22. தூய தன்மை
23. தேவையை நிறைவு செய்கின்ற அளவு
24. விடை
25. நான்கு சம பக்கங்களைக் கொண்ட வடிவம்

## சொற்சிலம்பம் போட்டி இல: 523

### விடைகள்

**மேலிருந்து கீழ்**

01.உகந்த, 02.பல, 03.தேக்கம், 04.சகுனி, 05.பாண், 06.குரோ, 08.ஆல், 10.துமை, 12.வயோதிபன், 13.நான்கு, 14.நாம், 15.பதனிடு, 16.அகதி, 17.கழி, 19.திரன், 21.பன்

**இடமிருந்து வலம்**

01.உபதேசம், 05.பாகு, 07.கலக்கு, 08.ஆய்வடு, 09.கனிதல், 11.தவம், 13.நாறி, 14.நாராள், 16.அதிகம், 18.தகுதி, 20.கபடி, 21.பனி, 22.தீன், 23.வெள்ளிமம்

## சொற்சிலம்பம் போட்டி இல. 526

சொற்சிலம்பம் கட்டப் போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்க வேண்டிய இறுதித் திகதி 2012 ஆம் ஆண்டு ஜூலை 16ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூலை 05ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
**சுடர் ஒளி வாரம், அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## போட்டி இல. 525 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** — சின்னையா செல்வராஜ், இல.91/1,மெயின் வீதி, கொழும்பு 11.

**2 ஆம் பரிசு** — குரூகை.சி.மணிமொழியாள், 'பூம்பொழில்', திருநகர் தெற்கு, கிளிநொச்சி.

**3 ஆம் பரிசு** — ஜெ.விஜயலக்சுமி, இல.19.பண்டாரிக் குளம், வவுனியா.

## பாராட்டுப் பெறுவோர்

(1) பா.வசந்தன்,
இல.64/22, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு 13.

(2) சந்திரராணி தங்கத்துரை,
வட்டவிதானை வீதி, பெரிய நீலாவணை
கல்முனை.

(3) பா.சிவதரன்,
பிரதான வீதி,
தம்பிலுவில் 01.

(4) எஸ். ஜெயச்சந்திரராசா,
இல.08, முதலாம் ஒழுங்கை,
விநாயகபுரம், வவுனியா.

(5) திருமதி கவமணி ஈஸ்வரதாஸ்,
இல.12, 5/1 கொலிங்வூட் இடம்,
வெள்ளவத்தை.

(6) சி.எழில்வேள்,
கிறிஸ்டி மெடிக்கல்,
இல. 311, ஜம்பத்தா வீதி, கொழும்பு 13

(7) ஐ.விரசிங்கம்,
இல. 9/2, இராசதுரை வீதி,
வைரவ புளியங்குளம், வவுனியா

(8) திருமதி. பொன்மணி தங்கராசா,
மாதவன் வீதி, கல்முனை 3.

(9) வி.சரோஜினிதேவி,
இல 11A, மொஸ்க் லேன்,
மோதரை, கொழும்பு 15

(10) க.தில்லையம்பலம்
கதிர்காம கோவிலடி,
வதிரி, கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ உதைபந்தாட்ட அணிக்கு மகத்தான வரவேற்பு





தமிழீழம் சார்பாக வீவா உலகச் சுற்றுக் கிண்ணப்போட்டியில் கலந்துகொள்ளச்சென்ற அணியினருக்கு அவர்கள் வாழும் நாடுகளில் பலத்த வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.

உலகளாவிய தமிழ் இளையோர் அவையின் ஏற்பாட்டில், சர்வதேச அரங்கில் இடம்பெறும் இந்தக் கால்பந்தாட்ட போட்டியான வீவா உலகச் சுற்றுக்கிண்ணப் போட்டியில் தமிழீழ அணியும் பங்கு பற்றி விளையாடி இருந்தது.

குருதிஸ்தானில் (வட ஈராக்) இடம்பெற்ற இந்த உலகக்கிண்ணப் போட்டியில், தமிழீழம் அணி சார்பாக கனடா, சுவிற்சர்லாந்து, மற்றும் பிரித்தானியாவில் வாழும் ஈழத்தமிழ் விளையாட்டு வீரர்கள் விளையாடி இருந்தனர்.

இவ்வாறு தமிழீழ அணிக்காக பிரித்தானியாவில் இருந்து சென்று விளையாடிய வீரர்கள் லண்டன் ஹீத்ரோ வானூர்தி நிலையத்திற்கு வந்தபோது, அங்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

FIFA உலகச் சுற்றுக்கிண்ணப் போட்டியில் அனுமதி பெறாத மற்றும் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகாரம் பெறப்படாத தேசிய இன மக்களுக்காகவே வீவா சுற்றுக்கிண்ணப் போட்டி New Federation Board ஆல் நடாத்தப்படுகிறது.

காற்பந்தாட்டத்தில் தங்கள் திறமைகளை தமிழீழ விளையாட்டு வீரர்கள் புலம்பெயர் நாடுகளில் வெளிப்படுத்தியுள்ளனர். வீவா உலகச் சுற்றுக்கிண்ணப் போட்டியில் கலந்து கொள்வதன் மூலம் இவர்களுக்கு தாங்கள் தமிழீழத்தைச் சேர்ந்த கால்பந்தாட்ட வீரர் என்னும் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

தம் தாய் நாட்டின் சார்பாக ஒரு சர்வதேச போட்டியில் கலந்து கொள்வது என்பது பெருமைப் படக்கூடியதொன்றாகும். இவ்வாறான ஒரு வாய்ப்பு கிடைத்ததை எண்ணி தமிழீழ அணியில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர்கள் ஒவ்வொருவரும் பெருமகிழ்ச்சியும் பெருமையும் கொள்கின்றனர்.

இவ்வாண்டு வீவா சுற்றுக்கிண்ணப் போட்டியில் தமிழீழம், டார்பூர், இராக்கி குருதிஸ்தான், வட சைப்ரஸ், ரேடியா, ஒக்சிரான்ரியா, புரோவென்சு, மேற்கு சகாரா மற்றும் சான்சிபார் ஆகிய ஒன்பது அணிகள் மோதியிருந்தன.

இவ்வணிகள் நெல்சன் மண்டேலா வெற்றிக் கிண்ணத்துக்காக கடுமையாக போட்டியிட்டன. தென் ஆபரிக்காவின் முன்னாள் அரச அதிபர் நெல்சன் மண் டேலா தன் மக்களின் விடுதலைக்காக விடாமுயற்சியுடன் போராடினார். அவரின் நினைவாகவேஇவ்வெற்றிக்கிண்ணத்திற்கு அவரது பெயர் சூட்டப்பட்டது.

இச்சுற்றுக்கிண்ணப் போட்டியில் தமிழீழ அணி பங்கு பற்றியமை, தமிழர் வரலாற்றில் இடம்பெற்ற மற்றொரு பதிவாகும்.


தமிழீழ அணியைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் தங்கள் கைகளில் தமிழீழ தேசிய கொடியை ஏந்தி போட்டியில் கலந்து கொண்டிருந்தனர்.

## டோனிதான் காரணம்

சர்வதேச போட்டிகளில் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு ஆடும் இந்திய வீரரான விராத் கோஹ்லி தனது உணர்ச்சிகளை அடக்கி கொண்டு விளையாடுவதற்கு, இந்திய அணித் தலைவர் டோனியின் அறிவுரைகள் தான் காரணம் என்று தெரிவித்துள்ளார்.

இந்திய அணியில் சிறப்பாக ஆடி குறுகிய காலத்தில் துணை தலைவர் பதவிக்கு வந்தவர் விராத் கோஹ்லி. சர்வதேச போட்டிகளில் நாட்டிற்காக உணர்ச்சி பூர்வமாக விளையாட கூடியவர். கடந்த ஜனவரி மாதம் ஆஸ்திரேலிய சுற்றுப்பயணத்தின் போது, உணர்ச்சி வசப்பட்ட விராத் கோஹ்லி பார்வையாளர்களுக்கு நேராக நடுவிரலை காட்டி சர்ச்சையில் சிக்கினார்.

இந்த நிலையில் தனது உணர்ச்சி வசப்படும் பழக்கத்தை குறைத்து கொண்டுள்ள விராத் கோஹ்லி, தனது பொறுமையான குணத்திற்கு காரணம் டோனி அவ்வப்போது வழங்கிய அறிவுரை தான் என்று தெரிவித்துள்ளார்.



## விளையாட்டுத் துளிகள்

- ★ சர்வதேச போட்டிகளில் 100 சதங்கள் எடுத்து கிரிக்கெட் உலகில் சாதனை படைத்த சச்சினுக்கு துபாயில் விஸ்டன் இந்தியா சாதனை விருது வழங்கப்பட்டுள்ளது.
- ★ மும்பை தாக்குதலுக்குப் பின்பு இங்கிலாந்துக்கெதிராக சென்னையில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் அடித்த சதம்தான் தமக்கு மிகவும் பிடித்த சதம் என்று இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்
- ★ இங்கிலாந்து அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான கெவின் பீட்டர்சன் சமீபத்தில் ஒருநாள் போட்டி மற்றும் டி20 ஓவர் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். அவரின் இந்த முடிவால் பலருக்கும் அதிர்ச்சியாகவும், ஆச்சரியமாகவும் அமைந்தது. இந்நிலையில் செப்டெம்பர் மாதம் இலங்கையில் நடைபெற உள்ள டி20 உலகக் கிண்ண போட்டியில் விளையாட பீட்டர்சன் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்மிடையேயான 3 ஆவது ரெஸ்ட் போட்டியில் 11ஆவது வரிசை துடுப்பாட்ட வீரர் பெஸ்ட் (வயது 30) 112 பந்துகளில் ஒரு சிக்சர், 14 பவுண்டரிகளுடன் 95 ஓட்டங்களை பெற்று புதிய உலக சாதனை படைத்தார்.

இதற்கு முன் 2004 ஆம் ஆண்டு வங்காளதேசத் திற்கு எதிராக இந்தியாவின் ஜாகீர்கான் 75 ஓட்டங்கள் எடுத்ததே, 11வது வரிசை துடுப்பாட்ட வீரர் ஒருவர் டெஸ்டில் எடுத்த அதிகபட்ச ஓட்டங்களாக இருந்து வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கினி ஏவுகணை உருவாக்கம்

## மனம் திறக்கிறார் திட்ட இயக்குனர்



பாவாடை, சட்டை அணிந்து வலம் வந்த சிறு வயது பருவத்தில் டெசியை வீட்டுக்கு வெளியே பார்க்கவேண்டும் என்றால், அவரது வீட்டுக்கு மேலே ஒரு விமானம் பறக்கவேண்டும். விமானம் பறக்கும் சத்தம் கேட்டதும் சிறுமி டெசி ஓடோடி வந்து வானத்தை பார்த்து பிரமித்துக் கொண்டிருப்பார். இப்போது அவரோ, கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி-5 ஏவுகணையை விண்ணில் செலுத்தி உலகத்தையே பிரமிக்கச் செய்திருக்கிறார். 121 கோடி இந்தியர்களின் கனவுகளை நிறைவேற்றி, அமெரிக்கா, ரஷியா, சீனா, பிரான்ஸ் வரிசையில் தனது தாய் நாட்டையும் உயர்த்தியிருக்கிறார்.

அன்று சிறுவயது பருவத்தில், பறக்கும் விமானங்களைப் பார்த்து நான் அடைந்த ஆச்சரியமும், ஆனந்தமும் இன்று ஏவுகணைகளை பரீட்சித்து பார்க்கும் போதும் என்னுடனே இருந்துகொண்டிருக்கின்றன. ஒவ்வொரு நாளும் எனக்கு புதுமை நிறைந்த பரிசோதனைகளாக இருக்கின்றன.. என்று கூறுகிறார் அக்னி-5 இன் திட்ட இயக்குனர் டாக்டர் டெசி தாமஸ். முதலிலே, எனது எல்லா பணிகளும் நாட்டின் பாதுகாப்பு தொடர்புடைய ரகசியங்கள். வெளிப்படுத்த முடியாதவைகள். அதனால், அதற்கு தகுந்த கேள்விகளை மட்டும் கேளுங்கள்.. என்றும் கூறிவிடுகிறார்.

**அக்னியின் திட்ட இயக்குனர் என்ற முறையில் அந்த வெற்றியை எப்படி எடுத்துக் கொள்கிறீர்கள்?**

அந்த வெற்றியில் எனக்கு அதற்கே உண்டான திருப்தியும், மகிழ்ச்சியும் கிடைத்துள்ளது. நமது நாட்டிற்கு இப்படி ஒரு பாதுகாப்பு கட்டமைப்பு தேவை. அதில் நாம் எதிர்பார்த்ததைவிட அதிக வெற்றியை பெற்றிருக்கிறோம். இது தனி நபர் சாதனை அல்ல. விஞ்ஞானிகள், தொழில்நுட்ப நிபுணர்கள் உள்பட்ட 800-க்கும் அதிகமானவர்கள் ஆறு மாதங்களுக்கு மேலாக உழைத்தோம். அந்த வரலாற்று சிறப்புமிக்க குழுவில் நானும் இடம் பிடித்ததை நினைத்து கௌரவம் அடைகிறேன். இந்த ஏவுகணை பரிசோதனை மூலம் இந்தியா பல்வேறு வல்லமைகளை பெற்றுள்ளது. தேவைப்பட்டால் அணு ஆயுதங்களை பிரயோகிக்கும் வல்லமை நம் கைவசம் வந்துவிட்டது. எதிரி நாட்டு செயற்கைகோள்களை அழிக்கும் சக்தியையும், செயற்கைகோளாக ஏவி செயல்படுத்தும் சக்தியையும் அக்னி-5 மூலம் பெற்றிருக்கிறோம். நமது இந்த திட்டம் வெற்றி அடைந்ததும் பாலிஸ்டிக் ஏவுகணை உள்ள நான்கு நாடுகளோடு நாமும் சேர்ந்துவிட்டோம்.

அக்னி வெற்றிகரமாக புறப்பட்டு இலக்கை அடைந்ததும் வாழ்த்துகள் வந்து குவிந்துகொண்டிருந்தன. பிரதமர் அலுவலத்தில் இருந்து முதல் வாழ்த்து வந்தது. ராணுவ மந்திரி ஏ.கே.அந்தோணி, எம்.ப.க்கள் எல்லாம் வாழ்த்தினார்கள். முதல் மூன்று நாட்கள் வாழ்த்து மெசேஜ் மூலம் என் செல்போன் நிறைந்துவிட்டது.

பரிசோதனை வெற்றிபெற்றதும் என் கணவரையும், மகனையும் அழைத்து மகிழ்ச்சியை பகிர்ந்துகொண்டேன். அவர்கள் டி.வி.யில் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். (டெசியின் கணவர் சரோஜ் பட்டேல் மும்பையில் கப்பல் படை அதிகாரியாக இருக்கிறார். மகன் தேஜஸ் வேலூரில் என்ஜினீயரிங் படிக்கிறார்)

வீலர் தீவில் வெற்றிகரமாக எங்கள் வேலையை முடித்துவிட்டு, ஐதராபாத் விமான நிலையத்திற்கு வந்தபோது, நிறைய பேர் காத்திருந்து வாழ்த்து தெரிவித்தார்கள். அன்போடு பூக்கொத்துகளை தந்தார்கள். பள்ளிக்குழந்தைகள் எல்லாம் வாழ்த்து தெரிவித்ததைப் பார்த்து என் கண்கள் நிறைந்துவிட்டன..

**உடன் பணிபுரியும் ஆண்கள் கொடுத்த ஒத்துழைப்பு?**

சுடி.ஆர்.டி.ஓ.வில் எந்த பிரிவிலும், ஆண் ஆதிக்கத்தை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை எனக்கு ஏற்படவில்லை. ஒருங்கிணைந்து செயல்படுவதுதான் வெற்றி சாஸ்திரம் என்பதை உணர்ந்து செயல்படுவதில் ஆண்கள் சிறந்தவர்கள். ஒரு ப்ராஜக்ட்டின் பொறுப்பாளர் என்ற மதிப்பையும், ஒத்துழைப்பையும் என்னைவிட மூத்த விஞ்ஞானிகள்கூட எனக்கு தந்தார்கள்.
தந்துகொண்டிருக்கவும் செய்கிறார்கள். சவால்களை எதிர்கொள்ளவேண்டும். தோல்விகளில் இருந்து பாடங்களை கற்றுக்கொள்ளவும் தெரியவேண்டும். ஏன்என்றால் வெற்றி எப்போதும் கிடைத்துக்கொண்டிருப்பதல்ல!

அக்னி-3 ஏவியபோது முதல் 65 வினாடிகள் எல்லாம் சரியாக நடந்துகொண்டிருந்தது. முதல் கட்டத்தில் இறுதி நிமிடங்களில் பிரச்சினை ஏற்பட்டது. அப்போது பரிசோதனை கூடத்து விஞ்ஞானிகளின் நெஞ்சில் தீ பரவியதுபோல் இருந்தது. ஆனால் உடனே அந்த தோல்விக்கான காரணத்தை கண்டறிய முன்வந்தோம். தோல்விக்கான காரணத்தை கண்டறியும் நிபுணர் குழுவில் நானும் உறுப்பனராக இருந்தேன். ஏவுகணையில் எந்த பிரச்சினையும் இல்லை. ஏவுகணைக்கு வெளியே இருக்கும் சீதோஷ்ண கட்டுப்பாட்டு அமைப்பில்தான் பிரச்சினை இருந்தது. இந்த முறை எல்லாவற்றையும் சரியாக செய்து, வெற்றியை கொய்துவிட்டோம்.

இந்த துறை சவாலானது. ஆனால் நிறைய வாய்ப்புகள் கொண்டது. இங்கு ஆண், பெண் என்ற வித்தியாசத்திற்கு இடமில்லை. விஞ்ஞானி என்ற பொறுப்புதான் உள்ளது.

**அக்னி-5 திட்டத்தில் உங்கள் பணி என்ன?**



நான் மட்டும் என்பது சரியல்ல. அது ஒரு பெரிய குழுவின் வெற்றி. இப்போது அக்னி ஐந்தின் திட்ட இயக்குனராக இருந்தாலும், 24 வருடங்களாக டி.ஆர்.டி.ஓ.வில் விஞ்ஞானியாக இருந்தேன். அதனால் அக்னி ஏவுகணை திட்டங்களில் தொடக்கத்தில் இருந்தே என்னால் பணியாற்ற முடிந்தது. அக்னி கைடன்ஸ் சிஸ்டம் முதல் மெஷின் டிசைன் வரையுள்ள பொறுப்புகள் எனக்கு கிடைத்தன. அக்னி 1, 2, 3 போன்றவைகளில் அசோசியேட் ப்ராஜக்ட் டைரக்டராக இருந்தேன்..

**வீலர் தீவிற்கு முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமின் பெயரை சூட்ட இருப்பதாக கூறப்பட்டதே?**

அப்படி ஒரு செய்தியை கேள்விபட்டபோது நான் ஆனந்தத்தின் எல்லைக்கே சென்றேன். ஆனால் டாக்டர் அப்துல்கலாமின் பெயரை சூட்டுவது பற்றி அதிகாரபூர்வமான அறிவிப்பு எதுவும் வரவில்லை.

டி.ஆர்.டி.ஓ.வில் நான் வேலைக்கு சேர்ந்தபோது டாக்டர் அப்துல்கலாம் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு ஆய்வுக்கூடத்தின் இயக்குனராக இருந்தார். அவரது பேச்சிலும், செயலிலும் நிறைவும், நம்பிக்கையும் இருக்கும். உங்களால் இது முடியும் என்று மந்திரம் போல் நம்மிடம் அவர் கூறும்போது நாம் ஒரு புதுவித சக்தியை உணருவோம்..

**அம்மா குஞ்சம்மா மற்றும் பிறந்த ஆலப்புழை நினைவுகள் என்னென்ன?**

ஏவுகணையை பரிசோதிப்பதற்கு முன்பும் - பின்பும் நான் அம்மாவிடம் பேசினேன். அம்மா அங்குள்ள தேவாலயத்தில் ஏவுகணை வெற்றிக்காக பிரார்த்தனை செய்தார். கவுண்ட் டவுன் தொடங்கியதும், நான் 'கடவுளே..' என்று அழைத்தேன். அம்மா பிரார்த்தனை செய்த ஆலயத்தின் மாதா சொரூபம் என் மனக்கண் முன்னே தோன்றியது.

என்னால் வருடத்திற்கு ஒன்றிரண்டு முறைதான் பிறந்த ஊரான ஆலப்புழைக்கு வர முடிகிறது. கடந்த வருடம் என் அம்மாவின் 75 ஆம் பிறந்த நாளை கொண்டாட வந்தேன். எனக்கு கேரளத்து பசுமை ரொம்ப படிக்கும். ஐதராபாத்தில் நாங்கள் முதலில் வசித்த வீட்டின் சுற்றுப் பகுதியில் பப்பாளி, கொய்யா, வாழை எல்லாம் பயிரிட்டிருந்தேன். இப்போது புதிய குவார்ட்டர்ஸ்க்கு போக வேண்டியதாகி விட்டது. என்னுடன் பணிபுரியும் விஞ்ஞானிகளில் பலர், 'எப்போது எங்களை எல்லாம் ஆலப்புழை படகு வீட்டில் சுற்றிப்பார்க்க அழைத்து செல்வீர்கள்? என்று கேட்பார்கள். உண்மையை சொன்னால் அந்த படகுவீட்டில் பயணம் செய்யும் வாய்ப்பு இன்னும் எனக்கும், என் குடும்பத்திற்கும்கூட கிடைக்கவில்லை'

# 18 மாதங்களில் 35 கோடி கணனிகள் விண்டோஸ் 7 சிஸ்டத்துடன் விற்பனை

Windows 7

விண்டோஸ் 8 ஆப்பரேட்டிங் சிஸ்டம் நடப்பு ஆண்டின் பிற்பகுதியில் வர உள்ளது என்றாலும், விண்டோஸ் 7 ஆப்பரேட்டிங் சிஸ்டத்துடன், பல கோடி கணனிகள், பன்னாட்டளவில் விற்பனையாகும் என மைக்ரோசாப்ட் நிறுவனத் தலைமை நிர்வாகி பால்மர் தெரிவித்துள்ளார். விண்டோஸ் 7 மிக அருமையான ஒரு சிஸ்டமாகப் பெயர் எடுத்துள்ளதால், அனைவராலும் இது விரும்பப்படுகிறது என்றார். உலகின் பிரபலமான ஒரு சிஸ்டமாக விண்டோஸ்7 [illegible] எனவும் கூறினார்.

ஏற்கனவே, சென்ற 2011 ஆம் ஆண்டில், 18 மாதங்களில், 35 கோடி விண்டோஸ் 7 சிஸ்டத்துடன் கணனிகள் விற்பனையானதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் தொடர்ந்து இந்த சிஸ்டம் நல்ல வரவேற்பினையும் பயன்பாட்டினையும் பெற்று வருகிறது.

டேப்ளட் பிசிக்களின் பயன்பாடு பெருகி வரும் நேரத்திலும், விண்டோஸ் 7, தொடர்ந்து பலராலும் விரும்பப்பட்டு வருகிறது. டேப்ளட் பிசிக்கான சிஸ்டம் வழங்குவதில், மைக்ரோசாப்ட் அக்கறை செலுத்தவில்லை. ஆனால், விண்டோஸ் 8 சிஸ்டத்தின் டேப்ளட் பிசி பதிப்பு எப்படிப்பட்ட தாக்கத்தினை ஏற்படுத்தும் என்ற ஆர்வம் அனைவரிடமும் ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் விமானிகளின் சாதுரியத்தால் 48 பயணிகள் உயிர் தப்பினர்

அசாம் மாநிலம் சில்சாரில் இருந்து கிளம்பிய விமானத்தின் முன் சக்கரங்களில் ஒன்று கழன்று விழுந்ததையடுத்து விமானத்தை ஓட்டிய பெண் விமானிகள் இருவர் சாமர்த்திய மாக செயல்பட்டு பெரும் விபத்தை தவிர்த்துள்ளனர்.

அசாம் மாநிலம் சில்சாரில் உள்ள கும்பர்கிராம் விமான நிலையத்தில் இருந்து ஏர் இந்திய விமானம் ஒன்று 48 பயணிகள், 2 விமானிகள், 4 பணியாளர்களுடன் குவ ஹாத்திக்கு புறப்பட்டது. விமானம் கிளம்பியவுடனேயே அதன் முன் சக்கரங்களில் ஒன்று கழன்று விழுந்தது. இதைப் பார்த்த தரைக்கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள் இது குறித்து விமானி ஊர்மிளா மற்றும் துணை விமானி யஷு ஆகியோருக்கு தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து விமானம் அவசர அவசரமாக லோகோப ரியோ கோபநாத் பர்டோலாய் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது. விமானத்தை இறக்கும்போது தீப்படித்து விடாமல் இருக்க அதில் இருந்த எரிபொருள் தீரும் வரை விமானம் சற்று நேரம் வானில் வட்டமடித்துள்ளது. எரிபொருள் தீர்ந்த பிறகு ஊர்மிளா விமானத்தை லாவகரமாகத் தரையிறக்கினார். விமானியின் சாமர்த்தியத்தால் விபத்து தவிர்க்கப்பட்டு 48 பயணிகளின் உயிர்கள் காக்கப்பட்டுள்ளன. இந்த விவ காரம் குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. அத்தனை உயிர்களைக் காப்பாற்றிய விமானிகள் ஊர்மிளா, யஷுவை அசாம் முதல்வர் தருண் கோகாய் பாராட்டியுள்ளார். ஊர்மிளாவை போனில் தொடர்புகொண்டு பேசிய கோகாய் அவரை பாராட்டியதுடன் யஷுவுக்கும் தனது பாராட்டுக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

# ஏ-380 விமான வடிவில் ஒரு அசத்தலான உணவு விடுதி



உலகின் மிகப் பெரிய பயணிகள் விமானம் என்ற பெருமையை, 'ஏ-380' விமானம் பெற்றுள்ளது. இவ்விமானத்தில், ஆயிரம் பேர் வரை பயணிக்க முடியும். ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளில், இந்த விமானம் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த பிரமாண்ட விமானத்தில் பயணிப்பது, பயணிகளுக்கு, புதுவித அனுபவத்தைத் தரும்.



இதை மையமாக வைத்து, சீனாவின் சோங்கிங் நகரத்தில், ஒரு அசத்தலான உணவு விடுதியை கட்டியுள்ளனர். 'ஏ-380' விமானத்தின் உட்புறத் தோற்றம் எப்படி இருக்குமோ, அதேபோல் இந்த உணவு விடுதியை வடிவமைத்துள்ளனர். உணவு பரிமாறுபவர்கள் உட்பட, இந்த உணவு விடுதியில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களும், விமான சிப்பந்திகள் அணிந்திருப்பது போன்ற உடைகளை அணிந்துள்ளனர். விமானப் பணிப்பெண்கள் பேசுவது போல், கனிவாக பேசுவதற்கும், இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஜன்னல், இருக்கை, கீழே விரிக்கப்பட்டுள்ள தரைக் கம்பளம், விளக்கு வசதி என, இந்த உணவு விடுதியில் உள்ள அனைத்து வசதிகளுமே, 'ஏ-380' விமானத்தில் உள்ளது போன்றே, வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரே ஒரு வித்தியாசம் உண்டு. விமானத்தில் பயணிப்பவர்களுக்கு, குறிப்பட்ட சில உணவு வகைகள் மட்டுமே பரிமாறப்படும். இந்த உணவு விடுதியிலோ, சைனீஸ், வெஸ்ரன் உள்ளிட்ட அனைத்து உணவு வகைகளும், சுடச் சுட பரிமாறப்படுகின்றன. 'ஏ-380' விமானத்தின் உட்புறத் தோற்றம் எப்படி இருக்கும் எனக், காட்டுவதற்காக, மாணவர்களையும், சில பள்ளி நிர்வாகங்கள் அழைத்து வருவதால், இந்த உணவு விடுதியில், எப்போதுமே கூட்டம் நிரம்பி வழிகிறது.

# பொம்மையாக மாறிய ரஷ்ய இளம் பெண்

'பார்பி டோல்' என்ற பெயர், உலகம் முழுவதும் மிகவும் பிரபலம். அமெரிக்காவின் பிரபலமான பொம்மை தயாரிப்பு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட, 'பார்பி' என்ற பெண் உருவம் கொண்ட பொம்மை, கடந்த 50 ஆண்டுகளாக, பல்வேறு வடிவங்களில், பல்வேறு தோற்றங்களில், இன்னும் பரபரப்பாக விற்பனையாகி வருகிறது. மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த பல இளம் பெண்களை இந்த, 'பார்பி' பொம்மை கவர்ந்திருந்தது.

இந்த பொம்மையின் தோற்றத்தால் ஈர்க்கப்பட்ட ரஷ்யாவைச் சேர்ந்த, வலெரியா லக்யானோவா என்ற இளம் பெண், அந்த பொம்மை போலவே, தன்னை மாற்றிக் கொண்டுள்ளார். உணர்ச்சிகளற்ற முகம், பிளாஸ்டிக் தோற்றம், அகன்ற மார்பகம், மிக குறுகிய இடை, பிளாஸ்ரிக்கை போன்ற முடி அலங்காரம் என, அச்சு அசலாக, உண்மை யான பார்பி போலவே தோற்றமளிக்கிறார்.

இந்த தோற்றத்தை அடைவதற்காக, பல மாதங்கள் சிரமப்பட்டதாக தெரிவித்துள்ள அவர், தன் புகைப்படங்களை இணைய தளத்தில் வெளியிட்டுள்ளார். இந்த புகைப் படங்களை பார்த்த சிலர், பிளாஸ்டிக் சர்ஜரி மூலம், அந்த பெண், இந்த தோற்றத்தை அடைந்துள்ளதாக புகார் தெரிவித்து உள்ள னர். மற்றொரு தரப்பினரோ, இந்த பெண் வெளியிட்டுள்ள புகைப்படங்கள், ஜோடிக்கப்பட்டவையாக இருக்கலாம் என்றும் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.



# அமெரிக்காவில் கார் விற்பனையில் மோசடி



அமெரிக்காவில் விற்பனையாகும் 88 சதவீதம் பயன்படுத்தப்பட்ட கார்களின் வரலாற்று பின்னணி மிக மோசமானதாக இருப்பதாக சமீபத்திய ஆய்வில் கூறப்பட்டிருக்கிறது.

இங்கு விற்பனையாகும் பயன்படுத்திய கார்களின் வரலாற்று பின்னணி குறித்து அங்கிருந்து செயல்படும் பொருளாதார துறையை சேர்ந்த பிரபல நிறுவனம் ஒன்று ஆய்வு நடத்தியது. ஒரு லட்சம் வாடிக்கையாளர்களிடம் தங்களது யூஸ்ட் கார் குறித்த விபரங்களைக் கேட்டறிந்தது.

மேலும், பயன்படுத்திய கார் மார்க்கெட்டிலும் புகுந்து அலசி ஆராய்ந்தது. இதில், பல அதிர்ச்சியான தகவல்கள் கிடைத்தன. அமெரிக்காவில் விற்பனையாகும் 10 கார்களில் 9 கார்களின் வரலாறு மோசமானதாகவே இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில், 3 கார்கள் திருட்டுக் கார்கள் அல்லது பயன்படுத்த லாயக்கில்லாத ஓரங்கட்டப்பட்ட கார்கள் எனவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை விட, பெரும்பான்மையான கார்கள் கடனில் வாங்கப்பட்டுள்ளதாகவும், கடனை தீர்க்காமலேயே மோசடியாக அந்த யூஸ்டு கார்கள் வாடிக்கையாளர் தலையில் கட்டப்படுவதாகவும் அந்த ஆய்வு கூறுகிறது.

மேலும், விபத்தில் சிக்கிய கார்களும் உண்மை தகவல் மறைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகவும், இதில்தான், ஏராளமான வாடிக்கையாளர்கள் ஏமாந்துள்ளதாகவும் அந்த ஆய்வு கூறுகிறது. இதைவிட மற்றொரு விஷயம், அமெரிக்காவில் விற்பனை செய்யப்படும் 93 சதவீத பயன்படுத்திய ரினால்ட் க்ளியோஸ் கார்கள் மோசமான பின்னணி கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு அதிகம் விற்பனையாகும் கார் மாடல்களான ஃபோர்டு ஃபோகஸ் மற்றும் வோக்ஸ்வேகன் கோல்ப் ஆகிய கார்கள் பெரும்பாலும் கடன் தவணைகள் நிலுவையில் இருந்ததும் இந்த ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.

# கடலில் ஒரு கணக்கெடுப்பு

ஒரு நாட்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பு, வேலையற்றோர், விதவைகளின் கணக்கெடுப்பு என பல நடத்தப்படுகின்றன. காட்டில் விலங்குகளின் எண்ணிக்கை கணக்கெடுக்கப்படுகிறது.

ஆனால் தற்போது கடலிலும் கடல்வாழ் உயிரினங்களின் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. இந்த கணக்கெடுப்பில் இது வரை கண்டறியப்படாத 5 ஆயிரம் புதிய கடல் வாழ் உயிரினங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மொத்த கடல்வாழ் உயிரினங்களில், 80 சதவீதத்திற் கும் அதிகமான உயிரிணங்கள் ஆஸ்திரேலிய பகுதிகளில் உள்ளன.

இந்த கடல் வாழ் உயிரினங்கள் கணக்கெடுப்பில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர். 2 லட்சத்து 50 ஆயிரம் கடல்வாழ் விலங்குகள் மற்றும் தாவரங்கள் குறித்த தகவல்கள் இந்த கணக்கெடுப்பில் பதிவு செய்யப்பட்டு உள்ளன. ஆயிரக்கணக்கான ஆராய்ச்சிகளுக்கு கடலில் இன்னும் பல வாய்ப்புகள் உள்ளன என்பதை கடல்வாழ் உயிரினங்கள் கணக் கெடுப்பு காட்டுகிறது.


www.thefinance.lk

சிகரத்திலிருந்து பயன்களைப் பெறுங்கள்...

இலங்கையின் பாரிய அரச வங்கிகளின் துணையோடு இயங்கும் பதிவு செய்யப்பட்ட ஒரேயொரு நிதி நிறுவனமான த பினான்ஸிலிருந்து சிறந்த பயன்களை அனுபவியுங்கள்

தங்கக் கடன்களுக்கு அதிகூடிய முற்பணம் ரூ.51,000/- பவுண் ஒன்றுக்கு

எந்த வாகனத்துக்கும் ஒரு மணி நேரத்தில் பணம்

உங்களுக்கான சொந்த வீட்டைக் கட்டிக்கொள்ள சிறந்த ரியல் எஸ்டேட் காணித்துண்டுகள்

60 கிளைகள்

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள கிளையை நாடுங்கள்



த பினான்ஸ் கம்பனி பீஎல்சீ

பலத்துடனும் ஸ்திரத்தன்மையுடனுமான ஒரு புதிய இலக்கு

1940 இல் நிறுவப்பட்டது

கம்பனி பதிவு இலக்கம் PQ-1

நிலையான வைப்பு • சேமிப்பு வைப்புகள் • வாடகைக் கொள்வனவு • தங்கக் கடன்கள் • விரைவுக் கடன்கள் • சொத்துக்கள் கொள்வனவும் விற்பனையும் • சொத்து அபிவிருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2012, ஜூன் 17 ஆம் திகதி வெளியிடப்பட்டது.